விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 15 ஞாயிற்றுக்கிழமை (28.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 099

## விஸ்வரூபம் எடுத்த
# திருநெல்வேலி சந்தை கொத்தணி
## நேற்று மட்டும் 127 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி சந்தை கொரோனாக் கொத்தணி விஸ்வரூபம் எடுத்துள்ளது. திருநெல்வேலி பொதுச் சந்தை வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் 127 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா வைரவபுளியங்குளத்தில்
## தாமரைப் பூ பறிக்கச் சென்ற ஆசிரியர் சடலமாக மீட்பு



(வவுனியா)

தாமரைப் பூ பறிக்கச்சென்ற ஆசிரியர் ஒருவர் வவுனியா வைரவபுளியங்குளம் குளப் பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் நேற்றைய 15

## யாழ்.நகர வர்த்தகர்களுக்கு இன்று பிசிஆர் பரிசோதனை
### அனைவரும் தவறாது பரிசோதனை மேற்கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி அறிவிப்பு

03ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சியில் 45 நாட்களேயான சிசு உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் 45 நாட்களேயான சிசு ஒன்று உயிரிழந்துள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் இச்சம்பவம் நேற்று முன் 15

# யாழில் ஒரே நாளில் 143 பேருக்கு கொரோனா
## யாழ்.மாவட்டத்தில் கண்டறியப்பட்ட அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று மேலும் 143 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் திருநெல்வேலி பொதுச் சந்தைத் தொகுதி வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் 127 பேர் அடங்குகின்றனர் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

### எரிபொருள் விலை அதிகரிக்கும்?

(கொழும்பு)

அரசாங்கம் சிரமங்களை எதிர்கொண்டாலும்எரிபொருள் அல்லது உள்நாட்டு எரிவாயுவின் விலை அதிகரிக்கும் என 15

### எழுமாற்று பரிசோதனை
## வவுனியாவில் 6 பேருக்கு கொரோனாத் தொற்று

(வவுனியா)

வவுனியாவில் 6 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்களிடம் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட 15

## ஐ.நா தீர்மானங்களை அச்சமின்றி எதிர்கொள்வோம்
### ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் இறையாண்மையை பாதுகாத்துக் கொண்டு ஜெனிவா மனித உரிமை பேரவையின் தீர்மானங்களுக்கு அச்சமின்றி முகங்கொடுக்க அரசாங்கம் தயாராக 15

### கொரோனாத் தடுப்பு செயலணி
## யாழில் இன்று காலை அவசரமாக கூடுகின்றது
### திருநெல்வேலி கடைகளும் மூடப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிக அளவில் அடையாளம் காணப்பட்டு வருகின்ற நிலையில் 15

### ஏ9 வீதியில் விபத்து
## இரு பெண்கள் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் - கண்டி ஏ9 வீதியின் திறப்பனைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர். 15

### யாழ்.போதனாவில்
## தொற்றாளர்கள் எண்ணிக்கை 30 ஆக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று கொரோனாத் தொற்றுக்குள்ளான 11 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் 19 பேர் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்னை மடியில் 07.05.1951

இறைவன் அடியில் 28.02.2021

கடந்த 28.02.2021 (ஞாயிற்றுக்கிழமை) சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் வைரமுத்து ஜெயசந்திரா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (30.03.2021) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் ஊறணி மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(6325)

சோடாக்கடை ஒழுங்கை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்

# கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில்
## மேலும் 14 பேர் விடுவிப்பு

(திருகோணமலை)

இலங்கை கடற்பரப்பிற்குள் சட்ட விரோதமாக மீன் பிடிப்பில் ஈடுபட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் மேலும் 14 பேர் விடு தலை செய்யப்பட் டுள்ளார்கள்.

அதற்கமைய திருகோண மலையில் கைது செய்யப் பட்ட 40 மீனவர்கள் நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை விடு தலை செய்யப்பட்டார்கள்.(ம)

# மணமகள் தேவை

உத்தர நட்சத்திரம் 6 ஆம் இடத்தில் சூரியன் செவ்வாய், 39 வயது அரச நியமன பட்டதாரி மணமகனுக்கு குற்றம் இல்லாத சூரியன் செவ்வாய் உள்ள பட்டதாரியோ அல்லது க.பொ.த உயர்தரம்வரை கல்வி கற்ற மணமகள் தேவை.

(6369)

077 327 6253

# பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் இலத்திரனியல்சார் இயந்திரவியல் தொழில்நுட்பசேவையினை வழங்கும் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு தொழிநுட்பவியலார்கள் (ஆண்கள்) வயதெல்லை 18-25 வேண்டப்படுகின்றனர்.

**தொழில்நுட்பவியலாளர்கள்** :- இலத்திரனியல், இயந்திரவியல் துறையில் ஆர்வமும் விரைவான செயற்திறனும் நேர்மையும் கடமையுணர்வும் நற்பண்புகளும் இருத்தல் வேண்டும். **முன்னனுபவம் தேவையில்லை.**

(6370)

தொடர்புகளுக்கு
077 361 1041

# மரண அறிவித்தல்



## பரதன் இராஜநாயகம்
(முன்னாள் நிதர்சனம் பொறுப்பாளர்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பரதன் இராஜநாயகம் (முன்னாள் நிதர்சனம் பொறுப்பாளர்) கடந்த (18.03.2021) வியாழக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜநாயகம் - சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற லிங்கநாதபிள்ளை - மகாலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும் வினோதினியின் (நடன, சங்கீத ஆசிரியை) அன்புக் கணவரும் பார்க்கவி, அபிமன்யூ ஆகியோரின் அன்புத் தந்தையும் பாரதி, சுரபி ஆகியோரின் அன்புச் சகோதரனும் துஷ்யந்தன், தாக்ஷாயிணி, கேதீஸ்வரன், சிவராஜா, தேவகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தினி, சற்குணம், சுஜீந்திரா ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வுகள் எதிர்வரும் 31.03.2021 (புதன்கிழமை) அன்று லண்டன் நேரப்படி முற்பகல் 10.00 மணி முதல் 12.00 மணி வரை இடம்பெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1833)

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
பாரதி (சகோதரன்) 0094 77 730 4010
கேதீஸ்வரன் (மைத்துனர்) 0094 77 633 4402

# துயர் சுமந்த திங்கள் ஒன்று!



## அமரர் *திருமதி* பங்கஜதேவி சோமாஸ்கந்தன்

*நித்தம் அருகிருந்து நிமிர்வை எமக்கு ஈந்து*
*சித்தம் சிவனடியே வைத்து*
*சீரிய சைவ வாழ்வில்*
*பேரரும் பேற்றினை எய்திப் பின் – எம்*
*தெய்வம் சிவன் கழல்*
*சேர்ந்து இன்றோர் திங்கள் ஆனதோ!*

கடந்த 26.02.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கின் பிரிவுத் துயரின்போது உடனிருந்து உதவியவர்களுக்கும் இறுதிக் கிரியையின்போது கனத்த நெஞ்சத்துடன் கலந்து கொண்டோருக்கும் அன்னாரின் வாழ்வியல் தடங்களை நினைவூட்டி இரங்கலுரை வழங்கியோருக்கும் மேலும் தம் மனத்துயரை மலர் வளையம் மற்றும் கண்ணீர் அஞ்சலியினூடு வெளிப்படுத்தி எமக்கு ஆறுதல் தெரிவித்தோருக்கும் அன்னாரின் இறுதிப் பயணத்தில் பங்கேற்றோருக்கும் இன்றுவரை சகல வழிகளிலும் எம்மை ஆற்றுப்படுத்திய அனைத்து அன்புள்ளங்களிற்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*குறிப்பு* :- அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசன நிகழ்வு தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக காலந்தாழ்த்தியே நிகழ்த்தப்பட வேண்டியுள்ளதனால் அது தொடர்பில் பின்னர் அறியத்தரப்படும்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(6375)

உங்கள் நினைவுகளுடன்
அ. சோமாஸ்கந்தன் (கணவர்)
சோ. சுதாகர் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணையை இலங்கை முன்னெடுக்காவிடில் சர்வதேச பொறிமுறை செயற்படத் தொடங்கிவிடும்

## கலாநிதி தயான் ஜயதிலக எச்சரிக்கை

(கொழும்பு)

**வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களின் பங்குபற்றலுடன் விசேட நீதிமன்றத்தை நிறுவி உள்ளக விசாரணையை இலங்கை முன்னெடுக் காவிட்டால் சர்வதேச பொறிமுறை செயற்படத் தொடங்கிவிடும். அதனைத் தடுத்து நிறுத்த முடியாது என ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும் சிரேஷ்ட இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.**



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பான தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்துவரும் அமர்வுகளில் என்ன நடக்கும் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை விவகாரம் தொடர்பில் 6 மாதங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்ய ப்படும். 2022 செப்டெம்பர் வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் திரட்டப்படும் ஆவணங்கள் எல்லாம் 2022 செப்டெம்பருக்குப் பின்னர் உலக நாடுகளிலுள்ள நீதிமன்றங்களுக்கு அனுப்பப்படும். அவ்வாறு நடைபெற்றால் குறைந்த பட்சம் தீர்மானத்தை ஆதரித்த 22 நாடுகளிலாவது வழக்குத் தொடுக்கப்படும்.இவ்வாறு வழக்குத் தொடுத்தாலும் எதுவும் செய்ய முடியாது என இலங்கை அரசு சவால் விடுக்கும் பட்சத்தில் அடுத்தகட்ட நடவடிக்கையாக முதலீடு, சுற்றுலாத்துறை, வர்த்தகம் உள்ளிட்ட விடயங்களில் இறுக்கமான போக்கு கடைப்பிடிக்கப்படும்.

எனினும், இலங்கைக்கு இன்னுமொரு வாய்ப்பு எஞ்சியுள்ளது. 2022 செப்டெம்பர் மாதத்துக்கு முன்னர் சேர். டெஸ்மன் டி சில்வாவாலும் (பரணகம ஆணைக்குழு), அதற்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவாலும் முன் வைக்கப்பட்ட பரிந்துரைக்க மைய நம்பகமான விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

தங்களுக்கு விசுவாசமான நீதிபதிகளை நியமிக்காமல், உலகம் ஏற்றுக் கொள்கின்றவர்களை அல்லது வெளிநாடு களில் பணிபுரியும் இலங்கை நீதிபதிகளை உள்ளடக்கிய வகையில் விசேட நீதிமன்றமொன்றை நிறுவி, விசாரணைகளை முன்னெடுத்துத் தவறிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும்.

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் அழைக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் சர்வதேச பொறி முறை செயற்பட ஆரம்பித்து விடும். இலங்கை விவகாரம் ஏற்கனவே சர்வதேச மயப்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் பொறிமுறை செயற்படவில்லை. இனி செயற்படத் தொடங்கினால் அதனை நிறுத்த முடியாது" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

# இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்த நிறுவனங்களுக்கு சீல்

## நுகர்வோர் அதிகாரசபை நடவடிக்கை

(கொழும்பு)

புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்த மூன்று நிறுவனங்களை சீல் வைப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த தேங்காய் எண்ணெய் நுகர்வுக்கு பொருத்தமற்றதென மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து, அவற்றை மீள் ஏற்றுமதி செய்யும் வரையில் அந்த மூன்று நிறுவனங்களுக்கும் சீல் வைத்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது. (நி-4)

# கொழும்பு செல்லும் பயணிகளுக்கு பொலிஸாரின் எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரத்தின் சனநெரிசல் மிக்க பகுதிகளில் போதைக்கு அடிமையானவர்கள் சுற்றித் திரிவதால் பயணிகள் கூடுதல் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று புறக்கோட்டை பொலிஸார் எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

கொழும்பு நகரில் நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா மதிப்பு மிக்க பொருட்கள் திருடிய சம்பவங்கள் குறித்த பல முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

# வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு இலவச தனிமைப்படுத்தல் வசதிகள்

(கொழும்பு)

நாடு திரும்புவதற்கு கட்டணம் செலுத்த முடியாதுள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்துள்ள நிலையில் நாடு திரும்பும் பணியாளர்களை இலவசமாக தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளு க்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இதற்காக குறித்த பணியகத்தின் ஊடாக 14 விருந்தகங் களுக்கு பணம் செலுத்தப்பட்டு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் நிறைவடைந்து அல்லது வேலையின்றி திரும்பு கின்றவர்கள் முன்னுரிமை அடிப்படையில் நாட்டுக்கு அழை த்து வரப்பட்டு இவ்வாறு தனிமைப்படுத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# யாழ். நகர வர்த்தகர்களுக்கு இன்று பி.சி.ஆர்.பரிசோதனை

## அனைவரையும் பரிசோதனை மேற்கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)



அதிகரித்த Covid-19 தொற்று காரணமாக யாழ். நகரத்தின் ஒரு பகுதி வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இவ்வாறு மூடப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்குமான முதலாவது (PCR) பி.சி. ஆர். பரிசோதனை இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். நவீன சந்தைப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே Covid-19 காரணமாக தற்காலிகமாக மூடப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள் அனைவரையும் வருகை தந்து PCR பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ரி.பாலமுரளி அறிவித்துள்ளார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்ஸ்டோ, ஸ்டோக்ஸ் அதிரடி இந்தியாவை வீழ்த்தியது இங்கிலாந்து

இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 2 ஆவது ஒரு நாள் போட்டி புனேயில் நேற்று முன்தினம் பகல்-இரவு ஆட்டமாக தொடங்கியது. இங்கிலாந்து அணி கப்டன் ஜோஸ் பட்லர் டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி 336 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக கே.எல். ராகுல் 108 ரன்களும் ரிஷப் பண்ட் 77 ரன்களும் எடுத்தனர்.

இந்நிலையில் 337 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது. 43.3 ஓவரில் 337 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணியை எளிதாக வீழ்த்தியது. இங்கிலாந்து அணியின் ஜானி பேர்ஸ்டோ மற்றும் ஸ்டோக்சின் அதிரடியான ஆட்டமே இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு காரணமாகும். அதிகபட்சமாக ஜேசன் ராய் 55, ஜானி பேர்ஸ்டோ 124, ஸ்டோக்ஸ் 99 ரன்களும் எடுத்தனர்.



இங்கிலாந்து அணியின் மொத்த சிக்சர் எண்ணிக்கை 20 ஆகும். அதில் ஜானி பேர்ஸ்டோ, ஸ்டோக்ஸ் ஆகிய இருவரும் 17 சிக்சர்களை அடித்துள்ளனர்.

இந்நிலையில் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை இரு அணிகளும் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளனர். (4)

## டோக்கியோ ஒலிம்பிக்கின் ஆரம்ப நிகழ்வில் பிடனை அழைக்கவுள்ள ஜப்பான்



இவ்வருடம் டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனுக்கு அழைப்பு விடுக்க எதிர்பார்த்துள்ளதாக ஜப்பான் பிரதமர் யோஷிஹைட் சுகா தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஜப்பான் பிரதமரின் அமெரிக்காவுக்கான விஜயத்தின்போது அவர் இந்த அழைப்பினை பிடனுக்கு விடுக்கவுள்ளதாக சுகா சட்டமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கை நடத்தும் யோசனையை அனைத்து ஜி-7 உறுப்பு நாடுகளும் ஆதரித்ததாகவும் அவர் கூறினார்.

2020 டோக்கியோ ஒலிம்பிக்கை கடந்த கோடையில் ஜப்பான் நடத்தவிருந்தது. ஆனால் கொரோனாத் தொற்று நோய் காரணமாக அது இந்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி எதிர்வரும் ஜூலை 23 முதல் ஓகஸ்ட் 8 வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும்.

இதனிடையே இம்மாதத் தொடக்கத்தில், டோக்கியோ ஒலிம்பிக்கின் அமைப்பாளர்கள் வெளிநாட்டு பார்வையாளர்களை விளையாட்டுகளில் அனுமதிக்க மாட்டார்கள் என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## சச்சின் டெண்டுல்கருக்கு கொரோனா தொற்று

(மும்பை)

கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கருக்கு கொரோனா அறிகுறிகள் இருந்த நிலையில் அவர் மருத்துவமனையில் சென்று பரிசோதனை செய்து கொண்டார்.

பரிசோதனை முடிவில் சச்சின் டெண்டுல்கருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளின் படி, அவர் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.



அதேபோல் சச்சின் குடும்பத்தினருக்கு பரிசோதனை செய்ததில் அவர்கள் யாருக்கும் கொரோனா பாதிப்பு இல்லை என தெரியவந்துள்ளது. (4)

# இலங்கை அணியை சாவதேச தரவரிசையில் முதலிடத்திற்கு கொண்டு வருவதே எனது நோக்கம்-டோம் மூடி



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பணிப்பாளராக இருக்கும் காலப் பகுதியில் இலங்கை அணியை சர்வதேச கிரிக்கெட் அணி தரவரிசையில் முதலிடத்திற்கு கொண்டு வருவதே எனது நோக்கம் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், 2007 ஆம் ஆண்டு ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியை சிறப்பாக வழிநடத்திய தலைமை பயிற்சியாளருமான டோம் மூடி தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பணிப்பாளராக மூன்று ஆண்டுகால ஒப்பந்தத்தில் நியமிக்கப்பட்டுள்ள மூடி, கடந்த 25 ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற தனது தொடக்க ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த தகவல்களை வெளியிட்டார்.

இதன்போது மேலும் கருத்துத்தெரிவித்த அவர்,

இலங்கை கிரிக்கெட்டைப் பற்றி சிறிது மதிப்பாய்வு செய்ய வேண்டும். தலைமை பயிற்சியாளராக சர்வதேச அளவில் நான் பெற்ற பல்வேறு அனுபவங்களைத் தொடர தற்சமயம் எதிர்பார்க்கிறேன்.

எதிர்காலத்தில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்ய சிறிது நேரம் எடுக்கும். ஆனால் கிரிக்கெட் நிர்வாகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நான் நன்கு தயாராக இருக்கிறேன்.

இந்த முழு செயல் முறையின் மூலமும் கட்டமைப்பை சரியாகப் பெற முடிந்தால், நாங்கள் இழந்த இடத்தை மீண்டும் பெறுவோம் என்றும் அவர் கூறினார்.

கிரிக்கெட் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் தலைவர் அரவிந்த டி சில்வா, டோம் மூடியை இலங்கை கிரிக்கெட்டின் பணிப்பாளராக நியமித்ததன் மூலம், இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டு ஒரு புகழ்பெற்ற காலத்திற்குத் திரும்பும் என்று தான் நம்புவதாகக் கூறினார்.

மூடியுடனான எங்கள் குழு இலங்கை கிரிக்கெட்டுடன் நெருக்கமாக செயற்படுகிறது. நாம் விளையாட்டின் ஒவ்வொரு அம்சத்திலும், குறிப்பாக உள்ளூர் கிரிக்கெட் கட்டமைப்பில் கவனம் செலுத்துவோம்,

மேலும் சிக்கல்கள் இருந்தால் அதை சரியான முறையாக எவ்வாறு சீர்திருத்துவது என்பது பற்றி விவாதிப்போம். பாடசாலை கிரிக்கெட்டுக்கு வழி வகுத்தல், தற்போதைய வீரர்களின் ஒப்பந்தங்கள், ஆதரவு ஊழியர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் பணியாளர்கள், அத்துடன் பெண்கள் கிரிக்கெட்டின் வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. அனைத்து தரப்பினரின் முன் ஒப்புதலுக்குப் பிறகு அதை செயற்படுத்த நம்புகிறோம்.

நாங்கள் (முத்தையா முரளிதரன்) மற்றும் (குமார் சங்கக்கார) மற்றும் (மஹேல ஜெயவர்தன) ஆகியோருடன் பல விவாதங்களை நடத்தினோம்.

விளையாட்டின் முன்னேற்றத்திற்காக குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டத்திற்காக உடனடியாக தொடங்கப்பட்ட ஒரு திட்டத்திற்கு இதன்போது முன்னுரிமை அளித்தோம்.

முதல் பிரிவு போட்டியின் கட்டமைப்பு மற்றும் இளைஞர்களின் வளர்ச்சி போன்ற உள்ளூர் கட்டமைப்பில் திருத்தங்களைச் செய்வோம் என மேலும் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு சிரார்த்த திதி
# நினைவஞ்சலி

அமரர்.திருமதி.

## கோபாலகிருஷ்ணன் திகம்பரேஸ்வரி

திதி: 28.03.2021 பங்குனி பூரணை

நயினை மண்ணில்
22 - 11 - 1948



அம்பாளின் அடியில்
21 - 03 - 2019

அன்ன பூரணித் தாயார் செந்திருவை ஒத்த திகம்பரேஸ்வரி (வசனநடை கவிதை)

அலைகடல் தாலாட்டி அடி வருட நித்தம்
அரவம் மலர் கொண்டு அன்னை தனைப் பூஜிக்கும்
கர்ண பரம்பரைக் கதையை காட்சிப்படுத்துவது போல்
பர்ணம் படமெடுத்து மூலஸ்தானத் தூபிதனில்
நாகம்மை சிற்பமதை நன்கு சுற்றி வலஞ்சுழியாய்
காட்சி கண்டோம் நிஜமாக கைகூப்பி வணங்கி நின்றோம்.

இத்தகைய சிறப்புமிகு எங்கள் நயினையிலே
வேளாண் குடிப் பிறந்த திகம்பரேஸ்வரி மயிலாள்
பெருவணிகத் துறையினிலே பேர் பெற்ற வணிகனவன்
ஆன்மிகப் பாதையிலே அர்ப்பணிப்புடன் நல்லூர்
பக்த யாத்திரை தனிலே பக்தர் குழாம் சூழ்ந்துவர
தீராத ஆர்வமுடன் சேர்ந்திலங்கு சீராளன்
கோபாலகிருஷ்ணன் கரம் பற்றி குதூகலித்தே இல்லறத்தில்
கோலக்கிளி மொழியார் மூவர் தமைப் பயந்து
ஆண் மகவு இல்லாத குறையை மறந்து மக்கள்
சீலம் தனை ஊக்கி சிறந்த கல்வி தான் புகட்டி
காலம் துணையாக தமது புதல்வியற்கு
ஏற்ற துணை தேடி இல்லறத்தில் இணைய வைத்தார்.

சோதரியாள் இறை பதத்தை நாடிடவும் அவள் பெற்ற
சீரிளமைப் பாலகரை தான் பெற்ற மதலைகளாய்
கோழி சிறகிடுக்கில் குஞ்சுகளைக் காப்பது போல்
வளர்த்தாள் அவர் மகிழ்ச்சியுடன் வாழ வைத்தார்
இப்படியாக இருக்கின்ற காலமதில்
இல்லாளும் நாதனுமாய் எப்போதும் மகிழ்ச்சியுடன்
செல்விருந்து ஒம்பி வருவிருந்து பார்த்திருப்பார்
திகம்பரேஸ்வரி தனையே செல்லப் பெயர் சூட்டி
சிதம்பரம் எனவே எல்லோரும் அழைத்திடுவார்.
வதனத்தில் மாறாத புன்சிரிப்புக் கீடில்லை
நோயாளர் மருத்துவமனை நோக்கிவரின் இவரின்
சீரான உபசரிப்பில் தேறிச் சுகம் பெறுவர்
உற்றார்,உறவினர்க்கு உதவுவதில் முன்னிற்பார்
நல்லூரான் உற்சவம் தரிசிக்க வருவோர்க்கு
தங்குமடம் சிதம்பரத்தின் இல்லம் தான் காணீரோ!
எல்லா நிகழ்வும் இனிதே நடக்கையிலே
தொல்லை தரும் நோயால் துவண்டு துயர் உற்று நின்றாள்
நாடாத வைத்தியரில்லை நாளாக நாளாக
முகச்சிரிப்பதுவோ முல்லை வதனமதோ
எல்லாம் ஒடுங்கி உற்றார், உறவுகளும்
நிழல் குடையாய் நின்றாளே என்னே கொடுமை
என ஏங்கிப் பரிதவித்தார்.

கரமிணைந்த கணவர் கலங்கி ஒருபுறமும்
கருத்தாய் வளர்த்த மக்கள் பெறாமக்கள் அனைவருமே
சோகத்தை துவண்டு தேம்பி அழுது நின்றார்
வல்லான் வகுத்த வகையன்றி வழியில்லை
செந்திருவை நிகர்த்த சிதம்பரேஸ்வரி தாயார்
சிவனடியே சிந்திக்கும் திருவடியைச் சேர்ந்து விட்டாள்.
ஆறாத துயரை அகற்றி அவள் பணியை
மனதால் நினைத்திருப்போம் அவள் ஆத்மா சாந்தி பெற.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆக்கம்:-
கலைவாருதி, யாழ்முத்து பசிக்கவி சி.பரராசசிங்கம்.

எமக்கு தாயாகி நன்னெறி ஒழுகச் செய்து வையத்துள் வாழ்வாங்கு வாழ
வழிவகுத்த அன்னையே உங்களை நாம் என்றென்றும் மறவோம் அம்மா.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

30/4, சீனிவாசகம் வீதி,
யாழ்ப்பாணம்.
தில்லைவனப்பதி, நயினாதீவு 5 (6351) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அமரர்.கார்த்திகேசு சுப்பிரமணியம்



சத்திரந்தை அல்வாய் வடக்கு, திக்கத்தை பிறப்பிடமாகவும் இந்திரம்மன் கோவிலடி, துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கார்த்திகேசு சுப்பிரமணியம் அவர்கள் **26.03.2021** நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு,திருமதி.கார்த்திகேசு - வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு, திருமதி. கணபதிப்பிள்ளை - செல்லம்மாவின் அன்பு மருமகனும், சகுந்தலா அவர்களின் பாசமிகு கணவரும், திருவேணி (ஆசிரியர் யா/மத்திய கல்லூரி), கலைவாணி (லண்டன்), இந்திரதாஸ் (ஆசிரியர் யா/ஊரெழு கணேசா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு தந்தையாரும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புச் சகோதரனும், தவனேசன் (ஆசிரியர் யா/ஹாட்லி கல்லூரி), குருபரன் (லண்டன்), மோகனபிரியா (ஆசிரியர் யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயா, ஆரணி, அஸ்மிகா, கம்சனா, தக்சயன், தக்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28. 03. 2021 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கியான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்திர அம்மன் கோவிலடி,
துன்னாலை, கரவெட்டி.
தொடர்பு :- 077 344 9451. (C-1829)

தகவல்:-
குடும்பத்தினர்.

# 1ம் ஆண்டுத்திவச அழைப்பு



அமரர்.திருமதி. **தர்மஜெகநாதன் சிவகுமாரி**

அன்பென்ற சொல்லின் இலக்கணமாய் இருந்தீர்
தவறைத் தண்டித்து எம்மை நல்வழிப்படுத்தினீர்
எம்மைத் தவிக்க விட்டுவிட்டு எங்கே அம்மா சென்றீர்?


கடந்த 08.04.2021 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர்.**தர்மஜெகநாதன் சிவகுமாரி** அவர்களின் முதலாம் ஆண்டுத் திவச நிகழ்வுகள் 28.03.2021 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புளியடி வைரவர் கோவிலடி,
உடுவில் தெற்கு, சுன்னாகம். (6354)

குடும்பத்தினர்.
T.P:- 021 225 5889, 077 644 1604

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதம்பிரான் பொங்கல் விழாவிற்கு வெளிமாவட்டத்தினருக்கு முற்றாகத் தடை



(முறிகண்டி)

**கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவிற்கு வெளிமாவட்டத்திலிருந்து வருகை தரும் பக்தர்களிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்டம் உள்ளிட்ட பல பகுதிகளில் கொவிட்-19 பரவல் அதிகரித்து காணப்படும் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்த கண்டாவளை பிரதேச செயலகம் இவ் விடயத்தினை நேற்று அறிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் கொவிட்-19 தொற்று அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த நிலையில் எமது பிரதேசத்திலுள்ள பிரசித்தி பெற்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவிற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.

அரசாங்க அதிபரின் பணிப்பிற்கு அமைவாக இன்றைய தினம் குறித்த பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில் அவசர அவசரமான தீர்மானங்கள் சிலவற்றை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக கோவில் நிர்வாகத்தினர் மற்றும் பிரதேச செயலகத்தினர் கலந்துரையாடி சில தீர்மானங்களை நேற்று எடுத்துள்ளனர்.

அதற்கு அமைவாக குறித்த பொங்கல் நிகழ்விற்கு வெளி மாவட்டங்களிலிருந்து எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் 100 பேருக்குக் குறைவானவர்களே பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்ள முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கோவில் நிர்வாகத்தினர் பொறுப்புடன் செயற்படுவதாக வாக்குறுதி அளித்துள்ளதாகவும் அறிவுறுத்தலிற்கு அமைவாக பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் காணப்படும் கொவிட்-19 பரவலைக் கருத்தில் கொண்டு பொதுமக்கள் குறித்த ஆலய பொங்கல் விழாவில் கலந்து கொள்வதை தவிர்க்குமாறும், பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். (5-4-100)

# இளைஞர்களை சரியான வழியில் நடத்தி தன்னிறைவு அடைய வேண்டும்

(சாவகச்சேரி)

**இளைய சமுதாயத்தை முன்னிறுத்தி வழிநடத்துங்கள். அதுவே எதிர்கால சமூகத்திற்கு ஆரோக்கியமானது என** சாவகச்சேரி நகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி மதுவன் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற ஆண்டு விழா நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைஞர்கள் போதைவஸ்திற்கும் மதுவிற்கும் கேளிக்கை கொண்டாட்டங்களிற்கும் அடிமையாகின்றனர் எனப் பலரும் மேடைகளில் கூறி வருகின்றனர். இளைஞர்கள் தனித்துவமானவர்கள்.

அந்தத் தனித்துவத்தை நாங்கள் எப்படி பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதில் தான் எமது பிரதேசத்தினதும் இளைஞர்களினதும் எதிர்காலம் தங்கியுள்ளது. இளைஞர்கள் தான் எமது சொத்து, பொக்கிஷம் அனைத்தும்.

இளைஞர்கள் அங்கீகாரத்திற்காக ஏங்குபவர்கள். அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்கினால் எதிர்காலத்தில் சிறந்த முறையில் பயணிக்கலாம். எங்கள் பிரதேசம்,மாவட்டம், நாடு அனைத்தும் தன்னிறைவு நோக்கிப் பயணிக்க வேண்டும் என அனைவரும் விரும்புகிறோம்.

தென்மராட்சியில் கடல்வளம், வயல், காடு என அனைத்து வளங்களும் உள்ளன. இலங்கையில் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய வனமான குருவிக்காடு தென்மராட்சியில் உள்ளது.

வளங்கள் இருந்தும் அதனைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல் இல்லாதவர்களாக நாங்கள் உள்ளோம். இப்பிரதேசம் தன்னிறைவு அடைய வேண்டுமானால் இளைஞர்களை நாங்கள் முன்னிறுத்தி அவர்களை சரியாக வழிநடத்த வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-4-30)

# வைத்தியசாலை தாதியர்கள் இருவருக்குத் தொற்று

(நெளுக்குளம்)

வவுனியா வைத்தியசாலையில் கடமைபுரியும் தாதிய உத்தியோகத்தர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் கடமைபுரியும் தாதி ஒருவருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

பின்னர் அவருடன் நெருங்கிப்பழகிய மற்றொரு தாதிக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் குறித்த இருவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனையினை முன்னெடுப்பதற்காக மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த தாதியர்களுடன் தொடர்புகளை பேணிய சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இருவரையும் கிளிநொச்சி மற்றும் கொழும்பில் அமைந்துள்ள கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (5-4-250-299)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

ஏழாலை தெற்கு பிறட்றின் கழகம் நடத்தும் இரத்ததான முகாம் இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பிறட்றின் கழக கரப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் கலந்து கொண்டு இரத்ததானப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# வரணிப்பகுதியில் மாடுகள் திருட்டு

(வரணி)

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட வரணி வடக்குப் பகுதியில் மேய்ச்சலுக்காக விடப்பட்ட பசுமாடு திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தினமும் மேய்ச்சலுக்காக சென்று வரும் பசுமாடானது இரண்டு தினங்களாக வராமையால் உரிமையாளர் இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

அண்மைக்காலமாக வரணிப் பகுதியில் மாடுகள் மேய்ச்சலுக்காகச் செல்லும் போது திருடப்பட்டு இறைச்சியாக்கப் படுகின்ற சம்பவங்கள் இடம் பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (5-4-103)

# அங்குரார்ப்பண கூட்டம்

(குப்பிழான்)

வயாவிளான் றோ.க.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

எனவே, இந்தக் கூட்டத்தில் பாடசாலையின் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் என்.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (5-4-18)



தெல்லிப்பழை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்றுச் சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:- ரவிசாந்)




யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தலைமையில் ஆற்றல் அமைப்பால் முன்னெடுக்கப்பட்டுவரும் "சமூக பணி ஒன்று" வேலைத்திட்டத்தின் அங்கமாக முல்லைத்தீவு உண்ணாப்புலவு சிறுவர் பூங்கா வளாகம் நேற்று சிரமதானம் செய்யப்பட்டது. (படம்:- தவசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துக

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண



(கொழும்பு)

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும். ஜெனிவா விவகாரத்தில் மாகாண சபைத் தேர்தல் விவகாரம் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேசம் தலையிட முடியாது என குறிப்பிட முடியாது. ஏனெனில் இலங்கை ஜனநாயக கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசத்துடன் ஒன்றிணைந்துள்ளது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை இலங்கையின் இராஜதந்திர உறவும், இலங்கை மீது சர்வதேசம் கொண்டுள்ள பார்வை குறித்தும் அதிகம் ஆராய நேரிட்டுள்ளது.

இலங்கைக்கு ஆதரவாக 11 நாடுகள் மாத்திரமே வாக்களித்துள்ளன. கடந்த காலங்களில் இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்ட ஆசிய நாடுகள் மத்திய நிலை வகித்துள்ளன. இவற்றில் இந்தியா, ஜப்பான் ஆகிய நட்பு நாடுகளை பிரதானமாக குறிப்பிட வேண்டும்.

மத்திய நிலை வகித்த நாடுகள் இலங்கைக்கு சார்பாக செயற்பட்டுள்ளது என கருத முடியாது. 14 நாடுகள் இலங்கை விவகாரம் தமக்கு தேவையற்றது என ஒதுங்கியுள்ளன.

இவ்விடயம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். ஜெனிவா விவகாரத்தில் அரசாங்கம் சற்று வினைத்திறனான முறையில் செயற்பட்டிருக்கலாம் என்று தற்போது கருதப்படுகிறது.

சர்வதேச நாடுகளுக்கு அடிபணிய முடியாது என பேச்சளவில் மாத்திரமே குறிப்பிட முடியும். இலங்கையின் ஒரு சில உள்ளக விவகாரங்களில் சர்வதேசம் கவனம் செலுத்தும் இலங்கை ஜனநாயக கோட்பாட்டை முன்வைத்து சர்வதேசத்துடன் ஒன்றிணைந்துள்ளது. ஆகவே ஜனநாயக விவகாரங்கள் குறித்து சர்வதேசம் கேள்வி எழுப்பும்.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ஜெனிவாவில் மாகாண சபைத் தேர்தல் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது கட்டாயமானது. இதனையே சர்வதேசமும் ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்துகிறது என பேராசிரியர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயில் 40 வீதமான நச்சுப் பதார்த்தங்கள்

## இராஜாங்க அமைச்சர் தகவல்

(கொழும்பு)

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயில் சுமார் 40 வீதமான நச்சு இரசாயனங்கள் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.

மலிவான தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ய நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சியே இதற்குக் காரணம் என்று பாராளுமன்றில் அவர் தெரிவித்தார். (நி-4-8)

# புத்தாண்டை முன்னிட்டு வர்த்தக நிலையங்கள் சோதனை

(கொழும்பு)

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நாடுமுழுவதும் வர்த்தக நிலையங்களை சோதனையிடும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் இந்த நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளதாக அதன் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்தார்.

இந்த சோதனை நடவடிக்கையில் 3 ஆயிரம் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (நி-4)


**தேவை**

பான்சி கடைக்குரிய பாவித்த அலுமினிய கண்ணாடி அலுமாரிகள் தேவை.
(Aluminium, Fiting Cupboard)

தொடர்பு: 077 875 7860 (6368)



**கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்**

**ஏல விற்பனை**

எமது அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருட்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 30.03.2021 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்.

- CPU
- Printer
- Photo Copier
- உடைந்த தளபாடம்
- Monitors
- மின்சார உபகரணம்
- UPS
- பாவித்த வாகன உதிரிப்பாகம், ரயர்
- ஏனைய சில அலுவலக உபகரணங்கள்

செயலாளர்
கல்விப் பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்.

(C-1821)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



**வேலை வாய்ப்பு**

யாழ்.மாவட்டத்தில் குளிர்பான உற்பத்தி நிறுவனத்திற்கு

1. உணவு உற்பத்தித்துறை கல்வி பயின்றவர்கள்
2. AL உயர்தரத்தில் உயிரியல் பயின்றவர்கள்
3. AL உயர்தரத்தில் கணக்கியல் பயின்றவர்கள்
4. அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்

231 Temple Road Nallur, Jaffna. (6366)



**Samugam Media இல் வேலை வாய்ப்பு**

- Translator
- Content Writer
- Area Reporter
- Social Media Executivate
- Video Editor
- Camera Man


குறைந்தது 2 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
வயது எல்லை — (21—45 வயதிற்கு உட்பட்டோர்)

Contact No:- +94 76 245 5533
+94 77 149 7888

Mail ID:- hr.samugam@gmail.com

(6347)


# நீத்தார் அஞ்சலி



## பண்டிதர் தி.பொன்னம்பலவாணர்

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஆலோசகரும்
சைவச்சான்றோரும், பழுத்த தமிழ்ப் புலமையும்
உடைத்தவராகத் திகழ்ந்த பண்டிதர் தி.பொன்னம்பலவாணர்
அவர்களின் இழப்பு பேரிழப்பாகும். சிவனடியே சிந்திக்கும்
படி சைவச் சான்றோர்க்கு அருமையான சைவத் திருமுறைத்
திரட்டு' முதலான பல தொகுப்பு நூல்களை வழங்கியுள்ளார்.
அவர் மறைந்தாலும் அன்னாரின் நூல்கள் திருமுறை
ஓதுவோம் எனத் தூண்டும். வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்த அன்னார் தில்லைக் கூத்தன் திருவடியை
அடைய வேண்டி அமைகின்றோம்

இவ்வண்ணம்
அகில இலங்கை திருமுறை மன்றம்
யாழ்ப்பாணம்.

(C-2830)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கலவையுடன் மாகாண சபைத் தேர்தல்

## அங்கீகாரத்தை கோரியது அமைச்சரவை

(கொழும்பு)

விகிதாசார பிரதிநிதித்துவம் மற்றும் கடந்த தேர்தல் முறை ஆகியவற்றின் கலவையுடன் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கான அங்கீகரத்தை அமைச்சரவை கோரியுள்ளது.

எவ்வாறாயினும், எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அதை ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க அதிக நேரம் கோரியதைத் தொடர்ந்து, உத்தேச சட்டத்திற்கான அமைச்சரவை அனுமதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆகவே சட்ட ரீதியான தடைகளைத் தீர்த்த பின்னர் மாகாண சபைகளுக்கான தேர்தலை தாமதமாக நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாகாண சபைகளை அமைத்து அதன் மூலம் உள்ளூராட்சி நிர்வாகத்தை வலுப்படுத்த வேண்டும் என இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள ஐ.நா.தீர்மானம் கோரும் அதே வேளை அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தை அமுல்படுத்த இந்தியாவும் வலியுறுத்துகிறது.

இருப்பினும் சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் 13 ஆவது திருத்தம் ஊடாக அதிகார பகிர்வினை வழங்கக்கூடாது எனக் கருத்து தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இவ் வருடத்தில் 500 பேர் விபத்துக்களால் உயிரிழப்பு

(கொழும்பு)

2021ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் 500இற்கும் அதிகமானோர் விபத்துக்களால் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். நாட்டில் அதிகரிக்கும் விபத்துக் குறித்து செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார். கடந்த 24 மணிநேரத்தில் சுமார் 13 பேர் வரை கொல்லப்பட்டுள்ள தாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. அவர்களில் 8 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர். மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# அடுத்தமாதம் முதல் நிர்ணய விலையில் அரிசியைப் பெறலாம்-விவசாய அமைச்சர்

(கொழும்பு)

**ஏப்ரல் முதலாம் திகதி முதல் சதொச, மொத்த விற்பனை கூட்டுறவு நிலையங்கள், பிரதான நிலை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் ஊடாக சிவப்பு மற்றும் வெள்ளை அரிசி ஒரு கிலோவை 95 ரூபாவிற்கும் நாட்டரிசி ஒரு கிலோவை 97 ரூபாவிற்கும் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

போதுமான அளவிற்கு அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

சதொச தலைவர், மொத்த கூட்டுறவு விற்பனை நிறுவன ஆணையாளர், பிரதான நிலை விற்பனை நிலையங்களின் பிரதானிகள் ஆகியோருடன் கடந்த வியாழக்கிழமை விவசாயத் துறை அமைச்சில் இடம் பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரிசியின் நிர்ணய விலையினை பேணுவது சவால்மிக்கதாக உள்ளது. அரிசியின் விற்பனை விலை தொடர்பில் அரசாங்கம் வர்த்தமானி வெளியிட்டாலும் அவற்றை முறையாக பின்பற்ற முடியாத தன்மை காணப்படுகிறது.

கடந்த காலங்களில் அரிசி உற்பத்தியாளர்கள் முறையற்ற வகையில் செயற்பட்டதன் காரணமாக அரிசிவிற்பனை விலையில் மாறுபட்ட தன்மை ஏற்பட்டது.

பண்டிகைக்காலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைப்புக்கூடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன் முதற்கட்டமாக அரிசி விலையின் நிர்ணயத் தன்மையினை உறுதியாக பேண தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சிவப்பு மற்றும் வெள்ளை அரிசி ஒரு கிலோ 95 ரூபாவிற்கும், நாட்டரிசி ஒரு கிலோ 97 ரூபாவிற்கும் சதொச, மொத்த கூட்டுறவு விற்பனை நிலையங்கள், கார்கில் புட்சிட்டி உட்பட பிரதான நிலைய விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அரசி விநியோகத்தில் எவ்வித தட்டுப்பாடும் கிடையாது. 6 மாத காலத்துக்கு தேவையான அரிசிபோது மான அளவிற்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் ஒரு இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பு காணப்படுகிறது. இதில் 28 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படுகிறது. இவ் எண்ணிக்கையை அதிகரிக்க நாடு தழுவிய ரீதியிலான நடவடிக்கை விவசாய திணைக்களம் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன என விவசாய அமைச்சர் தெரிவித்தார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 22 செவ் 2 சூரி 12 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A.C.C.A, IT Consultant<br>எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண். வெளிநாடும் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/11669 | பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 6 சூரி 2 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:B.A, தொழில்-பட்டதாரிப்பயிலுநர்<br>எதிர்பார்ப்பு: அரச. தகுந்த தனியார் தொழில். உள்நாடு மட்டும்.<br>தொ.இ: G/11756 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீருடம்<br>கி.பா: 41 1/4 செவ் 11 சூரி 9 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: U.K Super Market PR உண்டு<br>எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகம் பார்க்கும் பெண், வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11670 | பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்:உத்திரட்டாதி<br>கி.பா: 24 செவ் 5 சூரி 4 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்- BSc Food Science, MSc Food Science. Work -Food Technologist<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச/தனியார் தொழில், வெளிநாடும் எதிர்பார்க்கப்படும். மணமகள் விவாகரத்து பெற்றவர், பிள்ளைகள் இல்லாத விவாகரத்து ஏற்கப்படும்.<br>தொ.இ: G/11757 |
| பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 14 செவ் 12 சூரி 1 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Degree of Bacherlor of Engineering<br>எதிர்பார்ப்பு: உயர் கல்வி கற்ற அழகான நற்குணமுள்ள மணமகள், வெளிநாடு மட்டும் (லண்டன், கனடா அல்லது அவுஸ்திரேலியா)<br>தொ.இ: B/11671 | பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: செவ் 3 சூரி 4 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி, தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடும் எதிர்பார்க்கப்படும்<br>தொ.இ: G/11759 |
| பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 56 செவ் 5 சூரி 7 இல் உயரம்: 1.6 m<br>தகைமை/தொழில்: O/L,தொழில் - கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்.<br>தொ.இ: B/11673 | பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 56 செவ் 5 சூரி 7 இல் உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: O/L, தையல்<br>எதிர்பார்ப்பு: நல்ல குணம் கொண்ட மணமகள், சொந்தத் தொழில், வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/11764 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# 'பெகஸ்ஸ்' மென்பொருளை பயன்படுத்தி சகலரையும் கண்காணித்து வரும் அரசாங்கம்

## ஹரின் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் பெகஸ்ஸ் எனும் மென்பொருளை பயன்படுத்தி சகலரையும் கண்காணித்து வருவதாகவும், அவர்களின் தனிப்பட்ட விடயங்களை கண்காணிப்பதாகவும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும்.கூறுகையில்,

பெகஸ்ஸ் (Pegasus ) எனும் மென்பொருள் ஒன்று அரசாங்கத்தினால் கையாளப்படுகின்றது. இந்த மென்பொருள் மிக ஆபத்தானது. இந்த மென்பொருளை பயன்படுத்தி உங்களின் கமராவில் உள்ள வீடியோவை கையாள முடியும். நீங்கள் எங்கு உள்ளீர்கள் என கண்டறிய முடியும். எனவே அரசாங்கம் எதிர்க்கட்சியை ஆராய்வதை விடவும் ஆளும் கட்சிக்குள் என்ன நடக்கின்றது என்பதையே ஆராய்கின்றது என்ற விடயத்தை நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.

தொலைத்தொடர்பு ஆணைக்குழு, ஏனைய தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் ஒருநாள் இந்த அரசாங்கம் கவிழும். அப்போது நீங்கள் பதில் கூறியாக வேண்டும்.

இவ்வாறு மக்களை கட்டுப்படுத்த வெட்கமில்லையா என்றே அரசாங்கத்தை கேட்கிறேன். களவு, பொய், ஊழல் இல்லையென்றால் எதற்காக இவ்வாறான கீழ்மட்டமான செயல்களில் அரசாங்கம் ஈடுபடுகின்றது என ஹரின் கேள்வி எழுப்பினார். (நி-4-8)

# 49 கோடி ரூபாய் செலவு செய்தும் யானை-மனிதன் மோதல் குறையவில்லை

(கொழும்பு)

யானை மனித மோதலை தவிர்ப்பதற்காக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 49 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ள போதும் யானை-மனித மோதல் குறையவில்லையென பாராளுமன்றத்தில் நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தெரிவிக்கப்பட்டது.

இருந்தபோதும் 2021 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி வரையில் இலங்கையில் யானை-மனித மோதல் காரணமாக 28 மனிதர்களும் 83 யானைகளும் உயிரிழந்துள்ளன. (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

28.03.2021
பங்குனி 15, ஞாயிற்றுக்கிழமை,
பூரணை பின்னிரவு 1.16 மணிவரை
உத்தரம் மாலை 6.03 மணிவரை
சுபநேரம் 9.14-10.44 மணிவரை
இராகுகாலம்4.44-6.14 மணிவரை
சந்திராஷ்டமம்: அவிட்டம்,சதயம்
பங்குனி உத்தரம், பூரணை விரதம் வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சூழ்நிலைக்கேற்ப மாறிக் கொள்வீர்கள், தேகநலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.


மிதுனம்

தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்,பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கடகம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


சிம்மம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.


கன்னி

ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்,தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விரும்பிய உணவுப்பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


துலாம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கே யென நினைக்க வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


விருச்சிகம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்,வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.


தனுசு

குடும்ப ஒற்றுமை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்,போசன நன்மையுண்டு.


மகரம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும்.


கும்பம்

குறைவாகப் பேசினாலும் குறை கூறி பேசாமல் இருப்பது நல்லது, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள்.


மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

பொறாமைக் கண் பட்டால் பொல்லாதது விளையும்.

# இலங்கையில் தொடரும் கண்காணிப்பு ஒத்துழைப்பு வழங்க தயார்

## பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

**நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் குறித்து அர்த்தமுள்ள முன்னேற்றத்தை அடைவதற்கு இலங்கையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு பிரித்தானியா ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது.**

இந்த விடயத்தில் ஆக்க பூர்வமாக ஈடுபட பிரித்தானியா தயாராக இருப்பதாக அந்நாட்டு வெளிவிவகார அலுவலக இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவித்துள்ளார்.

இலங்கை, தென் சூடான், சிரியா, ஈரான், மியன்மார், பெலரஸ் மற்றும் ஜோர்ஜியா ஆகிய நாடுகள் குறித்த முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவை 46வது அமர்வை முடிவுக்கு கொண்டுவந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து தொடர்ந்தும் பேசிய அவர்,

"இலங்கை மீதான தீர்மானத்தை வரவேற்கிறேன். இது மோதலுக்கு பிந்தைய நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டைக் குறிக்கிறது.

கடந்த காலத்தின் கடுமையான மனித உரிமை மீறல்கள் இலங்கையில் மீளவும் ஏற்படக்கூடிய அபாயம் இருப்பதாக எச்சரித்த உயர்ஸ்தானிகரின் அறிக்கைக்கும் இது பதிலளிக்கிறது என்று அவர் கூறினார்.


எனவே ஐ.நா. தனது கண்காணிப்பைத் தொடர வேண்டும். அத்துடன், எதிர்கால பொறுப்புக்கூறல் செயல் முறைகளை ஆதரிப்பதற்கான ஆதாரங்களை சேகரிக்க வேண்டும் என்பது சரியானது என தாரிக் அஹமட் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பாவனைக்குதவாத எண்ணெய் இறக்குமதி நிரூபிக்கப்பட்டால் தண்டனை நிச்சயம்

(கொழும்பு)

மனித பாவனைக்குதவாத எண்ணெய் இறக்குமதி தொடர்பிலான குற்றச்சாட்டுகள் உரிய விசாரணைகள் மூலம் நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிகளுக்கு தராதரம் பாராது தண்டனை வழங்க வேண்டுமென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்று ஒன்றை முன்வைத்து உரையாற்றும்



போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு விஷமூட்டப்பட்ட எண்ணெய்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் செயற்பாடுகள் இடம் பெறுவதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன.

பொலிஸாரும் இந்த விடயம் தொடர்பில் விரைவாக விசாரணைகளை நடத்தி குற்றங்கள் இடம்பெற்றிருந்தால் குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக் கொடுக்குமாறு கோருகிறேன் என பந்துல தெரிவித்தார். (நி-4)

# இலங்கைக்கு விரைவில் வரவுள்ள பைசர் தடுப்பூசி- பேராசிரியர் ஜயசுமன

(கொழும்பு)

பைசர்-பயோஎன்டெக் நிறுவனத்திடம் இருந்து கொரோனாத் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

70 டிகிரி உறைநிலையில் வைத்திருப்பதற்கான சேமிப்பு வசதிகள் இலங்கையிடம் இல்லை என்றும் இருப்பினும் உற்பத்தியாளர் அதற்கான தீர்வினை வழங்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

தற்போதுள்ள




ரிக்கும் தடுப்பூசிகளை ஏறக்குறைய ஒரு வாரம் சாதாரண உறைநிலையில் வைத்திருக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே பைசர்-பயோ என்டெக் நிறுவனத்திடம் இருந்து விரைவில் இலங்கைக்கு தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன கூறினார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலின் நோய் எதிர்ப்பு சக்தி வைரஸில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது

(யாழ்ப்பாணம்)

**அண்மையில் இந்தியாவில் கொரோனாத் தொற்று மீள அதிகரித்தமைக்கு கொரோனா வைரஸில் ஏற்பட்ட பரம்பரை அலகுத் திரிபுத் தன்மையே காரணமாகும். கொரோனா வைரஸ் மனித உடலில் தொற்றினை ஏற்படுத்தும் போது உடலின் எதிர்ப்புச் சக்தி கொரோனா வைரஸில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.**



அதே போல் தடுப்பு மருந்து செலுத்தியவர்களின் உடலில் உள்ள எதிர்ப்பு சக்தியையும் கொரோனா வைரஸ் எதிர் கொண்டு மாற்றத்திற்கு உள்ளாகின்றது. இத்தகைய சூழலில் மீளவும் கொரோனாத்தொற்று அலை ஏற்படுவதற்கு மாற்றமடைந்த கொரோனா வைரஸே காரணமாகும் எனத் தெரிவித்தார்.

மேலும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு (Track, Trace, Treat) சோதித்து கண்டறிந்து சிகிச்சையினை மென்மேலும் தொடரல் வேண்டும் எனவும் சமூக இடைவெளி பேணல், முகக் கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவு தல் என்பவற்றைத் தவறாது கடைப் பிடித்தல் வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள நோய்த் தொற்று நிலைக்குச் சமாந்தரமாக எமது பகுதியில் ஏற்படாது இருப்பதற்கு இத்தகைய விழிப் புணர்வு நடவடிக்கைகள் மிகவும் இன்றியமையாதவையாகும் என மேலும் தெரிவித்தார். (5-4-33)

# இருவர் கைது

(கொழும்பு)

புத்தளத்தில் மதரசா பாடசாலையொன்றில் கடமையாற்றிய இருவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் மற்றும் மதுரங்குளி ஆகிய பகுதிகளை சேர்ந்த இருவரே கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித் தார்.

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதலின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் சஹ்ரான், குறித்த மதரசா பாடசாலைக்கு சென்று போதனைகளை மேற் கொண்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (4-5)

# வவுனியாவில் அதிகரிக்கும் சைக்கிள் திருட்டுக்கள்

(குருமன்காடு)

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் முன்பாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மாணவி ஒருவரின் துவிச்சக்கர வண்டி நேற்று முன்தினம் திருடப் பட்டுள்ளது.

வவுனியா, வைரவபுளியங்குளம், கதிரேசு வீதியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்குச் சென்ற மாணவர்கள் தமது துவிச் சக்கர வண்டிகளை கல்வி நிலையம் முன்பாக நிறுத்தி விட்டு வகுப்பறைக்கு சென்று கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

கற்றல் செயற்பாடு முடிவடைந்து வீடு செல்வதற்காக துவிச்சக்கர வண்டியை எடுக்க வந்த போது குறித்த துவிச்சக்கர வண்டிகள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கல்வி நிலைய நிர்வாகி ஊடாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த புதன்கிழமை வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச் சக்கரவண்டி ஒன்று திருடப் பட்டிருந்ததுடன் இம்மாதம் மட்டும் மொத்தமாக 4 துவிச்சக்கர வண்டிகள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-4-250)

# வவு.வில் 2 மைதானங்களுக்கு 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு

(கரணவாய்)

கிராமங்களில் உள்ள மைதானங்களும் புனரமைப்பு செய்யப்பட வேண்டுமென்கிற செயற்றிட்டத்துக்கு அமைவாக வவுனியாவில் இரண்டு மைதானங்களுக்கு 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கிராமங்களில் உள்ள மைதானங்களும் புனரமைப்பு செய்யப்பட வேண்டுமென்கிற செயற்றிட்டத்துக்கு அமைவாக வவுனியாவில் உள்ள இரண்டு மைதானங்களுக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவருமான கு.தீலிபன் முன்மொழிவுக்கு அமைவாக 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வவுனியா வடக்கு முத்துமாரியம்மன் நகர் விளையாட்டுக் கழக மைதானத்திற்கு 15 இலட்சம் ரூபாவும் செட்டிகுளம் கந்தசாமிநகர் விளையாட்டுக்கழக மைதானத்திற்கு 15 இலட்சம் ரூபாய் வீதம் இரண்டு மைதானங்களுக்கும் 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் நெறிப்படுத்தலில் விளையாட்டுக்கான அடிப் படை வசதிகளை மேம்படுத்தி, நாட்டில் புதிய விளையாட்டு கலாசாரத்தை உருவாக்கும் நோக்கத்துடன் "கிராமத்திற்கு மைதானம்" தேசிய வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-60)

# வடமாகாண பண்பாட்டுப் பெருவிழா





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பண்பாட்டுப் பெருவிழா 2020 ஆம் ஆண்டிற்கான கலைஞர்களைக் கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடந்த 22 ஆம் திகதி பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம். சார்ள்ஸ் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டார்.

யாழ்பாணன் ஆவணப்பட வெளியீடும் பண்பாட்டலுவல்கள் திணைக்கள தொகுதி வெளியீடுகளாக "வடந்தை", பண்பாட்டு மேம்பாட்டிற்கான கலைகள் இருப்பும் எதிர்பார்ப்பும்" யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வியல் பண்பாட்டுச் சுவடுகள்-02" என்னும் நூல்கள் வெளியிடப்பட்டன. (5)

# மழைநீர் சேகரிப்பு வளநிலையம் திறப்பு

(தருமபுரம்)

இலங்கை மழை நீர் சேகரிப்பு மன்றத்தின் வள நிலையம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகத்தின் ஒரு பகுதியில் குறித்த வள நிலையம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் இலங்கை மழைநீர் சேகரிப்பு மன்றத்தின் தலைவர் டாக்டர் தனுஜா அரியானந்தா கலந்து கொண்டு குறித்த வள நிலையத்தை திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் பிராந்திய நீர்வழங்கல் வடிகாலமைப் புச்சபையின் பிரதம பொறியியலாளர், கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப் பாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர், கரைச்சி பிரதேச சபைத்தவிசாளர், கிராம உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த வள நிலையம் ஊடாக மழைநீர் சேகரிப்பு தொடர்பான தகவல்களை பொதுமக்கள் நேரடியாக பெற்றுக்கொள்ள முடியும். (5-4-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு காலப்பகுதியில் ஒன்று கூடல்களுக்கு தடை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் பெரிய அளவிலான ஒன்றுகூடலுக்கு தடை விதிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

இருப்பினும் விடுமுறை நாட்களில் பயணக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்த இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.



குடும்பங்கள் ஒன்று கூடுவது தடைப்படும் என்பதனால் பயணக் கட்டுப்பாடுகள் குறித்து அரசாங்கம் பரிசீலிக்கவில்லை என குறிப்பிட்ட அவர், இருப்பினும் புத்தாண்டுக்கு முன்னதாக பொலிஸார், சுகாதார அதிகாரிகள் வழிகாட்டுதல்களை வழங்குவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் குறித்த நாட்களில் தற்போதுள்ள சுகாதார வழிகாட்டுதல்களை பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே வலியுறுத்தினார்.(நி-4)

# குற்றச்சாட்டுக்களை நிவர்த்தி செய்ய வழங்கப்பட்ட காலத்தில் அரசு முறையாக பயணிக்க வேண்டும்

## இல்லாவிடில் பெரும் இழப்பு ஏற்படும் என்கிறார் வஜிர

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு ஒரு வருடம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.



இக்காலப்பகுதியில் இலங்கை முறையான பாதையில் பயணிக்காவிட்டால் மீண்டும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை அற்றுப்போகும் அதே வேளை இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு ஐரோப்பிய நாடுகள் தடை விதிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இம்முறை இலங்கை தொடர்பான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் உள்ளிட்ட பலவந்த நாடுகளின் ஆதரவை தனது ஆட்சியின் போது பெற்றுக்கொள்வதற்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறந்த இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுத்திருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக ஐ.நாவில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிவர்த்தி செய்து கொள்ள ஒருவருட காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஐ.நா. கூர்மையாக அவதானித்து வருகிறது.

எனவே இலங்கைக்கு ஐ.நா. வழங்கியுள்ள குறித்த காலகட்டத்தில் அரசாங்கம் முறையான வழியில் பயணிக்காவிடின், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீளப் பெற்றுக் கொடுத்த ஜி.எஸ்.பி. வரிச் சலுகை மீண்டும் இழக்கும் அதே வேளை , ஐரோப்பாவினால் மீண்டும் மீன் ஏற்றுமதிக்கு தடை விதிக்கக் கூடிய வாய்ப்புள்ளது என்றும் வஜிர அபேவர்த்தன மேலும் தெரிவித்தார். (நி-4)

# குறைந்தளவான நட்பு நாடுகளையே தக்க வைத்துள்ள ராஜபக்ஷ அரசாங்கம்

## எரான் சாடல்



(கொழும்பு)

சர்வதேச அரங்கில் மிகவும் சொற்பளவான நட்பு நாடுகளையே ராஜபக்ஷ அரசு தக்கவைத்துள்ளது என்பதை அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்ட புதிய தீர்மானத்துக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் வெளிப்படுத்தியுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

மிக மோசமான பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து தற்போது மோசமான வெளிநாட்டுக் கொள்கைகளை நோக்கி ராஜபக்ஷ அரசு நகர்ந்திருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 2009ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின்போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் மாத்திரமன்றி கடந்த 16 மாத காலத்தில் நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைச் சரி செய்வதற்கு அதிக முக்கியத்துவமளிக்கும் விதமாகவே ஐ.நாவின் புதிய தீர்மானம் அமைந்துள்ளது.

வெளியுறவுக் கொள்கைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மூலமே இராஜதந்திர ரீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்நிலையில், ஐ.நாவின் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பொருளாதார ரீதியில் ஏற்படக்கூடிய சவால்களையும் பாதகமான தாக்கங்களையும் எதிர்கொள்வதற்கும் அவற்றைக் குறைத்துக்கொள்வதற்கும் அவசியமான புதிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும்.

அதேவேளை, இலங்கை குறித்த கடந்தகால அறிக்கைகளில் முன்வைக்கப்பட்ட மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதுடன் சர்வதேச சமூகத்தின் கரிசனைகளைத் திருப்திப்படுத்தக் கூடிய வகையிலான உள்ளகப் பொறிமுறைகளை அமுல்படுத்துவது அவசியமாகும்.

நல்லிணக்க செயன்முறையைப் பொறுத்தவரையில் கடந்த கால சம்பவங்கள் தொடர்பான உண்மைகளைக் கண்டறிவதென்பது மிகவும் முக்கியமானதாகும்.

நாட்டு மக்கள் மீதான அக்கறையுடன் முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு செயற்றிறனான நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஆதரவை வழங்குவதற்கு எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாம் தயாராக இருக்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# அமெரிக்காவில் இலங்கை இளைஞன் மீது தாக்குதல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இலங்கையர் மீது கறுப்பினத்தவர் ஒருவர் கடுமையாக தாக்கியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த செய்திக் குறிப்பில், நியூயோர்க் சுரங்க ரயிலில், கடந்த வெள்ளிக்கிழமை, காவலாளியாக பணியாற்றும்இலங்கையர்வேலைக்கு சென்ற போது திடீரென வந்த கறுப்பினத்தவர் ஒருவர் கெட்ட வார்த்தையால் திட்டியபடி இலங்கை பிரஜையின் முகத்தில் ஓங்கிக் குத்தியிருக்கிறார்.

முகத்தில் இரத்தம் சொட்டச்சொட்ட அவர் அமர்ந்திருக்கும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

தற்போது கறுப்பினத்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றம், அவரது செயலை இன வெறித்தாக்குதல் தான் என முடிவு செய்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# 75 மெற்றிக்தொன் பேரீச்சை அன்பளிப்பு செய்த சவுதி



(கொழும்பு)

இவ்வருட ரம்ழானுக்காக சவுதி அரேபிய அரசாங்கம் இலங்கை முஸ்லிம்களுக்கு 75 மெற்றிக்தொன் பேரீச்சம் பழங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள பேரீச்சம் பழங்கள் பள்ளிவாசல்கள் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பி.எம். அஷ்ரப் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவிப் பகுதியில் மீண்டும் வீடு புகுந்து தாக்குதல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மல்லாவி புகழேந்தி நகர்ப்பகுதியில் கடந்த 13 ஆம் திகதி வீடொன்றுக்குள் புகுந்து வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் மீண்டும் நேற்று முன்தினம் இரவும் குறித்த வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புகழேந்திநகர் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி இரவு இளம் குடும்பஸ்தர் ஒருவர் மீது இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேரால் வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்தவர் மல்லாவி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில்,

தாக்குதலாளிகள் நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் குறித்த வீட்டுக்குச் சென்று வீட்டின் கதவுகளை உடைத்தும் பயன் தருமரங்களை வெட்டியும் சேதப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் வீட்டில் இருந்தவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (5-315)




# மணல் அகழ்வுக்கான இடங்களை நேரில் சென்று பார்வையிடும் குழு

(மன்னார்)

நானாட்டான் மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவுகளில் மண் அகழ்விற்காக தெரிவு செய்யப்பட்ட இடங்கள் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் உரிய திணைக்களங்கள் இணைந்து கள விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் தலைமையில் நானாட்டான் பிரதேச செயலாளர் எஸ். கிரிஸ்கந்தகுமார், நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும்.புவி சரிதவியல் திணைக்களம், முருங்கன் பொலிஸ், விசேட அதிரடிப்படை, இராணுவம், நீர்ப்பாசன திணைக்களம், மாவட்டச் செயலக காணி திட்டமிடல் பிரிவு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, கமநல சேவைகள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் இணைந்து குறித்த கள விஜயத்தை மேற்கொண்டனர்.

இதன் போது மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேக்கம் மற்றும் கட்டையடம்பன் பகுதிகளையும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் இசைமால தாழ்வு பகுதியில் உள்ள தேத்தாக்குழி, கற்கடந்த குளம் பகுதியில் உள்ள பண்டிதன் கட்டு பகுதியில் இரு இடங்களையும், ஆத்தி மோட்டை பகுதியில் மூன்று இடங்களிலும், அடி ஆச்சி குளம் பகுதியில் 3 இடங்களையும் நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

தொடர்ந்தும் மன்னார் தீவு பகுதியில் அடையாளம் காணப்பட்ட இடங்களுக்கு குறித்த குழுவினர் கள விஜயம் மேற்கொண்ட பின்னர் நாளை மறுதினம் 30 ஆம் திகதி மன்னார் மாவட்டத்தில் மண் அகழ்வு செய்யப்பட உள்ள இடங்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (5-285)

# பொருத்தமற்று அமைக்கப்பட்ட பாலத்தால் நெற்செய்கை பாதிப்பு



(அக்கராயன்)


கிளிநொச்சி பூநகரி மன்னார் ஏ-32 வீதியில் பாலங்கள் மாறி அமைக்கப்பட்டுள்ளன எனவும் கரியாலை நாகபடுவான் குளத்தின் நீர் ஏ-32 வீதியில் கடந்து செல்கின்ற வீதியில் பெரிய பாலம் அமைந்திருக்க வேண்டும்.

ஆனால் சிறிய மதகு மட்டும் அமைக்கப்பட்டிருப்பதன் காரணமாக கரியாலை நாகபடுவான்குளம், பல்லவராயன்கட்டுக்குளம் ஆகிய இரு குளங்களின் நீர் வீதியினைக் கடக்க முடியாமல் இருநூறு ஏக்கருக்கு மேற்பட்ட நெற் செய்கை நிலப்பரப்பில் தேங்குவதன் காரணமாக பயிர்கள் முழுமையாக அழிவடைவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆண்டுதோறும் மேற்படி இரு குளங்களும் நிரம்பி வழிகின்ற போது வெள்ளம் வீதியினைக் கடந்து கடலினைச் சென்றடைய முடியாமல் தேங்குவதன் காரணமாக இருநூறு ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை நிலம் அழிவுகளை எதிர்கொள்கின்றது.

பல்லவராயன்கட்டுச் சந்தியில் அமைய வேண்டிய இரு பெரிய பாலங்களும் முழங்காவில் பக்கமாக எந்தவித பிரயோசனங்களும் அற்ற நிலையில் அமைந்துள்ளன.

பல்லவராயன்கட்டுச் சந்தியில் இரு குளங்களின் நீரும் வடிந்து செல்லக் கூடிய வகையில் பெரிய பாலங்கள் ஏ-32 வீதியில் அமைக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட செயலாளரிடம் கரியாலை நாகபடுவான், பல்லவராயன் கட்டுக் குளங்களின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-350)



கனடாவில் வசிக்கும் புங்குடுதீவைச் சேர்ந்த தீபன் பிரவீனா தம்பதிகளின் நிதிப் பங்களிப்பில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகு தியைச் சேர்ந்த வீடின்றி 3 பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு வீடு அமைத்து கையளிக்கும் நிகழ்வு நேற்று தமிழ் விருட்சமூடாக அக் குடும்பத்திடம் கையளிக்கப்பட்டது. (படம்: சதீஸ்)



முல்லைத்தீவு மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரின் ஏற்பாட்டில் வங்கிகளின் சேவை வங்கிகளுடனான நேரடி சந்திப்பு நிகழ்ச்சித் திட்டம் கடந்த 23 ஆம் திகதி கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்-தவசீலன்)

# பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசியலில் பெண் பிரதிநிதித்துவம் வேண்டும்

(குருமன்காடு)

பெண்களின்பாதுகாப்பை உறுதிப்படுத்த தகுதி வாய்ந்த ஜனநாயக விழுமியங்களை பேணக்கூடிய இளம் பெண்கள் அரசியலில் ஈடுபட முன்வர வேண்டும் என வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனநாயக விழுமியங்களை மதிக்கின்ற தகுதி வாய்ந்த இளம் பெண்கள் அரசியலில் பிரவேசிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

உள்ளூராட்சிமன்றங்களில் 25 வீதமான இட ஒதுக்கீட்டை பெண்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் 2018ஆம் ஆண்டு சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டது. இருப்பினும் குறித்த 25 வீத ஒதுக்கீட்டை முழுமையாக பெற்றுக் கொள்வதிலும் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன.

2018 ஆண்டு சட்ட மூலம் அமுலுக்கு வந்ததன் பின்னர் அரசியலில் பிரவேசிக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது. பெரும்பாலான பெண்கள் இதனை ஒரு மகத்தான வாய்ப்பாக கருதினாலும் சில பெண்கள் சட்ட நிர்ப்பந்தத்தால் சந்தர்ப்பவசமாக அரசியலில் பிரவேசித்தனர்.

தேர்தல்களில் பெண் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அரசியலில் பெண்கள் இருப்பது பெண்களின் உரிமையை பாதுகாக்கவும், பெண்களை பாதிக்கும் விடயத்தில் தீர்மானம் எடுக்கவும், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், வன்முறையற்ற சூழலை உறுதிப்படுத்தவும் இது தேவையாக இருக்கின்றது.

மேலும், சமூகத்தில் வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர். பெண்களுக்குக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்முறைகளை தடுத்து,அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வன்முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பெண்கள் அரசியலில் பிர வேசிப்பது மிகவும் இன்றியமையாததாகும் என தெரிவித்தனர். (5-4-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும்.
*– மெர்ரி கிளாட்சன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கில் எஃகிறும் கொரோனா நிலைமைக்கு யார் காரணம்?

கொரோனாத் தொற்று யாழ்ப்பாணத்தைச் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்துகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படுவது தவிர்க்க முடியாது என்றளவில் நிலைமை எல்லைமீறிச் சென்றுவிட்டது.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொழும்பில் கொரோனாத் தொற்று ஏற்பட்டபோது யாழ்ப்பாணத்திலும் ஒரு சிலருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இருந்தும் அப்போது மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையால் யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

ஆனால் யாழ்ப்பாணத்தின் இன்றைய சமகால நிலைமைகள் வேறுவிதமாக உள்ளன.

ஆம், அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று ஒரு சிலருக்கு இனங்காணப்பட்டபோது அதனைப் பெரிதுபடுத்தாமல் நிலைமை வழமைபோல விடப்பட்டது.

எந்தவிதமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இதன் காரணமாக கொரோனத் தொற்று மெல்ல மெல்லப் பரவியது. இருந்தும் அது குறித்தும் வடக்கு மாகாணத் தலைமை நிர்வாகம் பேசாதிருந்தது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதன் விளைவாக இப்போது யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று தாண்டவமாடுகிறது.

இதன் அடுத்த கட்டம், வடபகுதியின் ஏனைய மாவட்டங்களுக்கு கொரோனாத் தொற்றுக் காவப்படும்.

ஆக, அடுத்து வரும் வாரங்களில் வடபகுதி முழுவதும் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுகின்ற பேராபத்து ஏற்படப் போகிறது.

அதிலும் குறிப்பாக மருத்துவர் குழாம் மற்றும் துணை மருத்துவ சேவையாளர்கள் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கிறது.

இதனால், கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுகின்ற பொதுமக்களைப் பராமரிப்பதற்கான ஆளணிகளும் இடவசதிகளும் அருந்தலாகும்.

இத்தகைய நிலைமை ஏலவே நோய் நிலைகளுக்கு ஆளாகி இருப்பவர்களையும் முதியவர்களையும் கடுமையாகப் பாதிக்கும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

எனினும் இதுபற்றி இன்னமும் வடக்கு மாகாண நிர்வாகம் காத்திரமான தீர்மானங்களை எடுத்ததாகத் தெரியவில்லை.

இத்தகைய செயல்களைப் பார்க்கும்போது ஏன்தான் இப்படி என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு கொரோனா பரவுகை தொடர்பில் வடக்கு மாகாண நிர்வாகத்தின் அசமந்தம் உள்ளது.

எது எவ்வாறாயினும் வடபகுதியில் உள்ள பொது அமைப்புகள், சமூக நிறுவனங்கள் நிலைமையை உணர்ந்து கொண்டு தங்களின் எதிர்வினையைக் காட்ட வேண்டும்.

இல்லையேல் தலைக்கு மேல் வெள்ளம் ஏறிவிடும். அதன் பின்பு சாண் ஏறினால் என்ன? முழம் ஏறினால் என்ன?

### போதைப்பொருள் கடத்தல் தொடர்பில்
# தகவல்களை வழங்குவோருக்கு பணப்பரிசு வழங்கப்படும்
### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் 1997 எனும் இலக்கத்துக்குத் தகவல் தருவோருக்கு பணப்பரிசு வழங்கப்படவுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று 100 இற்கும் அதிகமான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க முடியும் என்றும் உறுதி செய்யப்பட்ட தகவல்களை 1997 எனும் இலக்கத்துக்கு அறிவிக்க முடியும்.

அத்துடன், நீங்கள் வழங்கும் தகவல்கள் உறுதி செய்யப்பட்டால், இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் உங்களுக்குப் பெறுமதி மிக்க சன்மானம் வழங்கப்படும் என்றார். (ம-3)

# ஹெரோயின் போதையுடன் வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா போதை ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கும் போது,

நேற்றுமுன் தினம் இரவு தேக்கவத்தை பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நின்ற இளைஞர்களிடம் போதை ஒழிப்பு பிரிவினர் சோதனை மேற்கொண்ட போது அவர்களின் உடமையிலிருந்து ஹெரோயின் போதை பொருளை மீட்டுள்ளனர்.

குறித்த இளைஞர்கள் 26,29 வயதுடையவர்கள் எனவும் அவர்களிடமிருந்து 220 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-299)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வீரபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# குடும்ப பெண்மீது கிளிநொச்சியில் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட பளை முல்லையடி பகுதியில் குடும்ப பெண் மீது மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பளை முல்லையடி பகுதியில் காணி வேலி சண்டை ஒன்று ஏற்பட்டுள்ளது.இதன்போது அங்கு வந்த மர்ம நபர்கள் காணி உரிமையாளரான குறித்த பெண்ணை தாக்கியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-316)

# இலங்கையில் ஒரே நாளில் 14 ஆயிரத்து 455 பேருக்கு
### கொரோனா தடுப்பூசி


(கொழும்பு)

இலங்கையில் ஒரே நாளில் 14 ஆயிரத்து 455 பேருக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளன.

கோவிட்-19 தடுப்பூசி செலுத்தல் தொடர்பான சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவின் நாளாந்த அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. நேற்று முன் தினம் இவர்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் 8 இலட்சத்து 84 ஆயிரத்து 164 பேருக்கு கொவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## துணிவைக் கைவிடாதீர்கள்

❖ சான்றோரின் வாழ்நாள்களை ஆண்டவர் அறிவார். அவர்களின் உரிமைச் சொத்து என்றும் நிலைத்திருக்கும்.

❖ தூங்கிக் கொண்டேயிருப்பதை நாடாதே.கண் விழித்திரு. உனக்கு வயிறார உணவு கிடைக்கும்.

❖ உங்களிடம் இருக்கிற துணிவைக் கைவிடாதீர்கள். இதற்கு மிகுந்த கைமாறு உண்டு.

❖ எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார்.

❖ நண்பர் கொடுக்கும் அடிகள் நல்நோக்கம் கொண்டவை. பகைவர் தரும் முத்தங்களோ வெறும் முத்தப்பொழிவே.

❖ கதிரவன் உனக்கு இனி பகலில் ஒளி தர வேண்டாம். பால்நிலவும் உனக்கு ஒளி வீச வேண்டாம். ஆண்டவரே இனி உனக்கு முடிவில்லாப் பேரொளி.

❖ இறைப்பற்றோடு சகோதர நேயமும், சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கடந்த கல்விக் கொள்கை

# நவீன உலகுடன் முன்னோக்கி செல்ல முடியாது- ஜனாதிபதி



(கொழும்பு)

**காலம் கடந்த கல்விக் கொள்கையினால் நவீன உலகுடன் முன்னோக்கிச் செல்ல முடியாத சமூகம் ஒன்றே உருவாகும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

முன்மொழியப்பட்ட கல்வி மறுசீரமைப்பு பற்றி பொது மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கான "எண்மான தளத்தை" உருவாக்குவதற்காக அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

"எண்மான தளம்" கருத்துக்கள் மற்றும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைத்து "பேண்தகு கல்விக் கொள்கைச் சட்டகமொன்றை" உருவாக்குவதற்கு மக்களுக்கு கிடைக்கும் அரிய சந்தர்ப்பமாகும்.

காலம் கடந்த கல்விக் கொள்கையினால் உருவாவது, நவீன உலகுடன் முன்னோக்கிச் செல்வதற்கு முடியாத சமூகமே உருவாகும்.

பரந்தளவிலான மக்கள் பிரதிநிதித்துவத்துடன் உருவாகும் ஒரு கொள்கையை, அரசாங்கம் மாறும்போது மாற்ற முடியாது.

21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்றவகையில், அறிவை மையப்படுத்திய மனித வள மூலதனத்தை திட்டமிட்டு போஷிப்பது "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதற்காக பல்வேறு கல்வி மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார். அத்துடன் அடுத்து வரும் 3 மாதங்கள் egenuma.moe.gov.lk என்ற இணையத்தளம் மூலம், மக்கள் புதிய கல்வி மறுசீரமைப்புக்கான ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை "எண்மான தளத்துக்கு" அனுப்ப முடியும்.

முன்பள்ளிக்கல்வி, ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி, தொழில் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி, உயர்மற்றும் தொழிற்கல்வி என்ற பிரதான 4 உப துறைகளின் கீழ் மறுசீரமைப்பு ஆலோசனைகள் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

உயர் கல்விக்கு பிரவேசிப்பதற்கு அதிக வாய்ப்புக்களை வழங்குவது மறு சீரமைப்பின் மற்றொரு நோக்கமாகும். அத்துடன் பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்படும் பாடவிதானங்களை நவீனமயப்படுத்துவதுடன், மறுசீரமைப்பின் மூலம் தொழில்திறன் விருத்தி, தொழிலில் ஈடுபடும்போது தமது கல்வித் தகைமைகளை விருத்தி செய்து கொள்வதற்காக திறந்த பல்கலைக்கழக கட்டமைப்பை முழுமையான மாற்றத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை, இணையம் மற்றும் தொழில்நுட்ப குறைபாடுகளை, 2023 ஆம் ஆண்டாகும்போது முழுமையாக நீக்குவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4-8)

# ஒரு மில்லியன் மக்களுக்கு பிறப்புச்சான்றிதழ் இல்லை-டலஸ்

(கொழும்பு)




தற்போது நாட்டில் வசிக்கும் 18 மில்லியனில் ஒரு மில்லியன் மக்களிடம் பிறப்புச் சான்றிதழ் இல்லை என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கம்புறுபிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் பலர் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமல் இருப்பதாகவும் இதனால் அவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்டார். (நி-4)

# வெடி பொருட்களுடன் கைது



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் கல் உடைப்பதற்கான கல்குவாரி அனுமதிப்பத்திர காலாவதியான நிலையில் அதற்கு பயன்படுத்தும் வெடிபொருட்களை வைத்திருந்த ஒருவரை நேற்று சனிக்கிழமை விசேட அதிரடிப்படையினர் கைது செய்ததுடன் வெடி பொருட்களை மீட்டு தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள விவேகானந்தபுரம் பிரதேசத்தில் கல்குவாரியில் விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து சோதனையிட்டனர்.

இதன்போது கல் உடைப்பதற்காக பயன்படுத்திய வெடிபொருட்கள் அனுமதிப் பத்திரம் காலாவதியான நிலையில் வெடிபொருட்களை வைத்திருந்த ஒருவரை கைது செய்ததுடன் அங்கிருந்த 166 டைனமற்குச்சிகள், 10 யார் கொண்ட சேவா நூல் 20,20 டெக்கினேற்றுக்களை மீட்டு வெல்லாவெளி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 120 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 160 |
| தக்காளி | 80 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 | 50 |
| கோவா | 120 | 120 | 120 |
| கரட் | 220 | 200 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 |
| புடோல் | 100 | 80 | 140 |
| வாழைக்காய் | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 250 | 200 | 240 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 160 |
| பயற்றங்காய் | 180 | 120 | 160 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 160 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 800 |
| போஞ்சி | 180 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 150 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 50 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 140 | 300 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | 80 | 120 |

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் அரசியல் நோக்கம் உள்ளது

(கொழும்பு)



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தீவிரவாத தாக்குதல் போன்று தோன்றினாலும் அது அரசியல் ரீதியிலான நோக்கங்களை கொண்டது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தாக்குதலின் பின்னர் நாட்டில் பல அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றன.

தாக்குதல் நடந்த விதத்தில் அது தீவிரவாத பயங்கரவாத தாக்குதல் போன்று தோன்றினாலும் தாக்குதலின் விளைவு மற்றும் தாக்குதல் பற்றிய விபரங்களை ஆராயும்போது அது அரசியல் தாக்குதல் என்பது புலனாகின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆணைக்குழு முக்கிய சூத்திரதாரியின் நோக்கத்தை தாக்குதலின் பின்னால் இருந்தவர்களை அடையாளப்படுத்த தவறியுள்ளது. அறிக்கையில் தாக்குதலை தடுக்க முடியாமல் போனமைக்கான காரணங்களை மாத்திரம் முன்வைத்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதலை தவிர்க்க முடியாமல் போனமைக்கான காரணங்களை சரி செய்ய முடியும். ஆனால் சதித்திட்டம் குறித்த விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படாத பட்சத்தில் நாட்டில் மீண்டும் அவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெறும் ஆபத்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாமரைப் பூ...

தினம் அந்த பகுதியில் உள்ள குளத்தில் தாமரைப் பூவினை பறிப்பதற்காக சென்றுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாகியும் அவரை காணவில்லை. இதனையடுத்து அப்பகுதியில் ஒன்றுகூடிய பொதுமக்கள் தேடுதல் மேற்கொண்டதுடன் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினர்.

நீண்ட நேரத்தின் பின்னர் குறித்த ஆசிரியரின் சடலம் குளத்தில் இருந்து பொதுமக்களால் மீட்கப்பட்டது.

குறித்த சம்பவத்தில் வவுனியா நகரப் பாடசாலை ஒன்றை சேர்ந்த பரந்தாமன் (வயது - 33) என்ற ஆசிரியரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் ஆலயம் ஒன்றின் தேவைக்காக தாமரைப்பூவை பறிக்கச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-250, 299)

## ஐ.நா தீர்மானத்...

உள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பங்கேற்கும் கிராமத்துடன் கலந்துரையாடலின் 16ஆவது நிகழ்ச்சித் திட்டம் மாத்தறை மாவட்டத்தின் பிட்டபத்த பிரதேச செயலக பிரிவிலுள்ள கிரிவெல்கெல வடக்கு மூன்றாம் பியவர கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருந்தார்.

ஜெனிவாவில் தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கி எமது இறையாண்மையை எமது சுதந்திரத்தை முழுமையாக அழித்து விட்டார்கள்.

அந்த இணை அனுசரணையில் இருந்து நாம் விலகியுள்ளோம். அவர்கள் எங்களுக்கு எதிராக செயல்படுகிறார்கள். அது ஒரு பொருட்டல்ல. நாம் அதை எதிர்கொள்ள முடியும்.

நாங்கள் ஒரு சுதந்திர நாடு. நாம் எங்கள் வேலையைச் செய்யலாம். நாம் அவர்களை அச்சமின்றி எதிர்கொள்கிறோம்.

அதுதான் தேவை. இந்தியப் பெருங்கடலில் இருக்கும் சக்திகளின் அதிகார போராட்டத்தில் நாம் தலையிடத் தேவையில்லை. அதிகாரப் பகிர்வு என்ற பெயரில் பிரிவினைவாதத்தை மீண்டும் கொண்டு வருவதற்கும் அவர்களின் புவிசார் அரசியல் நலன்களை நிறைவேற்ற நமது இறையாண்மையைக் காட்டிக் கொடுப்பதற்கும் நாங்கள் தயாராக இல்லை என்றார். (ம-3)

## வவுனியாவில் 6...

பிசிஆர் பரிசோதனையில் நோயாளர் விடுதியில் கடமையாற்றும் இரு தாதியருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று மதியம் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அவர்களுடன் தொடர்புடையவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை மற்றும் அன்டிஜன் பரிசோதனை என்பவற்றில் மேலும் இரு வவுனியா வைத்தியசாலை தாதியருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த இளைஞருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கும் பிசிஆர் பரிசோதனையில் நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியாவில் நேற்று நான்கு தாதியர்கள் உட்பட 6 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை சுகாதாரத் துறையினர் முன்னெடுத்துள்ளனர். (ம-250)

## 45 நாட்களே...

தினம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிசுக்கு நேற்று முன்தினம் முடி வெட்டுவதற்காக நயினாதீவுக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 10 மணியளவில் தாயார் சிசுக்கு பால் கொடுத்துள்ளார். 11.15 மணியளவில் சிசுவைப் பார்த்தபோது சிசு பேச்சு மூச்சின்றி இருந்துள்ளது.

உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் சிசு ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-78)

## யாழில் ஒரே...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்ஒரே நாளில் கண்டறியப்பட்ட கோவிட்-19 நோய்த் தொற்றாளர்களின் அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 746 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 143 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவபீட மாணவர்கள் மூவர், தாதிய மாணவர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட 7 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பொதுச் சந்தை தொகுதியில் உள்ள மரக்கறி வியாபாரிகள், கடைகளின் வியாபாரிகள் மற்றும் தொழிலாளிகள் என 127 பேருக்கு தொற்றுள்ளமை நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுஉள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரில் ஏற்கெனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நால்வருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-18,33)

## திருநெல்வேலி...

நேற்றைய தினம் யாழ்.ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் நேற்று யாழ். குடாநாட்டில் 143 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளவர்களில் 127 பேர் திருநெல்வேலி சந்தைக் கொத்தணியில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-33)

## எரி...

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை சங்கத்தின் செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

உலகளாவிய கோவிட் தொற்று நோயின் போது உலக சந்தையில் எரிபொருள் மற்றும் எரிவாயு விலை எப்போதும் இல்லாத அளவுக்கு குறைந்திருந்தது.

எனினும் பொது மக்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்க இந்த அரசாங்கம் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## இரு பெண்கள்...

பக்கமூன பகுதியிலிருந்து அநுராதபுரத்திற்கு யாத்திரை சென்ற வான் ஒன்று வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதி விபத்திற்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற வானில் மூன்று குழந்தைகள் உள்ளிட்ட 15 பேர் பயணித்துள்ளனர். (ம)

## யாழில் இன்று...

சந்தைத் தொகுதியில் உள்ள விற்பனை நிலையங்கள் மற்றும் அதற்கு அண்மையில் உள்ள விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றும் 127 பேர் குறித்த பகுதிகளில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே குறித்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று மாவட்டச் செயலகத்தில் காலை யாழ்.மாவட்ட கொரோனா தடுப்புச் செயலணி சந்தித்து யாழ்ப்பாணத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கும் என்றும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம)

## தொற்றாளர்...

நேற்றும் 11 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதால்யாழ்.போதனாவில் அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது. (ம-33)


தன நிதானய
திகதி - 27/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் - 476
E 8 41 43 71
0 5 2 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 27.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2734
F 45 72 74 78

மஹஜன சம்பத
திகதி 2021/03/27
சீட்டிழுப்பு இலக்கம் 4439
Y 7 3 1 0 4 0

மெகா பவர்
திகதி 27/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0801
Q 20 31 46 69 77

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 27/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1108
மகரம் 9 9 6 9 0 7
கும்பம் 1 3 9 0 3

சீட்டிழுப்பு வாரம் 064
சீட்டிழுப்பு திகதி 27.03.2021
வெற்றி இலக்கங்கள் 20 31 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,457,440

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1235
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 27.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 122,245,380
வெற்றி இலக்கங்கள் 24 32 63 76 K

சனிதா
சீட்டிழுப்பு இல: 3565
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 27.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,675,527
வெற்றி இலக்கங்கள் 25 53 54 60 J

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,921,672/=
திகதி: 27.03.2021
வெற்றி வாரம்: 3116
வர்ணம்: இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 19 49 50 62 தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,464,600

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1409
நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 27/03/2021
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் X 20 27 51 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் 51,201,146/=

சம்பத வாசனாவ உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 422
திகதி 27.03.2021
வர்ணம் சிவப்பு
F 05 17 18 9
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,584,712
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்து



## திருமதி கண்ணகை தில்லைநாதன்

( SLTS - I,
பயிற்றப்பட்ட விஞ்ஞானம் )

பிறந்த திகதி : 1960.03.28

### சேவை விபரம்

மட்/களுதாவளை இராமகிருஷ்ண வித்தி. 1988.08.22 - 1991.02.12

பலாலி ஆசிரியர் கலாசாலை 1991.02.13 - 1993.03.01

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி 1993.03.02 - 1996.05.31

மட் / களுதாவளை மகா வித்தி. 1996.06.01 - 2003.03.06

மட் / குருக்கள்மடம் கலைவாணி வித்தி. 2003.03.07 - 2007.02.16

மட் / செட்டிப்பாளையம் ம. வித்தி. 2007.02.17 - 2008.10.02

மட் / தேத்தாதீவு சிவகலை வித்தி. 2008.10.03 - 2011.06.21


யா / பரமேஸ்வரா வித்தியாலயம் 2011.06.22 - 2020.03.28

சேவையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் ஓய்வுக் காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம். (6378)

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/பரமேஸ்வரா வித்தியாலயம் திருநெல்வேலி

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 10 . 1946



மறைவு 27 . 03 . 2021

## ஆறுமுகம் சுப்பிரமணியம்

( ஓய்வுநிலை இலிகிதர், பரீட்சைத் திணைக்களம், இசுறுபாய )

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் குப்பிழான் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் ( ஓய்வுநிலை இலிகிதர், பரீட்சைத் திணைக்களம், இசுறுபாய ) நேற்று (27.03.2021) சனிக்கிழமை அதிகாலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும் குலமணிதேவியின் அன்புக் கணவரும் சுபத்திரா (நோர்வே), சந்திரிகா (குப்பிழான்), சுதர்ஷன் (இத்தாலி), சர்மினி, தயாளினி (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புண்ணியமூர்த்தி, கிருபாகரன், கௌரி, ரூபாகரன், ராஜ் மோகன் ஆகியோரின் மாமனாரும் ஈழன், கீரன், கிஷன், சகின், தனுஷ்யா, பவிஷ்யா, கபிஷா, நிஷ்வின், அக்ஷயன், கபினாஷ், சைந்தவி ஆகியோரின் ஆருயிர்ப் பேரனும் காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் சின்னப்பிள்ளை (பூமணி), இராசம்மா, சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சண்முகானந்தன், சுத்தானந்தன், இரத்தினம் மற்றும் நித்தியானந்தன், சோதிமணி, சிவானந்தன், மூத்ததம்பி, பரமானந்தம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.03.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக குப்பிழான் காடா கடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1834)

தகவல்:- குடும்பத்தினர்
குப்பிழான் தெற்கு, குப்பிழான்.
077 606 3377
077 465 0911

# கொரோனா தொற்றிலிருந்து மேலும் 243 பேர் குணமடைவு

நாட்டில் நேற்று சனிக்கிழமை மேலும் 243 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 88,388 ஆக உயர்வடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையில் 91,561பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 2,615 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 270 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளான 558 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)


## வேலையாள் தேவை

மில் வேலை செய்வதற்கு ஆண்,பெண் இருபாலாரும் தேவை. ( சம்பளம் : 1500/= மேல் ) (C-1827)

077 936 1356

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை. (C-1831)

077 830 8360, 076 776 8444

## BOC TRAVELS (Pvt)Ltd.
Hospital Road, Jaffna.

BOC Travels நிறுவனமானது கோவிட் - 19 பரவல் காலத்திலும் விமானப் பயணச்சீட்டுக்களை வழங்குவதுடன் இணைந்த தான அறிவுறுத்தல்களையும் பயணிகளுக்கு வழங்குகின்றது. (C-1819)

021 222 4575/76,
070 384 9335, 070 395 1794

## காணி விற்பனைக்கு

யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.(நிலப்பரப்பு)
(தரகர் தேவையில்லை) (6371)

077 596 3845
077 814 7389

## மணமகன் தேவை

1991, Hindu, கௌரவ குடும்பம், Government Job மணமகளுக்கு மணமகன் தேவை. (6159)

தொடர்பு
077 506 8819

## சோ(F)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(F)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புகளை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6301)

077 224 2787

## வேலை ஆள் தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. (6377)

076 704 9351

## மோட்டார் சைக்கிள் தேவை

நல்ல நிலையில் உள்ள பொக்சர் அல்லது டிஸ்கவர் ஒன்று தேவை. (6367)

077 466 9597

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய் ● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய் ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி (C-1767)

0768226240 DHL

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, 41 வயது திருமணமாகாத, சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
(சீதனம் எதிர்பார்ப்பில்லை) (6376)

Viber & WhatsApp
077 905 8615

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-1807)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## அன்னா EXPRESS

விரைவும் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-1768)
070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

நாதம் 302

Viber 076 636 3378

# சங்குநாதம்

வள்ளுவர் ஆண்டு 2052 28.03.2021 தொலைபேசி : 021 222 3378





## முடங்கியது யாழ்.நகர்






## தடுக்கப்பட்டது நிலாவரை அகழ்வு

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## வெசாக் பண்டிகை முடிய நயினையில் அகழ்வு நடக்கும்



வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர, மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

எங்கள் மதிப்புக்குரிய பண்டிதர் பொன்னம்பலவாணர் அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம்.

பண்டிதர் பொன்னம்பலவாணர் சைவத்தையும் தமிழையும் தன் இரு கண்களாகப் போற்றி வாழ்ந்தவர்.

அவரின் இழப்பு சைவத் தமிழுக்குப் பேரிழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் மறைவையொட்டி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

அதுசரி, எப்பவும் வேளைக்கு வாற கங்காணியாரை இண்டைக்கு இன்னும் காணல்ல. என்ன சங்கதியோ தெரியாது.

**மூப்பர்:** விதானையாருக்குச் சங்கதி தெரியாது போல. கங்காணியற்ற குடும்பத்தைத் தனிமைப்படுத்தியல்லோ இருக்கினம்.

**விதானையார்:** ஏன் என்ன நடந்தது?

**மூப்பர்:** கங்காணியாற்ற பேரன் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பாடசாலையில படிக்கிறான். அந்தப் பெடியனுக்கு கொரோனாப் பொசிற்றிவாம். அதுதான் கங்காணியாற்ற குடும்பத்தைத் தனிமைப்படுத்தியிருக்கினம்.

**சாத்திரியார்:** அட நாசமறுப்பு. அப்ப ஆலடியில இருக்கிற எங்களையும் அல்லோ தனிமைப்படுத்தப் போகினம்.

**வாத்தியார்:** சாத்திரியார் பயப்படாதீங்க. கங்காணியாருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்து அவருக்கு பொசிற்றிவ் எண்டால்தான் எங்களை தனிமைப்படுத்துவினம்.

**சாத்திரியார்:** கடவுளே எங்கட வயதுகளுக்கு கொரோனா வந்தா அவ்வளவுதான்.

**சிறாப்பர்:** கொரோனாவால செத்தால் கிரியையும் இல்லை, சுண்ணப்பாட்டும் இல்லை. தனியாப்போய் எரிய வேண்டியதுதான்.

**பண்டிதர்:** எங்கட தலையில எப்படி எழுதியிருக்கோ அதுதானே நடக்கும்.

**விதானையார்:** யாழ்ப்பாணத்தில மாணவர்களுக்குக் கொரோனா ஏற்பட்டுள்ள விடயம் தான் பெரிய பயமா இருக்குது.

**வாத்தியார்:** விதானையார் நீங்கள் ஒண்டும் பயப்படாதீங்க. எங்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை செய்யாததால ஏதோ எங்களுக்குக் கொரோனா இல்லை எண்டமாதிரி இருக்கிறம். நாங்களும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு அகப்பட்டால், எங்களுக்கும் பொசிற்றிவ் எண்டுதான் ரிப்போர்ட் வரும்.

(வாத்தியார் இவ்வாறு கூறியதும் ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது)

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான். திருநெல்வேலி சந்தையில பி.சி.ஆர்.பரிசோதனை செய்யிறதுக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் போனவியளல்லோ. பி.எச்.ஐ. மார் வருகினம் எண்டவுடன சந்தையில இருந்த பலர் தப்பி ஓடினவியளாம்.

**சாத்திரியார்:** ஏன் மூப்பர் ஓடினவியள்.

**மூப்பர்:** தங்களைச் சோதித்து கொரோனா இருக்குது எண்டால் எல்லாம் கரைச்சல்தானே. அதுதான் தப்பி ஓடினவியள்.

**விதானையார்:** கொரோனாத்தொற்று ஏற்பட்ட போதிலும் அதற்குரிய அறிகுறிகள் இல்லாமலும் பலர் நடமாடுகினம். இவ்வாறு அறிகுறி இல்லாதவியள் வந்த கொரோனா அப்படியே மாறிப்போகும். பிறகெதற்கு தனிமைப்படுத்தல் என்ற துன்பத்திற்கு ஆளாகுவான் எண்டு நினைக்கினம் போல.

**பண்டிதர்:** தனிமனிதர்கள் இடைவெளி விட்டு நிண்டால் அது சமூக இடைவெளியாம். குடும்ப உறுப்பினர்களை வெளியில நடமாடாமல் மறித்தால் அது தனிமைப்படுத்தலாம். என்ன செய்யிறது... பண்டிதர் நீண்ட பெருமூச்சு விட்டார்.

**சிறாப்பர்:** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள். எங்களுக்கும் விளங்கக்கூடியதாகச் சொல்லுங்களன்.

**பண்டிதர்:** தனிமனிதர்களுக்கிடையில இடைவெளி பேணப்படுவதை தனியாள் இடைவெளி அல்லது தனிநபர் இடைவெளி எண்டுதானே சொல்லவேணும். அதை விட்டிட்டு சமூக இடைவெளி எண்டு சொல்லுறது எந்தளவுக்குச் சரி. அதுபோல தனிமைப்படுத்தல் எண்டு சொல்லுறம். உண்மையில தனிமைப்படுத்தலிலதான் குடும்ப உறுப்பினர்கள் அங்க இஞ்ச எண்டு போகாமல் ஒன்றாக, ஒற்றுமையாக இருக்கினம். இது தனிமைப் படுத்தலாம். என்ன செய்யிறது எங்கட சொல்லாடல்களை.

**விதானையார்:** நாங்கள் ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையின்ர தீர்மானத்திலும் கொரோனாவின்ர வேகமான பரவுகையிலும் கவனம் செலுத்திக் கொண்டிருக்க, நிலாவரைப்பகுதியில தொல்லியல் திணைக்களம் அகழ்வாராய்ச்சி செய்ய வந்திட்டினமல்லோ.

**வாத்தியார்:** அதுதானே எங்கட வலி. கிழக்குப் பிரதேச சபைச் சேர்மன் தியாகராசா நிரோஷ் சம்பவ இடத்திற்குப் போய் அகழ்வாராய்ச்சி செய்ய முடியாது என்று தடுத்துப் போட்டார்.

**சாத்திரியார்:** இப்படியான தமிழ் உணர்வு மிக்கவர்கள் எங்களிட்ட இருக்கிறதாலதான் ஓரளவுக்கெண்டாலும் பேரினவாத அத்துமீறலைத் தடுக்க முடியுது.

**மூப்பர்:** அதுசரி இந்த முறை வெசாக் பண்டிகை நயினாதீவிலயோ நடக்கப் போகுது.

**பண்டிதர்:** கௌதம புத்தபிரானுக்கு தமிழர் பகுதிதான் பிடித்தமானது போல. நாட்டின் வளமான பெரும்பகுதி இருந்தும் வெசாக் பண்டிகை கொண்டாடுறதுக்கு வட பகுதியை நோக்கி வருகினம் எண்டால் என்ன சங்கதி.

**வாத்தியார்:** புத்தபிரானுக்கு விருப்பமோ, விருப்பமில்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் புத்தரை வணங்குகிற புத்தாக்களுக்கு வடக்கில வெசாக் கொண்டாடினாத்தான் பேரினவாதக் கொதிப்புக்கு சற்று ஆறுதலாக இருக்கும் போல.

**விதானையார்:** எதுவா இருந்தாலும் வெசாக் கொண்டாட்டம் முடிய, நயினாதீவில தொல்லியல் திணைக்களம் கிடங்குகிண்டவரும். இதில நயினாதீவு மக்கள் விழிப்பாக இருந்தால் சரி.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் தறிக்கச் சென்றவர் பிணமாக மீட்கப்பட்டார்

## நிர்க்கதியாய் நின்று கதறும் குடும்பத்தினர்

காலைப்பொழுது வானத்தில் வலம் வந்த கதிரவன் மேகத்தில் மறைந்து வந்துகொண்டிருந்தான். முள்ளியவளை ஐயனார் குடியிருப்பு கலைஞன் சொக்கன் அகாலமாக மறைந்த சோகத்தில் ஆழ்ந்திருந்தது. அந்தக் கலைஞன் வீட்டின் முன்னே ஒரு வைக்கோல் போர். அருகே இரண்டு மாடுகள் கட்டிலே நின்று தம்மை அவிட்டு மேய்ச்சலுக்கு விடும் தம் எஜமான் வரவில்லையே என மரண வீட்டுக்கு வந்து கூடிநின்ற மக்களிடையே தன் எஜமானை அங்கும் இங்கும் பார்த்துத் தேடின.

அழுகுரல் சத்தம் ஒருபுறம், மனைவியும் பிள்ளைகளும், உற்றார், உறவினர்களும் ஆறாத்துயரில் கண்ணீர் வழிந்தோட அழுதவண்ணம் இருந்தனர். பத்துவயதில் ஒரு பெண்பிள்ளை, ஏழு வயதில் ஒரு பெண் பிள்ளை. தந்தையைப் பிரிந்த சோகம். ''அப்பா... எங்கள விட்டிட்டுப் போட்டியளோ. எங்களை ஆரப்பா இனிப்பார்ப்பார்கள். எங்களைப் பள்ளிக்கூடத்திற்கு ஆரப்பா கூட்டிக்கொண்டு போவினம். இப்படி வருவீங்கள் எண்டு நாங்கள் நினைக்கல அப்பா... இனி எப்ப அப்பா உங்களைக் காணப்போறம்... அப்பா... அப்பா... அப்பா...'' என அழுத அந்தப் பெண் பிள்ளையின் ஆற்றாமையை ஈடு செய்ய முடியாது யாவரும் கனத்துப் போய் நின்றார்கள்.

### மூன்று பிள்ளைகளின் தந்தை

கணபதிப்பிள்ளை ஜெயசீலன் என்ற இயற்பெயர் கொண்ட சொக்கன் 1980 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பிறந்தார். முதலாம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகக் கொண்ட இவருக்கு கலைவாணி, அனுஸ்கா ஆகிய இரண்டுபெண் பிள்ளைகளும் உள்ளனர். இருவரும் மு/தண்ணீரூற்று கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி பயில்கின்றார்கள். இவரின் மூத்தபிள்ளை கதிர்வாணன் ஐந்து வயதில் வவுனியா நலன்புரி முகாமில் இடம்பெயர்ந்து இருந்தவேளை கடுமையான காய்ச்சல் காரணமாக இறந்துள்ளார். வாழ்வாதாரத்திற்காய் ஓங்கி வளர்ந்த மரங்களை இயந்திர வாள் கொண்டு கிளைகளை அறுத்தும் தறித்தும் அவர் வாழ்வு ஓடியது. இயந்திரவாள் பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரமும் வைத்துள்ளார். இரண்டு பசுமாடுகளும் சிறியளவிலான கோழிகளும் அவரின் வாழ்க்கையில் உதவிபுரிந்தன. 2021 ஆம் ஆண்டு பங்குனிமாதம் 24 ஆம் திகதி அகால் மரணமடைந்தார்.

### பனை தறித்துக்கொண்டிருந்தவருக்கு என்ன நடந்தது?

''அன்று காலை 8.30 மணியளவில் வீட்டிலிருந்து பூதன்வயலுக்கு ஒரு காணியில கொப்பு கிளைய போட்டுவாறன் என்று தனது உந்துருளியில் புறப்பட்டார். இவருடன் இவருடைய வழமையான உதவியாளரும் சென்றுள்ளார்.

### நடந்தது என்ன?



9.55 மணியளவில் அண்ணனது கைபேசியிலிருந்து அழைப்பு அண்ணிக்கு வந்தது. அவங்கள் கிணற்றடியில நின்றபடியால் பதிலளிக்க முடியவில்லை. பின்னர் அவருடன்சென்றவரிடமிருந்து அழைப்பு எங்களுக்கு வந்தது. இப்படி கொப்பு தலையில அடிபட்டு போட்டுது. ஒருக்கா அவசரமாக வாங்கோ என்று. நாங்கள் பல காணிகளாகத் தேடித்தேடி அண்ணன் வேலை செய்த காணிக்குள் சென்றுவிட்டோம். 45 நிமிடத்திற்குப் பின்னர்தான் வைத்தியசாலைக்கு காவுவண்டியில் ஏற்றிச் செல்ல முடிந்தது. அதுவரைக்கும் தொடர்பாடல் சரியாகச் செய்யமுடியவில்லை. இரண்டு பனைமரம் இருந்தது. முப்பது மீற்றர் தூரத்தில் ஒரு தென்னம்பிள்ளை இருந்தது. அந்தத் தென்னம்பிள்ளை வளைந்து வந்து பனைமரத்துடன் முட்டிக்கொண்டு இருந்தது.

கீழே நின்று அண்ணா பனைதறிக்கும் போது தென்னம்பிள்ளை முறிந்து அண்ணனின் தலையில விழுந்திட்டுது. உச்சியில காயம். உதவியாளர் தான் போட்டிருந்த ரீசேட்டைக் கழற்றி தலையில் கட்டிவிட்டிருந்தார். காணியின் உரிமையாளர் நடந்த செய்தியறிந்தும் இதுவரை வைத்தியசாலைக்கோ, செத்த வீட்டிற்கோ வரவில்லை. போன் பண்ணிக் கூடக் கதைக்கவில்லை என்று சொக்கனது சகோதரி சுகிர்தன் மாதினி குறிப்பிட்டார்.

ஆபத்தை விளைவிக்கக்கூடிய தொழில்களின்போது தொழில் தருநர்கள் அவ்விடத்தில் இருக்கவேண்டும். இந்த வேலைக்கு இரண்டு தொழிலாளிகள் போதுமா? எனச் சிந்திக்கவேண்டும். கூலிகளைக் குறைத்துக்கொள்வதனால் ஆபத்தையே எதிர்நோக்க வேண்டியிருக்கும். தொழில் தருநர்கள் அவ்விடத்தில் இருக்கும்போது விபத்தொன்றிற்கு சரியான தொடர்பாடல் மேற்கொண்டு உரிய நேரத்திற்கு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லமுடியும். குறிப்பாக ஆட்கள் குடியிருக்காத காணிகளில் வேலை நடக்கும் போது கட்டாயம் அக்காணியின் உரிமையாளரோ, தொழில் தருநரோ அவ்வேலைகளைக் கண்காணிக்க கடமைப்பட்டவர்கள்.

சொக்கன் எந்தக் காணியில் வேலை செய்தார் என்ற செய்தி வீட்டாருக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கவில்லை. அவ்வாறு தெரிந்திருந்தால் குறித்த காணியினைக் கண்டுபிடிக்க இருபது நிமிடம் செலவு செய்திருக்கமாட்டார்கள். உறவினர்கள் வீட்டை விட்டுத் தொழிலுக்குச் செல்லும் ஒரு குடிமகன் தனது வேலைத்தளம் தொடர்பாக அறிவிப்பைச் சரியாக வீட்டாருக்கு வழங்கி வைத்திருத்தல் வேண்டும். வீட்டாரும் இடையிடையே அவர்களைப் பற்றி அறிகின்ற வகையில் சரியான தொடர்பாடலின்மையும் தாமதமும் ஒருவரின் உயிரிழப்பிற்குக் காரணமாகி நிற்கும்.

வீட்டாருக்கு வேம்புக்கொப்புக் கிளை தறிப்பதாகக் கூறிவிட்டுச் சென்ற சொக்கன் வேலைத்தளத்தில் ஏன் பனையைத் தறித்தார். ஒரு பனைதறிப்பதாக இருந்தால் பனை தறிப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறல் படிவத்தைப் பூர்த்தி செய்து காணியின் ஆவணத்தின் பிரதியையும் இணைத்து கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலர் ஆகியோரிடம் கையொப்பம் பெற்றிருக்கவேண்டும். இருவரும் தறிப்பதற்காக நியாயமான காரணம் இருக்கும் பட்சத்தில் மாத்திரமே தமது கள விஜயத்தின் மூலம் ஆண்டறிந்து அனுமதி வழங்குவர். இருவரின் அனுமதியைத் தொடர்ந்து காணி உரிமையாளர் அப்படி [illegible]. பனை அபிவிருத்திச் [illegible] அவர்களும் கள விஜயம் செய்தபின்னரே அனுமதி கொடுப்பர். இந்த நடைமுறைகளைப் பின்பற்றாமல் ஒரு பனையையோ ஒரு வடலியையோ தறிக்கமுடியாது. அவ்வாறு தறிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக உரியவர்கள் சட்ட நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

சொக்கனின் மனைவி செஞ்சுதா ஏற்கனவே கிளைமோரில் தனது தந்தையைப் பறிகொடுத்தவர், ஒரு தம்பியை நாட்டுக்காக இழந்தவர், மூத்த ஆண் பிள்ளையை காய்ச்சலால் இழந் தவர். தற்போது எல்லாமாகி நின்ற தனது கணவனையும் இழந்து நிற்கின்றார். தொடர்ந்து பலவகையான இழப்புக்களைச் சந்தித்து வரும் செஞ்சுதாவின் வாழ்வு மிகவும் நெருடலான வாழ்வு. பலமாகவும் ஆதரவாகவும் துணையாகவும் நின்ற உயிர்களை அடுத்தடுத்து இழந்து நிற்கின்றார். கோழிகளை வளர்த்து அதனூடாக முட்டைகளை விற்றும் இரண்டு பசு மாட்டின்மூலம் பால் கறந்து விற்றுமே பிள்ளைகளின் கல்விக்கு உறுதுணையானார். இழப்புக்களிலிருந்து விடுபடுவதற்கும் இழப்புக்கள் யதார்த்தமானவை என்பதை ஏற்றுக்கொள்ள உளவியல் ரீதியாக முதலில் யார் இவளுக்கு உதவப்போகிறார்கள். பின்னர் இரண்டு பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கும் வீட்டுப் பொருளாதாரத்திற்கும் யார் கரம் நீட்டப் போகிறார்கள்?

சொக்கன் ஒரு சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞன். போராட்டகாலத்தில் ஐந்து வருடத்திற்கு மேலாக எழுச்சி தெருவெளி நாடகக் கலைஞனாய் வலம் வந்தவர். செங்குந்தா வீதியிலே பிறந்த எந்தக் குழந்தையும் கண்ணகி- கோவலன் கூத்தை அறியாமல் வளர்ந்ததில்லை.

### சொக்கனின் மரணத்தில் சந்தேகம்

எனது அண்ணனின் மரணத்தில் சந்தேகம் இருக்கிறது. நான் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளேன். இதன் வழக்கு மேமாதம் 20 ஆம் திகதி இருக்குது. இறந்தவரின் சகோதரன் கணபதிப்பிள்ளை துசியந்தன் தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டார். இவரின் முறைப்பாடு காரணமாக சொக்கனின் உடல் புதைக்கப் பட்டது.

சொக்கனும் அவரது மனைவி செஞ்சுதாவும் அண்மையில் சமுர்த்தியில் லோன் எடுத்து தமது வீட்டோடு சிறிய கடை போடுவதாக இருந்தார்கள். கடை போட்டால் கணவரால் கடுமையான வேலைகளுக்குச் செல்ல வேண்டியிருக்காது. வீட்டோடு இருப்பார் என்று மனைவி நினைத்திருந்தார். ஆனாலும் அவர் களது அந்த முயற்சி கைகூடாத வேளையில் மீண்டும் சொக்கன் இயந்திர வாளைத் தனது கரங்களில் எடுத்து வேலை பார்த்து வந்தார். குடும்பத் தலைவனை இழந்த அந்தக் குடும்பத் தலைவியின் நிலை என்ன? இரண்டு பெண் குழந்தைகளின் எதிர்காலம் என்ன? இங்ஙனமாக கேள்விகள் அத்தனையும் விடைகாணாத வினாக்களாக அமையப் போகிறதா? இதில் மனித சமூகத்தின் பொறுப்பென்ன?

இப்போது பறைகளின் சத்தம் ஓய்ந்து அழுகுரல்களின் சத்தமும் ஓய்ந்து மனதில் மட்டும் அழுகின்ற அழுகைச் சத்தம் கேட்கின்றது. விதியின் கரங்களில் விபத்தா? அல்லது விபத்தின் கரங்களில் விதியா? என விளங்கிக்கொள்ள முடியாது மரணம் தன் விலாசத்தை மட்டும் விளங்க எழுதிக்கொண்டது.

ஜெயம் ஜெகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## வேலை இழந்த சேவகர்கள்



ஒருநாள் காலையில் அக்பரும், பீர்பாலும் அரண்மனை முற்றத்தில் நின்று கொண்டிருந்தனர்.

சூரியனுடைய பொன்னிறக் கதிர்கள் பட்டதால், யமுனை நதி தனி அழகுடன் விளங்கியது. தங்கத்தை உருக்கி வார்த்ததைப் போல் யமுனை நதி ஓடிக்கொண்டிருந்தது.

இந்த அழகிய காட்சியைக் கண்டு ரசித்தவாறு வெகுநேரம் தம்மை மறந்து நின்று கொண்டிருந்தார் அக்பர்.

அப்போது திடீரென்று, "மகாராஜா! மகாராஜா! திருடன் என் பொருட்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போகிறானே! உங்கள் கண்ணெதிரிலா இந்த அக்கிரமம் நடைபெறுவது?" என்று ஒரு கூச்சல் கேட்டது.


சக்கரவர்த்தி திடுக்கிட்டவாறு, குரல் வந்த திசையை நோக்கினார். அரண்மனைக்கு வெளியே திருடர்கள் நாலைந்து பேராகச் சேர்ந்து ஒருவனை அடித்து அவனிடமிருந்து பொருட்களை அபகரித்துச் சென்றதைப் பார்த்தார்.

இதைப் பார்த்ததும் அவருக்கு ஆத்திரம் அதிகமாகியது. "நம் எதிரிலேயே இந்த அக்கிரமம் நடைபெறுவதா?" என்று வருந்தினார்.

உடனே, சேவகர்களில் சிலரை அனுப்பி அந்தத் திருடர்கள் எங்கிருந்தாலும் அவர்களைப் பிடித்து வருமாறு உத்தர விட்டார் அக்பர். சிறிது நேரம் சென்றது. சேவகர்கள் வெறுங்கையுடன் திரும்பினர். "நாங்கள் செல்வதற்குள் திருடர்கள் ஓடிப் போய்விட்டனர்" என்று சக்கரவர்த்தியிடம் கூறினர் சேவகர்கள்.

இதைக்கேட்ட அக்பர் மேலும், கோபமடைந்தார். "ஒன்றுக்கும் பிரயோசனம்இல்லாதவர்கள். அரண் மனை எதிரிலேயே கொள்ளையடித்துக் கொண்டு போகிறார்கள் பார்த்துக்கொண்டு பேசாமல் தானே இருந்திருக்கிறீர்கள். (தொடரும்)

# மகாபாரதம்




### சூதாட்ட அழைப்பு

ராஜசூயயாகம் முடிந்தபின் துரியோதனன் பொறாமையால் மனம் புழுங்கினான்.

பாண்டவர் ஆட்சியிலிருக்கும் வரை என் ஆட்சியும் ஒரு ஆட்சியா? அருச்சுனனின் காண்டீபம் என்ற வில்லும், பீமனின் கதாயுதமும் என்னை இகழ்ச்சி ஆக்கிவிடும் போல இருக்கிறது.

ராஜசூய யாகத்திற்கு எவ்வளவு மன்னர்கள் [illegible] வந்தனர், எவ்வளவு [illegible] பரிசுகளைக் கொண்டு வந்து கொட்டினார்கள்.

அந்த தர்மனிடம் அப்படி என்ன இருக்கிறது? என்று பொறாமைத் தீ கொழுந்து [illegible] பாண்டவர் வாழ்வை அழித்து விட வேண்டும் என தன் மாமனாகிய சகுனியை சரண் அடைந்தான்.

மாமனே! அவர்கள் செய்த யாகத்தை மறக்கமுடியவில்லை. அங்கு வந்த பொருட் குவியலைப் பற்றிக் கூட எனக்குக் கவலையில்லை.

ஆனால் அவ்வேள்வியில் என்னை கேலி செய்தனர். எள்ளி நகையாடினர் என்றெல்லாம் சொல்லி என் தந்தையைப் பொறாமை கொள்ளச் செய் என்றான்.

உடன் சகுனி "நீ ஒப்பற்ற தெய்வமண்டபம் ஒன்று செய். அதன் அழகைக் காண பாண்டவரை அழைப்போம்.

மெல்லப் பேசிக் கொண்டே சூதாட்டம் ஆட தர்மனை சம்மதிக்க வைப்போம்.


என் சூதாட்டத்தின் திறமையை நீ அறிவாய். அதன் மூலம் அவர்களை உனக்கு அடிமையாக்குவேன்" என்றான்.

இருவரும் திருதராட்டினனிடம் சென்று உரைத்தனர். ஆனால் அவன் சம்மதிக்கவில்லை. ஆனால் சகுனி சொல்கிறான்.. "உன் மகன் நன்கு சிந்திக்கிறான்.

ஆனால் பேசும் போது தான் தடுமாறுகிறான். அவன் நீதியை இயல்பாகவே அறிந்துள்ளான். அரச நீதியில் தலைசிறந்து விளங்குகிறான்.


பிற மன்னர்களின் செல்வமும் புகழும் வளர்வது தான் ஒரு மன்னனுக்கு ஆபத்து. (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தில் கொரோனாவின் மூன்றாம் அலையாமே உண்மையா வியாசரே?



ஐ.நா. தீர்மானத்திற்கு செலவழிக்கும் பணத்தை மக்கள் நலனுக்குப் பாவிக்கலாம் என்கிறாரே வெளிவிவகார அமைச்சர்?

**சி.நிலா — சுழிபுரம்**

**நீங்கள் மகாபாரத வியாசரா அல்லது வலம்புரி வியாசரா?**

அதர்மம் மேலோங்கிலும் இறுதியில் தர்மமே வெல்லும் என உணர்த்த இதிகாசத்தை தந்தான் அந்த வியாசன்.

தமிழினம் பட்ட சொல்லொணா வலிகளுக்கும் இழந்த இழப்புகளுக்கும் யுத்த மீறல்களுக்கும் இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டும் என ஐ.நாவை அழுத்தும் ஆயிரம் ஆயிரம் வியாசர்களில் இந்த வலம்புரி வியாசனும் ஒருவன்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**ஐ.நா. தீர்மானத்திற்கு செலவழிக்கும் பணத்தை மக்கள் நலனுக்குப் பாவிக்கலாம் என்கிறாரே வெளிவிவகார அமைச்சர்?**

எந்த மக்கள் நலனுக்குப் பாவிக்கப் போகிறீர்கள்? தமிழரின் பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சி செய்து இது பௌத்த நாடு என்பதை நிரூபிப்பதற்கா? இல்லை தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளவா? இல்லை இது பௌத்த நாடு இங்கு நாங்கள் வைத்தது தான் சட்டம் என்று எகத்தாளம் பேசுவதற்கா?

எதற்குச் செலவழிக்கப் போகிறீர்கள் சொல்லுங்கள்?

நாம் பட்ட வலிக்கு மருந்து கேட்கிறோம். நீங்கள் வலிக்கு மருந்திட வேண்டாம். மருந்திட முன்வருபவரை தடுக்காமல் இருந்தாலே போதும்.

**சிவம் — வதிரி**

**அடிப்பது போல் நடிக்க அடிவிழுவது போல் அழுத சந்தர்ப்பம் உண்டோ வியாசருக்கு?**

தாய்பிள்ளை உறவில் அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அம்மா அடித்த அடி எதுவும் என்னில் விழாது என்னைச் சுற்றி நிலத்திலே விழும்.

ஆனால் நான் அம்மா, அம்மா என்று கதறி அழுவேன். அவள் தடியைப் போட்டுவிட்டு என்னைக் கட்டி அணைத்து "செல்லத்துக்கு யார் அடிச்சது" என முத்த மழை பொழிவாள்.

அந்த பொற்காலம் இனி வந்து விடப் போவதில்லை.

**ம.திருவரதராசா — வவுனியா**

**பிறரை வதைப்பவர்களின் ஆன்மா மறு பிறப்பில் எப் பிறப்பெடுக்கும் வியாசரே?**

புல்லாகிப், பூடாய், புழுவாய், மரமாகி, வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்... என்கிறது சிவபுராணம்.

பிறரை வதைத்து கர்மாவைத் தேடும் மனிதனுக்கு மறு பிறப்பு உண்டென்கிறது சைவம்.

அந்தப் பிறப்பு எதுவாகவும் இருக்கலாம். ஆனால் செய்த கர்மாவிற்கு அனுபவித்தே ஆக வேண்டும்.

மனிதன் என்றால் உணவின்றி, உறவின்றி. மரமென்றால் நீரின்றி, ஒளியின்றி. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

**சுதன் — குப்பிழான்**

**தீர்வுகள் இல்லாத தீர்மானத்தால் இலங்கை அரசை பொறுப்புக்கூற வைக்க முடியுமா வியாசரே?**

தம்பி சுதன் ஒரு உணவைச் சமைக்கின்றோம் என்றால் அதற்கு உப்பு, புளி, தூள், மசாலா என அனைத்தும் அளவாக இருக்க வேண்டும். அதுவே முழுமை.

இது, வைத்த கறிக்கு உப்புப் பத்தாது, உறைப்பு கொஞ்சமும் இல்லை, புளி கடுமையாகச் சுள்ளுடுது, மசாலா போடவே இல்லை.

இதை உண்டென்ன? உண்ணாமல் விட்டென்ன?

பேசாமல் உழைத்து முன்னேறும் வழியைப் பாருங்கள் தம்பி.

ஐ.நா.தன்னுடைய வேலையைப் பார்க்கட்டும்

**திஷா — மானிப்பாய்**

**மறுபடியும் லொக் டவுனா? நினைக்கவே பயங்கரமா இருக்கு வியாசரே?**

பேச்சுப் பேச்சாத்தான் இருக்கனும் தொட்டுப் பேசுற வேலை வச்சுக்கக் கூடாது. எப்பவும் நாலடி தள்ளியே நில்லு என மறுபடியும் சொல்ல வைத்துவிட்டதே இந்த கொடிய கொரோனா.

**டுகிந்தன் — புலோலி**

**வாழ்வில் நான் நல்லவனாக வாழவா? இல்லை கெட்டவனாக வாழவா? வியாசரே?**

நீ நல்லவனா? கெட்டவனா? என்பதை இந்த சமூகம் தீர்மானிக்கக்கூடாது. அதை நீயே தீர்மானிக்க வேண்டும்.

உனது நல்லதை இந்த சமூகம் தீயதாகக் கருதி நீ கெட்டவன் என்று சொன்னால் நீ கெட்டவனாகி விடமாட்டாய்.

அதே உனது கெட்டதை இந்த சமூகம் நல்லதாகக் கருதி உன்னை நல்லவன் என்றால் நீ நல்லவனாகி விடமாட்டாய்.

உனக்குள் ஒரு தராசை என்றும் வைத்துக் கொள். அதில் உன்னை எடைபோடு நீ நல்லவனா? கெட்டவனா? என்பதை.

**கமல் — வல்வை**


**யாழ்ப்பாணத்தில் கொரோனாவின் மூன்றாம் அலையாமே உண்மையா வியாசரே?**

முழுதாய் நனைந்த பின் முக்காடு எதற்கு என்பது போல இருக்கிறது இந்த மூன்றாம் அலை என்பது.

கொரோனா இல்லாமல் யாரும் இருந்தால் அது பெரும் அதிர்ஷ்டம் என்பதாய் நிலை இப்போது இருக்கிறது.

மக்களே நாட்டை முடக்க நினைக்கவில்லை. தயவு செய்து கட்டுப்பாடுகளை பின்பற்றுங்கள் என துறைசார்ந்தோர் கெஞ்சக் கெஞ்சக் கேட்டீர்களா? இல்லையே?

இப்போது அது பூதாகரம் எடுத்த பின்பு அவர் பிழை இவர் பிழை என்று பலன் என்ன? இனி இறைவன் விட்ட வழி.




**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **021 567 1532** என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் சாரல்



அன்று
யாரையுமே அறியாத நிமிடங்கள் அவை
இன்று
எவரையுமே மறக்க முடியாத கனவாய் ஆனது

ஆழமாய் என்னைப் புரிந்த- என்
தாய் உணர்வையே- தொட்டுச்
சென்றது இன்று என்
நட்பின் புரிந்துணர்வு

நண்பர்கள் நாம் ஒன்றாய் சேர்கையில்
இனம்புரியாத ஓர் பிணைப்பைக் கண்டோம்
எம் சோகங்கள் பகிர்கையில்
நம் நட்பின் ஆழம் அறிந்தோம்

காரணம் இன்றி சண்டைகள்
போட்டோம்- அந்நினைவை
இன்று பொக்கிஷமாய் சேர்த்தோம்
நம் மனதில்...

வாழ்க்கையில் மிகச் சிறந்த
நினைவுகளாய் மாறின
நட்பின் நினைவுகளே
நட்பின் சாரலிலே இப்படிக்கு நான்

ம.கோல்டாமேரி, யா/ புனித தெரேசாள் ம.க.

# அன்னை அருகினில் ஏது பயம்?

லி.ஜனார்த்தனன்
மறவன்புலோ மத்தி




ஐவிரல் சேர்த்து அச்சம் கொடுக்க
மறுகரம் எதிர்த்து துச்சமெனக் கொள்ளும்
பயத்திலைப் பறிபோகச் செய்து
பலத்திலை வெளிவரக்காட்டி
தனித்தே போராடி எனைக் காக்க
தன்னம்பிக்கை புரியும் தாயிவள்
தானிருக்கும் வரை துன்பம் நெருங்காமல்
நானிருப்பேன் என்றழைக்கும் தூயவள்
அன்னை அருகிருக்க ஏது பயம்?
அரவணைக்க கையிருக்க எல்லாம் மாயம்
அன்பு எனும் ஆயுதம் ஏந்தி போர் தொடுக்கும்
அவனியின் எட்டா அதிசயம் அன்னையிவள்

# நீதி

உயிரோவியன்

நியாயம் கேட்டு நடந்து கொண்டிருக்கிறது காலம்
நிகழ்கால வீதியில் நீதி கேட்டவர்கள் விசாரணை
யுத்தம் இல்லாமல் நடந்த யாத்திரைக்கு
குண்டுகள் வைக்கிறது வார்த்தைகள்
சமாதானம் முகமூடிகளோடு இருப்பதால்
தேவைப்படுகிறது உண்மையான சமாதானம்

# பனைமரக்காடு



விளைநில விதைகள் வீரங்கள் ஆனது
பனைமர நினைவுகள் கதைகள் ஆனது

புன்னகை நிறைந்த நாட்களும் கடந்தது
உறவுகள் பிரிந்து வருடங்கள் ஆனது

உடைமைகள் இழந்து வாழ்க்கையும் கடந்தது
உரிமைகள் இழந்து அடிமையானது

வீரம் விளைத்தவர் கல்லறை இன்று
சிதைவுகள் ஆனது சிற்றின்ப நோக்கில்

ஒரு படைத்தமிழன் வீழ்ந்தது அன்று
உணர்வுகள் தடுத்த காரணமொன்றே

தமிழ் இன மண்ணில் உரிமை இழந்த
பிற இன கயவர் ஆட்சியும் தோன்றுது

நினைவுகள் சூழ்ந்த பனைமரக்காடு
கனவுகள் பெறுமோ இத்தமிழ்க் கவியில்

ந.விதுஷன், யா/ கற்கோவளம்
மெ.மி.த.க.பா

# மௌனத்தின் தேடல்- 521



## பெண்மை போற்றி

நிலவு முகம் நீள விழி
கயலை மேவி பழிக்குமாம்
சிற்றிடையும் சிருங்காரமும்
சேர கலைநயம் காட்டுமாம்
வஞ்சியுனை வன்மனமாய்
வளர்த்துவிட்டது சமூகமா?
வாழ்க உலகம் பெண்மை
போற்றி மலரும் மனமாகுமே

வைகைவாசன், நல்லூர்

## பெருமைதனைப் பறைசாற்றுகின்றது

பெண் எதற்கும் சளைத்தளல்ல
பெண்ணின் பெருமை தனை
பறைசாற்றுகின்றதே இச்செயல்
இறைவன் படைப்பினிலே
ஆணைவிடப் பெண் பலம் குறைந்தவளெனினும்
மனத் தைரியம் ஒன்றினாலே
சாதித்துவிடுவாள் எதனையுமே

த.காமினி, நாவலர் வீதி

## மேதினிக்கு உணர்த்துமா?

அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
அணியொளிரும் பெண்மையா?
மெச்சும் வகை உடல் உழைப்பு
மேதினிக்கு உணர்த்துமோ?
பெண்மை போற்ற மறந்துவிட்ட
சமூகம் நீதி பேணுமா நினை
கண்டு மனம் திருந்தி வாழ்வில்
பெண்மை போற்றி வாழலாம்


வைகதள்
கொக்குவில்

## இது துன்பச் சுமையல்ல

வறுமையில் வாழும்
பெண் தலைமைத்துவப்
பெண்ணிவளுக்கு
தன் வாரிசுகளின்
நிமிர்வுக்காக
எத்தொழிலும் சரி நிகரே...
ஆணும் பெண்ணும்
சமத்துவ நிலையில் வாழும்
நிலைக்கு— இது
நல்லதொரு சான்றே...!
குடும்ப மேன்மைக்காக
சில்லாய் சுற்றும்
பெண்ணிவளுக்கு
இச்சில்லின் சீரமைப்பு—ஒரு
துன்பச் சுமையே அல்ல...

[illegible]
நுணாவில் மேற்கு

# மௌனத்தின் தேடல்- 522



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை / ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## துணிவே துணை

மனோதிடமும் முயற்சியும் ஆணுக்குப் பெண் சளைத்தவளல்ல
சந்தர்ப்பவாத உலகில் அடக்க அடங்கி வாழாது
கடின உழைப்போடு தலைநிமிர்ந்து வாழ்ந்தாலே
சந்ததிக்கு உயரிய வழி கிடைக்கும் தாய்ப்பாசம் அன்பு கருணையோடு
வீரம் துணிவு பெற்றிட வேண்டும்

ம.திருவரதராசா,
மில் வீதி, வவுனியா

## உழைக்கும் கரங்கள்

மானுடப் பெண்ணாய் தரணி தன்னில் வந்துதித்து
இவ்வையகம் தனை மாட்சிமைப்படுத்திடவே
கைகள் தன்னில் ஆயுதம் ஏந்தி சளைத்திடாத வேட்கை உணர்வுடனே
வாகனச் சில்லுதனை கால்களின் வலிமையுடனே
உழைப்பாளி வர்க்கத்தினை உன்னதப்படுத்தி
உயர்த்திடும் புதுமைப்பெண் நீயல்லவா?

ஆ.பாலமதுஜா,
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசறை விபத்து யார் காரணம்?

**“சாரதிகளைக் கைது செய்வதுடன் முடிந்து விடாது வீதியோரத்தில் நீண்ட நாட்களாய் அகற்றப்படாமல் இருந்த பாறாங்கற்களை அகற்ற நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் நடவடிக்கை தேவை.”**

ஒடுங்கிய பாதை ஒன்று. இடப்பக்கம் பாரிய மலைப்பாங்கும் வலப்பக்கம் 200 தொடக்கம் 300 அடிகளுக்கும் மேற்பட்ட பாரிய பாதாளத்தையும் கொண்டது அந்த மிகவும் ஆபத்தான பாதை.

ஆனாலும் அந்த அச்சுறுத்தல் மிக்க பாதை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

ஆபத்து நிறைந்த அந்தப் பாதையின் இடதுபுற மலைப் பாங்கான பாதை ஓரத்தில் மலைச் சரிவு ஒன்று ஏற்பட்டு பாறைகள் வீதியின் ஓரத்தில் சற்று அதிகமாகக் காணப்படுகின்றன.

இடப்புறமாக ஒரு டிப்பர் ரக வாகனம் ஒன்று வீதியில் அகற்றப்படாமல் இருந்த அந்த பாறாங்கற்களை தாண்டி வலப்பக்கமாக மேவிச் செல்கிறது.

ஆபத்தான வளைவு நிறைந்த அந்த இடத்தில் இடப்பக்கத்தில் இருந்து ஒரு பேருந்து அசுர வேகத்தில் வருகிறது.

வீதியோரத்தில் அகற்றப்படாமல் இருந்த கற்களை மேவி எடுக்கப்பட்ட டிப்பருக்கு வழிவிட சந்தர்ப்பம் வழங்க முடியாத வேகம் சாரதியின் கட்டுப்பாட்டைக் குலைக்க, வலப்பக்கம் இருந்த 200 அடிப் பள்ளத்தில் அந்தப் பயணிகள் பேருந்து தடம் புரண்டு உருண்டு செல்கிறது.

இந்தக் காட்சி திரைப்படக் காட்சியல்ல, நிஜமானது.

ஆம், பதுளை, பசறைப் பகுதியில் நடந்த கோரவிபத்தின் சி.சி.ரி.வி.காட்சியே இவ்வாறு விரிந்து செல்கிறது.

பேருந்து தடம்புரண்டதன் அடுத்த கணமே அந்த வீதி பதற்றமடைகிறது.

தடம்புரண்ட பேருந்து உருண்டுசென்று 200 அடி ஆழத்தில் நிலைகுலைந்து கிடக்கிறது.

செய்வதறியாது திகைத்து நின்ற பொதுமக்கள் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு செங்குத்தான அந்த ஆபத்து நிறைந்த பள்ளத்தில் மின்னல் வேகத்தில் இறங்குகின்றனர்.

மரண ஓலம். பேருந்தில் இருந்தவர்கள் அனைவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

செங்குத்தான அந்த மலைப் பகுதியில் இருந்து காயமடைந்தவர்களைக் கயிற்றின் உதவியுடன் மேல் பகுதிக்குக் கொண்டுவர மனிதநேயம் கொண்ட மனிதச் சங்கிலி இயந்திரமாய்ச் செயற்பட்டுக்கொண்டிருந்தது.

விரைந்து வந்த அம்புலன்ஸ் வண்டிகள் காயமுற்றவர்களை ஏற்றிக் கொண்டு வைத்தியசாலை நோக்கி விரைந்தன.

சம்பவ இடத்திலேயே முதலுதவி நடவடிக்கைகளும் நடந்து கொண்டிருந்தன.

கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை பதுளை லுனுகலையில் இருந்து கொழும்பு நோக்கிப்புறப்பட்ட பேருந்தே பசறை 13 ஆம் கட்டைப் பிரதேசத்தில் பாதாளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத இந்தக் கோர விபத்தில் 15 உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன் 27 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து என்பது கணப்பொழுதில் ஏற்படுகிறது என்றாலும் விபத்து ஏற்படக்கூடிய அபாயம் நிறைந்த இடத்தில் விபத்தொன்று நடைபெறுகின்றது. அந்த விபத்தில் பல உயிர்கள் பலி ஆகின்றது எனின் இது யார் தவறு?



குறித்த விபத்து நடைபெறுவதற்கு முதன் நாள் விபத்துக்குள்ளான பேருந்து மிகவும் வேகமாக பயணித்ததாகவும் விபத்தை ஏற்படுத்தும் பல சந்தர்ப்பங்களில் மயிரிழையில் தவறியதாகவும் குறித்த விடயத்தை பேருந்தில் பயணம் செய்த பயணிகள் கடுமையாக எச்சரித்ததன் விளைவாக குறித்த சாரதி கோபங்கொண்டு மிகவும் மெதுவாகப் பேருந்தைச் செலுத்தி தனது கோபத்தை வெளிப்படுத்தியதாகவும் பயணி ஒருவர் தனது ஆதங்கத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

குறித்த செயற்பாடு நடந்த அடுத்த நாள் அதே பேருந்து விபத்துக்குள்ளாகி 15 பேரின் உயிரைக் காவு கொண்டது எனின் யாரை மனம் நொந்து கொள்வது.

Driver (ரைவர்) என்பது ஆங்கிலச் சொல்லாக இருந்தாலும் அது இறைவன் எனத் தமிழில் பொருள் கொள்ள முடியும்.

அதாவது இறைவன் எவ்வாறு உயிரினங்களைப் பாதுகாக்கிறானோ அதே போல ரைவர் தன்னை நம்பி வாகனத்தில் இருக்கும் பயணிகளின் உயிரைக் காத்தல் வேண்டும். மகாபாரதத்தில் சாரதி பரந்தாமன் தனது தேர்ச்சில்லை நிலத்தில் பதித்து பிரம்மாஸ்திரத்தில் இருந்து அர்ஜூனனைக் காப்பாற்றினான்.

உயிரைக் காப்பவனே சாரதி. அவனே இறைவன் ஆகிறான்.

விதி என்பது நாம் எங்கு ஓடி ஒளிந்தாலும் நம்மைப் பற்றியே தீரும் என்பதற்கு இந்தக் கொடிய விபத்தில் மேலும் ஒரு மனதை உருக்கும் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

அன்று குறித்த பேருந்தை தவறவிட்ட இளம் தம்பதிகள் முச்சக்கரவண்டி ஒன்றைப் பிடித்து குறித்த பேருந்தை துரத்திவந்து பேருந்தை நிறுத்தி அதில் ஏறிக் கொண்டதும் அதன்பின் அந்தப் பேருந்து விபத்துக்குள்ளானதில் அவர்கள் இருவரும் ஸ்தலத்திலேயே பலியானதும் விதியென்பதை நொந்து கொள்வதை விடவேறு எதையும் செய்துவிட முடியாது.

குறித்த இளம் தம்பதியருக்கு மூன்று பிள்ளைகள் இருப்பதுடன் மூத்த பிள்ளைக்கு வயது வெறும் எட்டு வயது என்பதே மனதை ரணமாக்குகிறது.

தந்தை-தாய் என இருவரையும் இழந்து நிர்க்கதியாய் தவிக்கின்றனர் அந்தப் பிஞ்சுக் குழந்தைகள்.

பெற்றோரை இழந்து நிர்க்கதியாய் நிற்கும் அந்தப் பிஞ்சுகளுக்கு யார் உதவுவார்கள் என சமூக ஊடகங்களில் பதிவுகள் வலம்வர அந்த மூன்று பேரையும் தான் தத்தெடுக்கத் தயார் எனவும் மூவரையும் தன்னிடம் சட்ட ரீதியாக ஒப்படைக்குமாறும் ஒரு வைத்தியர் தெரிவித்திருப்பது மனிதாபிமானம் இன்னமும் மனித மனங்களில் இருந்து அகற்றப்படவில்லை என்பதனை எடுத்துக் காட்டி நிற்கிறது.

கொடிய பேருந்து விபத்தில் தனது நான்கு வயது குழந்தையுடன் பயணித்த தாய் ஒருவர் தனது விபத்துத் தொடர்பான அனுபவத்தைக் கூறும் போது,

“நானும் எனது குழந்தையும் பதுளை வைத்தியசாலைக்குச் செல்வதற்காக காத்திருந்து 20 ஆம் கட்டையில் பேருந்தில் ஏறினோம். குழந்தையை மடியில் வைத்தபடி நான் நித்திரையாகி விட்டேன்.

திடீரென மிகப் பெரிய சத்தம் கேட்க நான் விழித்த போது பேருந்து உருண்டு செல்வதை நான் உணர்ந்தேன்.

கணப்பொழுதில் நடந்த இந்தச் சம்பவத்தில் எனது குழந்தை எனது கையில் இருந்து தவறி விட்டது.

எனக்குக் கடுமையான காயம். ஆனாலும் நான் எனது குழந்தையைக் காப்பாற்றுங்கள் எனக் கதறினேன்.

என்னை மீட்டு மேலே கொண்டு வந்தார்கள். நான் மேலே வந்ததும் எனது குழந்தையைத் தேடிக் கதறினேன்.

எனக்கு முன்பே எனது குழந்தையை மீட்புப் பணியாளர்கள் மேலே கொண்டு வந்துவிட்டார்கள். குழந்தைக்கும் கடுமையான காயங்கள். நானும் குழந்தையும் தற்போது வைத்தியசாலையிலே இருக்கின்றோம்” என்றார்.

கணப்பொழுதில் ஏற்படுவதே விபத்து. ஆனாலும் அதன் தாக்கம் மனித வாழ்வில் ஈடு செய்ய முடியாது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமக்கு அவசரம் என நினைத்து அதிவேகத்தில் செல்வதனால் பாதிக்கப்படுவது நாம் மட்டுமல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது சமூகப் பொறுப்பாகும்.

குறித்த விபத்து நடைபெற்ற இடத்தில் மலைச்சரிவினில் கொட்டிக்கிடந்த பாறைகள் நெடுநாளாக அகற்றப்படாமையே இந்த விபத்திற்கு மிகப் பிரதானமான காரணமாகும்.

டிப்பர் சாரதியைக் கைது செய்தமையுடன் குறித்த கற்களை அகற்றாமை தொடர்பில் அது தொடர்பான அதிகாரிகளின் மீதும் நடவடிக்கை தேவை.

அவ்வாறு செயற்பட்டாலே மீண்டும் ஒரு பசறை விபத்து போல ஏற்படாமல் இருக்க வழி வகுக்கும். வீதி விபத்தில் விதி முடிவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. அவ்வளவே.

மாவை.நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாரெட் போகலாம் வருகிறீர்களா?

## மாயமில்லை மந்திரமில்லை


'பொய் சொல்பவன் தவறான நாட்டுக் கடவுச்சீட்டுடன் விமான நிலையத்துக்கு வருவானா?', 'அப்படி வந்திருந்தாலும் எப்படி விமானத்தில் பயணம் செய்தான்?', 'பொய் சொல்லி இங்கு வர வேண்டிய அவசியம் என்ன?' எத்தனை கேள்விகள்... எதற்கும் பதில் கிடைக்கவில்லை. அனைத்தையும் அவனிடம் அப்படியே கேட்டார். அவன் அழும் நிலைக்குப் போய் விட்டான். அப்போது ஓர் ஆச்சரியம் நடந்தது. அதுவரை ஆங்கிலத்தில் உரையாடியவன், ஜப்பானிய மொழியில் பேச ஆரம்பித்தான். திகைத்துப்போனார் அதிகாரி. ஐரோப்பியன் ஒருவன் அந்த அளவுக்குத் தெளிவான உச்சரிப்புடன் ஜப்பான் மொழி பேசியதை அவர் இதுவரை கண்டதில்லை. அவ்வளவு சரளம்.

தான் ஜப்பான் தொழிற்சாலை ஒன்றுடன் செய்துகொண்ட வியாபார ஒப்பந்தக் கடிதம் கோப்பினுள் இருப்பதாகவும் அந்தத் தொழிற்சாலையின் விலாசமும் தொலைபேசி இலக்கமும் அதிலிருப்பதாகவும் அவர்களுடன் தொடர்புகொண்டு கேட்கும்படியும் ஜப்பானிய மொழியில் சொன்னான். துள்ளியெழுந்தார் அதிகாரி. 'அப்பாடா! இந்த விடயத்துக்கு முடிவு கிடைக்கப் போகிறது' என்று ஒப்பந்தத்தை வாங்கிப் பார்த்தார். அவன் சொன்னதுபோல அனைத்தும் இருந்தன. காவலர்களை அழைத்து, அந்த விலாசத்திலுள்ள தொழிற்சாலையில் விசாரிக்கக் கட்டளையிட்டார். தொலைபேசியை அவனிடம் கொடுத்து, அவர்களுடன் பேசவும் அனுமதித்தார். அவன் டயல் செய்த இலக்கம் கிடைக்கவே இல்லை. எதிர்ப்பக்கத்திலிருந்து எதுவும் கேட்கவில்லை. வெறும் காற்றுச் சத்தம் மட்டும் கேட்டது. வெளியே சென்று பொலிஸாருடன் தொடர்புகொண்டு விசாரித்த காவலதிகாரிகள் திரும்பி வந்தனர். 'அப்படியொரு கம்பனியோ, அவர் கொடுத்த விலாசமோ இல்லை' எனத் தெரிவித்தனர். இரவாகிவிட்டபடியால், அதற்கு மேல் அந்த விடயத்தில் அதிகாரியால் ஈடுபட முடியவில்லை. விமான நிலையத்திலுள்ள இடத்தில் அவனைப் பாதுகாப்பில் வைக்கச் சொன்னார். நாளை ஏதாவது முடிவெடுத்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்கலாம் எனத் தீர்மானித்தார். அவனிடம் ஓர் இரவு மட்டும் தங்கும்படி கேட்டுக் கொண்டார். கவலையுடன் அவனும் சம்மதித்தான். ஏதோ தப்பு நடந்திருக்கிறது என்று தெரிந்திருந்தது. அது என்னவென்று மட்டும் தெரியவில்லை.

இரண்டு காவலர்களின் பாதுகாப்புடன் ஓர் அறையில் தங்கவைக்கப் பட்டான். அவனது பிரீஃப்கேஸை உயரதிகாரி வாங்கி வைத்துக்கொண்டார். அடுத்த நாள் வருவதாகச் சொல்லி, அறையைப் பூட்டிக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார். காலையில் சுடச்சுட கோப்பியுடன் அவனது அறையைக் காவலாளிகள் மெல்லத் தட்டிவிட்டுத் திறந்தார்கள். அங்கே அவனைக் காணவில்லை. அந்த அறையில் வெளியே செல்வதற்கு வேறு ஜன்னல்களோ கதவுகளோ இருக்கவில்லை.

முன் கதவு பூட்டப்பட்டுக் காவலர்கள் இருவர் உட்கார்ந்திருந்தனர். அப்படியிருந்தும், புகைபோல அவன் காணாமல்போயிருந்தான். எங்கு தேடியும் அவனில்லை. சிறிது நேரத்தில் உயரதிகாரி வந்தார். நடந்தவையெல்லாம் சொல்லப்பட்டன. "அட! அவன் பிரீஃப்கேஸ் என்னிடம் இருக்கிறதே!" என்று சொன்னபடி, விரைந்து அறையைத் திறந்து உள்ளே சென்றார். அலுமாரிக்குள் வைத்திருந்த அவனது பிரீஃப்கேஸை எடுப்பதற்காக அலுமாரியைத் திறந்தார். அங்கே அவனது பிரீஃப்கேஸ். அதையும் காணவில்லை!

டென்னிஸ் குவைடு நடித்து, 2000 ஆம் ஆண்டு வெளிவந்த 'ஃப்ரீக்வென்ஸி திரைப்படத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். வித்தியாசமான அறிவியல் திரைப்படம். ஒருவேளை பார்க்காமலிருந்தால், பார்த்து விடுங்கள். வெவ்வேறு காலங்களில் வசித்துக் கொண்டிருக்கும் ஓர் அப்பாவும் மகனும் ஹாம் (**HAM Radio**) கருவி மூலமாக ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு உரையாடுவதாகப் படம் அமைந்திருக்கும். 1969 ஆம் ஆண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் அப்பாவும் 1999 ஆம் ஆண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் மகனும் ஒரு வானொலித் தொலைத் தொடர்புக் கருவியுடன் பேசுகிறார்கள்.




1969 இல் மகனுக்கு வயது 6. அதே மகன் 36 வயதான நிலையில் அப்பா இறந்து போயிருப்பார். அந்த இறந்து போன அப்பாவும் பெரியவனாகிவிட்ட மகனும் அவர்கள் வாழ்ந்த ஒரே வீட்டில் அமர்ந்து கொண்டு பேசுவார்கள். ஒருவரையொருவர் பார்க்க முடியாது. குரல் வழிப் பேச்சு மட்டும்தான்.

அதாவது, மகன் இறந்த காலத்தில் வாழும் அப்பாவுடனும் அப்பா எதிர்காலத்தில் வாழும் மகனுடனும் நிகழ் காலத்தில் பேசுகிறார்கள். படத்தில் நடக்கும் சம்பவத்தின் தன்மை புரிவதற்குக் கடினமாக இருக்கும் என்பதால், இந்த அளவுக்கு விளக்கிச் சொல்கிறேன். இது கொஞ்சம் தலையைச் சுற்ற வைக்கும் விடயம்தான். திரைப்படத்தைப் பார்க்கும்போது தெளிவாகப் புரியும்.

இரண்டு வெவ்வேறு காலப் பரிமாணங்களில் வாழ்பவர்கள் ஒன்றாக இணைக்கப்படுகிறார்கள். இப்படி நடப்பது சாத்தியம் தானா...? இரு வேறு காலங்களில் வாழ்பவர்களால் ஒரே சமயத்தில் தொடர்பு கொள்ள முடியுமா? இன்றுள்ள அறிவியல், முடியும்' என்றே சொல்கிறது. அது எப்படிச் சாத்தியமாக முடியும்... கேட்பதற்கு விந்தையாக இருக்கிறதல்லவா? இது சாத்தியமாகுமென்றால், என்றோ இறந்து போன தாத்தா, பாட்டியுடன் இப்போதும் நாம் பேசலாம். இப்போது அவர்களுடன் பேச முடியுமென்றால், அவர்கள் இறந்த காலத்தில் இந்தச் சமயத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தமாகுமே... அது எப்படி முடியும்? இன்றைய இயற்பியலில் இவையெல்லாமே சாத்தியம் எனச் சொல்லும் கோட்பாடுகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் 'பல்பரிமாணக் கோட்பாடு'

டாரெட்டிலிருந்து வந்ததாகச் சொன்ன மனிதன் மறைந்து போனான். சரி... ஒரு மனிதன் அனைவரையும் ஏமாற்றி விட்டு மாயமாக மறைந்துவிட்டான் என்பதைக்கூட நம்பலாம். ஆனால், விமான நிலையக் காவலதிகாரியின் அறையைத் திறந்து, பூட்டி வைக்கப்பட்டிருந்த அலுமாரிக்குள்ளிருக்கும் பெட்டியை அவன் எடுத்திருக்கலாம் என்று சொல்வதை நம்ப முடியாது!.

ஒரே இரவில் பெட்டியுடன் எப்படி அவன் காணாமல் போனான்? அதற்கான பதில் யாரிடமும் இல்லை. சொல்லப்பட்ட மொத்தச் சம்பவங்களும் மாயாவியின் மர்மக் கதைபோலவே இருக்கின்றன. அப்படியொரு சம்பவம் நடந்திருக்கவே முடியாது என்றே பலர் சொல்கிறார்கள். 'பிரையான் அலஸ்பா' (**Briyan W.Alaspa**) என்பவர் எழுதிய **'The Man from Taured'** புத்தகத்தின் கதையையே, நிஜமாக நடந்ததாகக் கதைகட்டி விட்டிருக்கிறார்கள் என்றும் சிலர் சொல்கிறார்கள். ஆனால், ஜப்பானில் நடந்த அந்தச் சம்பவத்தின் அடிப்படையில்தான் அந்தப் புத்தகமே எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள்.

எது எப்படியிருந்தாலும் அந்தச் சம்பவம் நடந்ததா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. இரண்டாம் உலகப்போரில் அதிக அளவில் அழிவைச் சந்தித்த இரு நாடுகள் ஜேர்மனியும் ஜப்பானுமே. ஆனால், அவ்வளவு அழிவுகளிலிருந்தும் தங்களை மிக விரைவாக மீளக் கட்டியெழுப்பியதும் அந்த இரு நாடுகள்தான்.

1954 ஆம் ஆண்டில் மிகவும் சுறுசுறுப்பாகத் தன்னை உருவாக்கிக்கொண்டிருந்த ஜப்பானில் அப்படியானதொரு சம்பவம் நடைபெற்றிருக்கலாம். இன்றுபோல கணனிப் பதிவுகள் இல்லாத காலம் அது. அதனால் நடந்தது உண்மை தானா? எனச் சரிபார்க்க முடியவில்லை. ஒருவேளை அந்தச் சம்பவம் நடந்திருந்தால், அங்கு என்ன மர்மம் ஒளிந்திருக்கும் என்பதையே நாம் பார்க்கப் போகிறோம்.

டாரெட் மனிதன் பூமியின் இன்னுமொரு பரிமாணத்திலிருந்து வந்திருக்கலாம் என்று சிலரால் நம்பப்படுகிறது. மூன்று பரிமாணங்களையே நாம் அறிந்திருக்கிறோம். அவை தாண்டி, மேலும் பல பரிமாணங்கள் இருப்பதாக இயற்பியல் சொல்கிறது. ஒரே இடத்தில் இரு வேறு பரிமாணங்கள் ஒன்றாகவே இணைந்திருக்கலாம்.


அவை இரண்டிலும் வெவ்வேறு நிகழ்வுகளும் நடந்துகொண்டிருக்கலாம். ஒன்றையொன்று அறியாமல், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் அவை நடக்கலாம். இதைப் படித்துக்கொண்டிருக்கும் உங்கள் வீட்டின் இன்னொரு பரிமாணத்தில், சிங்கமொன்று மானைத் துரத்திக்கொண்டிருக்கலாம்... இயற்கையில் ஏற்படும் ஒரு தற்செயல் தவறால் (கணனிகளில் ஏற்படும் **Error**-போல) அந்தப் பரிமாணத்திலிருக்கும் ஒருவர், இந்தப் பரிமாணத்துக்குள் நுழைந்து, மீண்டும் திரும்பி விடுகிறார். அது போன்ற தவறொன்றினால், டாரெட் மனிதன் தனது காலப்பரிமாணத்திலிருந்து, நமது காலப்பரிமாணத்துக்குள் நுழைந்திருக்கலாம் அல்லவா? நாம் பேய்களையும் தேவதைகளையும் இந்த அடிப்படைகளில்தான் காண்கிறோமா தெரியவில்லை. இப்போது நீங்கள் மிகவும் குழம்பிப்போயிருப்பீர்கள். பரிமாணம் பற்றி முழுமையாக அறிந்தால் மட்டுமே இதைப் புரிந்துகொள்ள முடியும். இல்லையெனில், அறிவியலும் மர்மக் கதைகள் போலாகிவிடும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்புகளை வசப்படுத்தி ஜெயிப்பவரா நீங்கள்?

வெற்றியடைய வேண்டும் எனத் தீவிரமாக நினைப்பது சுயநலமான செயல் எனப் பலரும் நினைக்கிறார்கள். இது நிச்சயம் உண்மையில்லை. ஒருவர் வெற்றி பெற்றால் அது அவருடைய குடும்பம், நண்பர்கள், அவர் வாழும் சமூகம் மற்றும் ஒட்டுமொத்த சமுதாயம் என்ற அனைவருக்குமே மிகவும் உதவுவதாகவே இருக்கிறது.



**வெற்றி நம்மைத் தேடி வராது...**

வெற்றி பெறுவதற்கான திட்டங்களைத் தீட்டி அதை நடைமுறைப்படுத்தி வெற்றியைப் பெற முயலும் மனிதர்கள் ஒரு ரகம் என்றால், வெற்றி என்பது நமக்கு அதிர்ஷ்டம் இருந்தால் வரட்டும் என்று இருப்பது மற்றொரு ரகம். இதில் நீங்கள் முதல் ரக மனிதராக இருந்தால் உங்களுக்கானதுதான் இந்தப் புத்தகம் என்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியை.

**திட்டமிட்டு உழைத்தால்தான் வெற்றி...**

ஒரு வேலையில் சேர்வதானாலும் சரி அல்லது ஒரு வேலையில் பதவி உயர்வைப் பெறுவதானாலும் சரி... அந்த வாய்ப்புகள் நம்மைத்தேடி வரட்டும். வந்த பின்னர், தயாராகிக் கொள்வோம் என்று இல்லாமல் வாய்ப்புகள் வருவதற்கு முன்பே அதற்காகத் தன்னை தகுதிப்படுத்திக் கொண்டு தயாராகிக் கொள்பவர்களே சிறந்த வெற்றி அடைகின்றனர். பெரிய அளவில் வெற்றி பெறாத மனிதர்களைக் கூர்ந்து நோக்கினால் ஒன்று நமக்கு தெளிவாகப் புரியும். அவர்கள் அன்றாட வாழ்வின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு மட்டுமே வாழ்ந்துகொண்டிருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் பொதுவாக, செல்லும் திசையை நல்லபடியாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான முயற்சிகள் எதையுமே அவர்கள் செய்ய மாட்டார்கள். குறிப்பாகச் சொன்னால், எதிர்காலம் குறித்த திட்டமிடுதல் அவர்களிடம் இருக்காது. அன்றாடம் அவர்கள் எதிர்கொள்ளும் விடயங்களை மட்டுமே கையாண்டு, அது குறித்த புகார்களை மட்டுமே கூறிக்கொண்டு இயங்கும் இந்த மனிதர்கள் பெரிய அளவிலான வெற்றியை அடைவது என்பது சாத்தியமே இல்லை.

"உங்கள் வாழ்க்கைக்கான முழுப் பொறுப்பையும் நீங்களே ஏற்று அதை உங்கள் விருப்பப்படி வாழ்வது எப்படி என்பதை நீங்கள் கற்றுக் கொண்டேயாக வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் உங்களுடைய வாழ்க்கைப் பயணத்தை ஓட்டாமல் வாழ்க்கை உங்கள் மீது ஏறி பயணித்து விடும் என்பதை முழுமையாக உணர்ந்துகொள்ளுங்கள். இதைக் கற்றுக்கொண்டால், உங்களால் உங்களுடைய வாழ்க்கையின் போக்கை நிர்ணயிக்க முடியும். நம் அனைவருக்கும் முன்னால் இந்த உலகில் நீக்கமற நிறைந்திருக்கும் 'வாய்ப்பு'களைப் பற்றித் தெளிவாக உணர்ந்துகொள்ளுங்கள்" என்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியை.

**வெற்றி என்பது என்ன..?**

முதலில், வெற்றி என்பது உங்களைப் பொறுத்தவரை, என்ன என்பதைத் தெளிவாக வரையறை செய்யுங்கள். என் வாழ்வில் அதுவாக என்ன வருகிறதோ, அது வெற்றியில்லை. எனக்கு இதுதான் வேண்டும். அதை நான் நினைக்கும் விதத்தில் அடைவது தான் வெற்றி என்பதை முதலில் நீங்கள் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய பார்வையில் வெற்றி பெற்றவர்கள் பலருக்குமே இந்தத் தெளிவு இல்லாததால், அவர்கள் இருக்கும் இடத்தில் வெற்றிகரமாக இருப்பதைப்போல், இருந்தாலுமே அது அவர்களுடைய முழுமையான திறனுக்கு ஏற்ற வெற்றியாக இல்லை என்பதை உணராமலேயே இருந்து கொண்டிருப்பார்கள்.

வெற்றி என்பது இதை இந்தக் காலத்துக்குள் இந்த அளவுக்கு அடைய வேண்டும் என்று தீவிரமாகத் திட்டமிட்டு அதற்காக உழைத்து, அதன் மூலம் அடைவது ஆகும். பதவி, பணம், அந்தஸ்து என எதுவாக இருந்தாலும் தானாக வாழும் சூழ்நிலை ஒத்துழைத்ததால் மட்டுமே வந்திருந்தால் அதுவெல்லாம் வெற்றியே இல்லை என்கிறார் ஆசிரியர்.

**பணம், பதவி, அந்தஸ்து பெறுவது வெற்றியா...?**

திட்டமிட்டு உழைத்து பெறுவது தான் வெற்றி என்பதை நீங்கள் புரிந்து கொண்டுவிட்டீர்களா, ஓகே நீங்கள் அடுத்தகட்டத்துக்குச் செல்லலாம். முதலில் உங்களுடைய பார்வையில் எது வெற்றி என்பதை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். வெற்றி என்பதை நிர்ணயம் செய்யும்போது பெரும்பாலும் நாம் சமநிலையை மறந்து செயற்பட ஆரம்பித்து விடுவோம். அதாவது பதவி, பணம், அந்தஸ்து என்ற ஏதாவது ஒன்றை மட்டுமே வெற்றி என்று நினைத்து அதை நோக்கி மட்டுமே பயணிப்பதற்கான திட்டங்களைத் தீட்டுவோம். வெற்றி என்பது ஒன்றை மட்டும் நோக்கியே பயணிப்பதில்லை. வாழ்க்கையில் பல்வேறு விடயங்கள் இருக்கவே செய்கின்றன. அவற்றைச் சமநிலையில் வைத்து செயற்படுவதே வெற்றியாகும்.

**மற்றவர்களைப் பார்த்து நிர்ணயித்துக் கொள்ளாதீர்கள்...**

வெற்றி என்பது உங்களால் உங்களுக்கு எது என்று தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்றே தவிர மற்றவர்களுடன் ஒப்பிட்டு, 'இவர் இதைப் பெற்றிருக்கிறார்;அதனால் நான் இதை அடைந்தால் தான் வெற்றி' என்று தீர்மானிப்பது இல்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறார் ஆசிரியை.

வெற்றி என்பது எல்லோருக்கும் வாய்ப்பு இருக்கும் ஒரு விடயம் ஆகும். யாரும் பிறக்கும்போதே மிகவும் சிறப்பான திறமைகளுடன் பிறப்பதில்லை. பிறவி ஜீனியஸ்கள் என்ற ஒருசில விதிவிலக்குகள் இருக்கிறதே தவிர, பெரும்பான்மையினர் சமமானதொரு திறமையினுடனேயே இந்தப் பூமியில் பிறக்கின்றனர். ஜீனியஸ்கள் விதிவிலக்காக மட்டுமே இருக்கிற இந்த உலகில், பயிற்சியாலும் முயற்சியாலும் திறமையை வளர்த்தெடுத்து வெற்றி பெற்றவர்களுடைய எண்ணிக்கை எண்ணிலடங்காததாக இருக்கிறது என்று சொல்லும் ஆசிரியர், இதற்கு உதாரணமாக அப்பிள் நிறுவனத்தின் டிம் குக், கால் பந்து வீரரான டேவிட் பெக்ஹாம், கோல்ப் விளையாட்டு வீரரான டைகர் வுட்ஸ் உள்ளிட்ட பலரையும் உதாரணமாகக் காட்டுகிறார் ஆசிரியை.

# உதங்கருக்கு கண்ணன் சொன்ன பாடம்?

உதங்க மகரிஷி கண்ணனின் மீது அதீத பக்தி கொண்டவர். அவரின் தவத்துக்குமயங்கிய கண்ணன் அவர் முன் தோன்றி, என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். "பரமாத்மாவான தங்களையே தரிசித்த பின்னர் வேறென்ன வரம் கேட்க முடியும், ஒன்றும் வேண்டாம் கண்ணா!" என்றார் ரிஷி. கண்ணன் வற்புறுத்திக் கேட்கவும், "கண்ணா நீண்ட தவமிருக்கும் எனக்கு தாகம் எடுக்கும்போதும் நீர் தேவைப்படுகிறது.
அதைத் தேடி அலைவதால் எனக்கு நேரம் விரயமாகிறது. எனவே நான் வேண்டும் போது எனக்கு உடனே நீர் கிடைக்க ஏற்பாடு செய்" என்றார் ரிஷி. கண்ணனும் "அவ்வாறே கிட்டும்" என்று அருளி மறைந்தார்.
நாட்கள் சென்றன. நீண்ட தவத்தில் இருந்த உதங்கருக்குக் கடும் தாகம் எடுத்தது. "தண்ணீர் வேண்டும்" என்று வேண்டினார். சற்று நேரத்தில் வேடன் ஒருவன் அவருக்கு அருகில் வந்து தன்னிடம் இருந்த குடுவையை நீட்டி, "சாமி, தாகமா இருக்கா...வேணும்னா இதைக் குடியுங்க..."என்றான். அவன் தோற்றத்தையும், குடுவையில் என்ன இருக்குமோ என்ற தயக்கத்திலும் ரிஷி முகம் சுளித்து "வேண்டாம்" என்று கூறிவிட்டார். வேடனும் அவரை வணங்கி விடை பெற்றான்.
உதங்கருக்குக் கடுமையான கோபம் வந்தது. "கண்ணா, நான் வேண்டும்போது நீர் கிடைக்கும் என்ற உன் வாக்கு பொய்யா? உன் விளையாட்டை என்னிடமே காட்டுகிறாயா..." என்று ஏசினார். சிரித்தவாறே கண்ணன் தோன்றினான்.
"உதங்கரே! நீங்கள் வேண்டியது தாகத்துக்குத் தண்ணீர். அதை யார் கொடுத்தால் என்ன. என் மீது நம்பிக்கை இருந்திருந்தால், வேடன் தந்த நீரை மறுத்து இருக்கமாட்டீர்.
உண்மையில் வேடனாக வந்தவன் இந்திரன். அவன் குடுவையில் இருந்தது அமிர்தம். தோற்றத்தைக் கண்டு அசூயைப்படும் தாங்கள், இன்னும் பக்குவம் அடையவில்லை. உலகில் வர்ணங்கள் உண்டு. ஆனால் வர்ணபேதம் கூடாது என்பதே என் அறிவுரை.
இனியாவது பக்குவத்தோடு சகலமும் இறையே என்று உணர்ந்து வாழுங்கள்" என்று போதித்து மறைந்தான்.
உண்மையை உணர்ந்த உதங்கரும் அவ்விதமே வாழ்ந்து வைகுந்தம் அடைந்தார்.




கொரோனா மூன்றாம் அலை வந்திட்டாமே?

கொழும்பில கொரோனாத் தாண்டவமாட சர்வ சாதாரணமா இங்க ஆக்கள் வந்து போனவைதானே.

ஓ...வந்துபோனா என்ன?

என்னவோ? இப்ப இஞ்ச தாண்டவமாடுறதுக்கு யார் காரணம்?

அப்ப திட்டமிட்ட செயலோ இது?

அப்படி நான் சொல்லையில்லை. கட்டுப் படுத்தியிருக்கலாம்.

நினைச்சா செய்திருக்கலாம். ஆனால் நினைக்கவில்லையே?

ஆதி சிவன் மைந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூயஸ் கால்வாயில் சிக்கிய இராட்சத சரக்குக் கப்பல்

சூயஸ் கால்வாயில் கப்பல் ஏற்படுத்திய விபத்தினால், ஆசியாவின் மத்திய தரைக்கடல் பகுதியையும் ஐரோப்பாவின் செங்கடல் பகுதியையும் இணைக்கும் சூயஸ் கால்வாயின் நீர் வழித்தடம் முற்றிலுமாக முடக்கப்பட்டுள்ளது.




உலகின் மிக முக்கிய கடல் வர்த்தகப் பாதையான சூயஸ் கால்வாயில், எவர்கிவன் (Ever Given) என்ற வணிகக் கப்பல் சிக்குண்டது. கால்வாயின் இரண்டு பக்க கரைகளின் சுவர்களிலும் மோதியபடி, பக்கவாட்டில் சிக்கிக் கொண்ட இந்தக்கப்பலால், அந்த பாதையில் ஒட்டுமொத்த கப்பல் போக்குவரத்தும் தடைப்பட்டிருக்கிறது.

சீனாவிலிருந்து நூற்றுக் கணக்கான கன்டெய்னர்களுடன் புறப்பட்ட எவர்கிவன் கப்பல், மலேசியா வழியாக பயணித்து மார்ச் 22, திங்கட்கிழமை இரவு எகிப்திலுள்ள சூயஸ்கால்வாயை வந்தடைந்தது.

மார்ச் 23, செவ்வாய் அதிகாலை 7:40 மணியளவில் அங்கிருந்து கிளம்பிய எவர்கிவன், கால்வாய் வழியாக நெதர்லாந்தின் ரோட்டர்டாமுக்கு (Rotterdam) சென்றுகொண்டிருந்தது. அப்போது, திடீரென்று வீசிய பலத்த காற்றால் கப்பல் கட்டுப்பாட்டை இழந்து, முன்பக்கம் (Bow) கால்வாயின் வடக்குபக்க சுவற்றின் மீது மோதியது. அடுத்த கணமே கப்பலின் பின்பக்கம் மேற்கு திசையில் இழுத்து தள்ளப்பட்டு மற்றொருபக்க சுவரில் மோதி நின்றது.

இந்த நிகழ்வை, மற்றொரு கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்த ஜூலியன் கோனா (Julianne cona) என்ற பெண் ஒருவர் தன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோவாக பதிவேற்றி "ship is super stuck" என பதிவிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்த சம்பவம் குறித்து சூயஸ் நிர்வாகம் தெரிவித்திருப்பதாவது, "கப்பலை மீட்டெடுத்து நிலைமையை சரிசெய்ய தொடர்ந்து முயற்சித்து வருகிறோம். கப்பல் மோதியிருக்கும் கால்வாயின் இரண்டு பகுதிகளிலும் தோண்டி மணலை அப்புறப்படுத்தி மீட்டெடுக்க திட்டமிட்டிருக்கிறோம்.

இரண்டு நாட்களில் நிலைமை சீராகும்!" என கெய்ரோ 24 (Cairo24) என்ற லோக்கல் சனலுக்கு பதிலளித்திருக்கிறார்.

சுமார் 400 மீற்றர் (1313 அடி) நீளமும், 59 மீ அகலமும் உடைய இந்தக்கப்பல் தாய் வானைச் சேர்ந்த எவர்கிரீன் என்ற கடல்சார் (Evergreen Marine corp) நிறுவனத்திற்குச் சொந்தமானது. 2018ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த ராட்சத கப்பல் அல்ட்ரா லார்ஜ் கண்டெய்னர் ஷிப் (Ultra large container ship-ULCS) வகையைச் சேர்ந்தது.

இந்தக் கப்பல் ஏற்படுத்திய விபத்தினால், ஆசியாவின் மத்திய தரைக்கடல் பகுதியையும், ஐரோப்பாவின் செங்கடல் பகுதியையும் இணைக்கும் சூயஸ் கால்வாயின் நீர் வழித்தடம் முற்றிலுமாக முடக்கப்பட்டு, ஏராளமான சரக்கு கப்பல்கள் கால்வாயின் தென் பகுதியில் குவிந்துவருகின்றன. வணிகக் கப்பல்களின் இந்த அணிவகுப்பால் அந்தக் கடல் பகுதியில் "மெரைன் ட்ராஃபிக் ஜாம்" ஏற்பட்டுள்ளது. இதனை vesselFinder.com என்ற இணையத்தளம் செயற்கைக்கோள் படமாக வெளியிட்டிருக்கிறது.

1869ஆம் ஆண்டு செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்த சூயஸ் கால்வாய், 193 கி.மீ. நீளமும், 24மீ ஆழமும், 205 மீ அகலத்தையும் கொண்டது.

எகிப்தின் வருவாயில் மிகப் பெரிய பங்களிப்பை செய்துவரும் இந்த கால்வாயிலிருந்து, வருவாயை பெருக்கும் நோக்கில், எகிப்து அரசு 2015ஆம் ஆண்டு பெரிய கப்பல்கள் பயணிக் கும் வகையில் விரிவாக்கம் செய்தது.

ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு பெற்றோலிய பொருட்கள், இயற்கை எரிவாயு போன்ற வணிகப் பொருட்களைக்கொண்டு செல்ல ஆபிரிக்காவை சுற்றி நெடும் பயணமாகசென்றுகொண்டிருந்த நிலையை மாற்றிச் செலவையும், பயண நேரத்தையும், தூரத்தையும் குறைக்கும் வகையில் செயற் கையாக வெட்டப்பட்ட இந்த சூயஸ் கால்வாயில் ஆண்டுக்கு 19 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கப்பல்களில், 1.17 பில்லியன் தொன் கணக்கிலான வர்த்தகம் நடைபெறுவதாகவும் 2020 ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் நிர்வாகம் (Suez Canal Authority) தெரிவித்திருந்தது.

உலக வர்த்தகத்தில் 10வீதக் கடல் நீர்வழித்தடங்கள் மூலமே நடக்கிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# உலகிலேயே வலிமையான ராணுவம் கொண்ட நாடு சீனா



கப்பற்படையில் சீனாவும், விமானப்படையில் அமெரிக்காவும், தரைப்படையில் ரஷ்யாவும் முன்னணியில் இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் பலமான இராணுவத்தைக் கொண்ட நாடாகச் சீனா முதல் இடத்தில் உள்ளது. மிலிட்டரி டைரக்ட் (Military Direct) வெளியிட்ட அறிக்கையில் பலமான இராணுவத்தைக் கொண்ட நாடுகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

அதில் இராணுவத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கும் அமெரிக்கா 74 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அதனைத் தொடர்ந்து ரஷ்யா 69 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இந்தியா 61 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் இருக்கின்றன. பிரான்ஸ் 58 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் இருக்கிறது.

82 புள்ளிகளுடன் உலகின் வலிமையான இராணுவமாக சீனா முதலிடத்தில் இருக் கிறது. இராணுவத்திற்கு ஒதுக்கப்படும் நிதி, தரை, கப்பல் மற்றும் விமான படைபலம் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டிற்கு 732 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுடன் அதிக நிதி பெறும் இராணுவமாக அமெரிக்க இராணுவம் முதலிடத்தில் இருக்கிறது. அதனைத் தொடர்ந்து 261 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி பெறும் இராணுவமாகச் சீனா இரண்டாவது இடத்தையும், 71 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுடன் இந்திய இராணுவம் நான்காவது இடத்தையும் மேலும் கப்பற்படையில் சீனாவும், விமானப்படையில் அமெரிக்காவும், தரைப்படையில் ரஷ்யாவும் முன்னணியில் இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின்படி, 406 கப்பல்களுடன் சீனா கப்பற்படையில் முன்னணியில் இருக்கிறது. ரஷ்யா 278 கப்பல்கள், அமெரிக்க மற்றும் இந்தியா 202 கப்பல்களுடன் அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றன.


14,141 போர்விமானங்களுடன் அமெரிக்கா முன்னணியில் இருக்கிறது. 4682 போர் விமானங்களுடன் ரஷ்யாவும், 3587 போர் விமானங்களுடன் சீனாவும் அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றன.

அதேபோலத் தரைப்படையில் 54,866 வாகனங்களுடன் ரஷ்யா முன்னிலை வகிக்கிறது. 50ஆயிரத்து 326 வாகனங்களுடன் அமெரிக்காவும், 41 ஆயிரத்து 641 வாகனங்களுடன் சீனாவும் அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## எங்கே என் தந்தை?




அழகிற் சிறந்த ஆரணங்கு ஒருத்தி பக்கத்திலிருக்க அநபாயனைப் பற்றிய எண்ணங்கள் திரும்பத் திரும்பத் தன் மனத்தில் அலை மோதி இடையே கிடைத்த அமைதியைத் திரும்ப உடைப்பதை அறிந்த அவன் இத்தனை அன்பு எனக்கு அநபாயரிடம் இருக்க அவர் மட்டும் என்னைவிட அமீரைப் பெரிதாக நினைத்து விட்டாரே! அரசகுலத்தாரின் அன்பு இப்படித்தான் நிலையற்றதோ என்னமோ? என்று தனக்குள்ளேயே எண்ணமிட்டான்.

பாலூர்ப் பெருந்துறை அன்றிருந்த அபாய நிலையில் ஆபத்தைப் பற்றிச் சிறிதும் லட்சியம் செய்யாமல் அநபாயன் சென்றது அவனுக்கு எந்த வியப்பையும் அளிக்கவில்லையென்றாலும் தன்னைவிட்ட அமீரைத் துணைகொண்டு சென்றது மட்டும் அவனுக்குப் பெரும் வியப்பையும் மனக்கொதிப்பையும் அளிக்கவே அவன் இதயத்தில் இன்ப நிலை அகன்று துன்ப நிலையே துள்ளி நின்றது. அந்தத் துன்ப நிலையின் விளைவாக அவன் நீண்ட நேரம் பேசாமலே இருந்தான்.

அவன் ஏதும் பேசாவிட்டாலும் சில விநாடிகளுக்குள் அவன் மன நிலை மாறிவிட்டதையும் தான் அளித்த மன அமைதியைத் தன்னை விடப் பெரும் சக்தியொன்று உடைத்து விட்டதையும் வெகு சுலபத்தில் புரிந்துகொண்ட காஞ்சனாதேவி அநபாயனுக்கும் இளைய பல்லவனுக்கும் இருந்த நட்பின் உரத்தைப் பற்றிப் பெரிதும் வியப்படைந்து, இந்த இருவரின் நட்பு பெரும் காரியங்களைச் சாதிக்க வல்லது. என்றே எண்ணினாள்.

தன் கைகள் அவன் கைகளைப் பிடித்தபோது தன் விரல்களுடன் இணைந்த அவன் விரல்கள் மேற்கொண்டு விஷமம் ஏதும் செய்யாமல் சில விநாடிகளுக்குள் செயலற்றுவிட்டதையும் தன் உடல் உராய்ந்ததும் பதிலுக்குச் சாய்ந்து கொடுத்த அவன் உடம்புகூட திடீரென உணர்ச்சியற்று விட்டதையும் கவனிக்கத் தவறாத காஞ்சனாதேவி, அவன் இதய வேதனையை நன்றாக அறிந்து கொண்டாளாதலால், அவனை மீண்டும் சமாதானப்படுத்த முயன்று, "அநபாயர் உங்களை விட்டு அமீரை அழைத்துச் சென்றதை நீங்கள் இத்தனை பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை" என்றாள் மெதுவாக.

இளையபல்லவன் இதற்கு உடனடியாகப் பதிலேதும் சொல்லவில்லை. குனிந்த தலை குனிந்தபடியே உட்கார்ந்திருந்தான். பிறகு தலையை நிமிர்த்தி அவள் முகத்தை அவன் ஏறெடுத்துப் பார்த்தபோது அவன் வாயினால் எதுவும் பேசாவிட்டாலும் ஏன் அவசியமில்லை? என்ற கேள்வி மட்டும் அவன் கண்களில் தொக்கி நின்றது.

அந்தக் கேள்விகூட கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் கண்களிலிருந்து அகன்றது. பிரமித்து அவள் முகத்தையே பார்த்தன வேல்களை விடக் கூரிய அவன் கண்கள் மாறி வரும் இருளும் ஒளியும் போல அவன் சித்தம் மாறுபட்ட சக்திகளால் இழுக்கப்பட்டது.

அவன் முக வசீகரத்தில் அவன் மீண்டும் மயங்கினான். இரவு ஏறிவிட்டதால் பஞ்சணை மீது பாய்ந்த பால் நிலவு அவள் முகத்தில் மிக வெண்மையாக அடித்திருந்தது. அந்த வெண்மையில் அவ்வப்பொழுது அவள் கண்களில் ஏறும் குங்குமச் சிவப்பு கூடத் தெரியாததால் நல்ல பளிங்குக் கல்லில் செதுக்கப்பட்ட சிலையெனக் காட்சியளித்தாள் காஞ்சனாதேவி. அந்த வெண்மை முகத்தில் கலந்த விண்மதியின் வெண் கிரணங்கள் அவள் நுதலிலும் கன்னங்களிலும் பிரதிபலித்து முகம் பூராவையும் கலப்பமற்ற வெண்ணொளி மயமாக அடித்துக் கொண்டிருந்தது. வெண் கிரணங்களில் கண்கள் பேரொளி வீசின.

அத்தனை ஒளிக்கும் வெளுக்காக உதடுகள் மட்டும் அதிகச் சிவப்பாகப் பிரகாசித்து இருமுறை மெள்ள விரிந்து மூடின. அப்படி மூடிய சமயத்தில் ஒரு கணம் தெரிந்த இரண்டு உள்முத்துகள் திடீரென இளையபல்லவன் உள்ளத்தை அள்ளவே செய்தன. பெரும் மாயையில் மீண்டும் சிக்கினான் இளைய பல்லவன். நிலவில் ஒரே ஒளிமயமாகக் கிடந்த அந்தப் பருவ மங்கையின் வசீகர வதனத்தின் ஒவ்வோர் அசைவிலிருந்தும் காமக் கணைகள் கணக்கின்றி எழுந்து அவன் சித்தத்தில் பாய்ந்தன. ஏதோ சொல்ல உதடுகள் விரிந்தபோது கவிழ்க்கப்பட்ட குமிழ்க் கண்ணாடிபோல் எழுந்திருந்த கபோலங்களில் விழுந்த குழிவுகளும் உதடுகள் மூடியதும் ஏதோ மந்திர ஜாலம்போல் அவை மறைந்துவிட்ட மாயமும் கேள்வி கேட்க எழுந்தன போல் எழுந்து தாழ்ந்த பருவங்களின் அசைவும் சிறிது நேரம் நிலைத்து நின்று திடீரெனக் கொட்டிய இமைகளும் பளிச்சு பளிச்சென்று பற்பல இரகசியச் சேதிகளைச் சொல்லவே பிரமிப்பில் ஆழ்ந்து கிடந்தான் இளைய பல்லவன். காஞ்சனாதேவி மட்டும் இஷ்டப்படிருந்தால் அந்தப் பிரமிப்பில் அவனை நீண்ட நேரம் ஆழ்த்தியே வைத்திருக்கலாம். ஆனால் அப்படி அவன் மீது கண்களை வீசிய காஞ்சனாதேவியே அவன் பிரமிப்பை உடைக்கவும் முயன்றாள்.

நான்கு வேல்களும் உராய்வது போல் தன் கண்களும் அவன் கண்களும் உராய்ந்த சமயத்தில் அவன் கண்களே வெற்றியடைந்ததையும் அவன் வெறித்த பார்வை தன் கண்களுக்குள் பாய்ந்து இதயத்துக்குள்ளேயும் புகுந்து இதயத்தை மூடியிருந்த வெட்கச் சீலையைக் கூடக் களைவதைப் போன்ற பிரமையை தனக்கு அளித்து விட்டதையும் கண்ட காஞ்சனாதேவி, பெரும் சங்கடத்துக்கு இலக்கானாள். அந்த சங்கடத்தின் விளைவாகவோ, மேற்கொண்டு அந்த நிலை நீடித்தால் விளைவு என்ன ஆகுமோ என்ற பயத்தாலோ அவள் திடீரென அவன் கைகளைப் பற்றி நின்ற தன் கைகளை விடுவித்துக் கொண்டாள். அந்த இரண்டு செய்கைகளாலும் அவன் பிரமிப்பை உடைத்துவிடலாமென்று எதிர்பார்த்த காஞ்சனாதேவி அவை இரண்டும் வேறு விபரீதங்களுக்குத் தூண்டி விட்டதை மறுவி நாடி உணர்ந்து என்ன செய்வதென்று தெரியாமல் திணறினாள்.

கைகள் விடுவிக்கப்பட்டதும் திடீரெனத் துடித்துப் பஞ்சணையிலிருந்து விடுதலையடைந்த அவன் கரங்களிரண்டும் அவள் முகத்தைச் சிறைப்படுத்தி நிலவொளிக்காக அதை நன்றாகத் திருப்பின. அவன் முரட்டு உள்ளங்கையில் அவள் பட்டுக் கன்னங்கள் குழைந்தன. சற்றே திருப்பப்பட்டதால் நிலவொளி பூரணமாக விழுந்த முகத்தின் ஒவ்வொரு சாயையும் அவன் கண்கள் ஆராய்ந்தன. கன்னங்களின் வளவளப்பை கைகள் உணர்ந்தன.

முகம் லேசாகத் திருப்பப்பட்டதால் அவள் வீசிய கடைக்கண் பார்வையின் வேகத்தை அவன் கண்கள் உணர்ந்தன. கன்னங்கள் அழுத்திப் பிடிக்கப்பட்டதால் இன்ப வேதனையால் அத்தனை நிலவிலும் சிவந்துவிட்ட நுதல் அந்தச் சிவப்பை நாசி மீது பாய்ச்சி நிலவில் விகசிக்கும் புதுச் செம்பருத்தி போல் அடித்திருந்ததைக் கண்கள் மட்டுமென்ன அவன் இதயமும் கவனிக்கவே செய்தது. கண்ணும், கண் மூலம் இதயமும் கவனித்தவை இவை. இவை காணாதவற்றைச் சித்தம் கற்பனை செய்தது. கண்டது உணர்ச்சிகள் பேரிரைச்சலுடன் அவன் உள்ளத்தில் எழுந்து அலை மோதின.

அந்த அலைகளில் சிக்கித் தத்தளித்தாள் அஞ்சன விழியாளும்கூட. அலைகளிலிருந்து இதயத்தை மீட்க விரும்பிய அவள் விழிகளைச் சற்றே மூடினாள். மூடியதால் அவன் பார்வையிலிருந்து மீளலாமென்றுதான் நினைத்தாள். ஆனால் மூடிய கண்கள் உள்ளே பல வாயில்களைத் திறந்துவிடவே இளையபல்லவன் கண்கள் எல்லா இடங்களிலும் எட்டிப் பார்ப்பன போலவே தெரிந்தது அந்தக் கடாரத்தின் கட்டழகிக்கு.

அந்த எண்ணக் கடலிலிருந்து, கடலின் அலைகளிலிருந்து, அதன் சுழல்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றான் அவள். அத்தனை அலைகளையும் சுழல்களையும் மீறி எழ முன்றது அவள் மனம். மீள முடியாமல் செய்திருந்தது இருவருக்கும் இடையே நிலவிய மௌனம். அந்த மௌனத்தைக் கலைக்க அவள் விரும்பிப் பேச முயன்றாள். உதடுகள்தான் அசைந்தன. சொற்கள் உதிரவில்லை.

அவள் மன முயற்சி எதையும் புரிந்துகொள்ளக் கூடிய நிலையில் இளையபல்லவன் இதயம் இல்லாததால், அவள் உதடுகளின் அசைவைத் தவறாகவே பொருள் கொண்டான் அந்த வாலிபன். தவறான பொருள்களின் விளைவாகக் கன்னத்தைத் தழுவி நின்ற விரல்கள் இரண்டும் சற்றே விலகி அவள் செவ்விய உதடுகளின் மீது தவழ்ந்து பேச வேண்டாம் என வலியுறுத்தின. அந்த வலியுறுத்தல் அவசியமில்லை. அவள்தான் பேசும் சக்தியை அறவே இழந்திருந்தாளே!

கண்களும் மூடி உதடுகளும் மூடி முகமே உறைந்துவிட்டது போன்ற அந்த நிலையின் அபாயத்திலிருந்து விடுதலையடைய முடியாமலிருந்த அவள் மனத்தில் பலப்பல எண்ணங்கள், பலப்பல கதைகள், பலப்பல பழைய கனவுகள் எல்லாம் எழுந்து அர்த்தமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கா லத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : சுமைதாங்கி
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள் : பி.பி.ஸ்ரீனிவாஸ், எஸ்.ஜானகி



ராதா...ராதா...ராதா...
ராதா...ராதா... ராதா
ராஜா...ராஜா...ஆஆ ராஜா

எந்தன் பார்வையின் கேள்விக்கு
பதில் என்ன சொல்லடி ராதா ...ஆஆ...
உந்தன் பார்வைக்கு பார்வை
பதிலாய் விளைந்தது ராஜா ஹோ ராஜா

எந்தன் பார்வையின் கேள்விக்கு
பதில் என்ன சொல்லடி ராதா ...ராதா
உந்தன் பார்வைக்கு பார்வை
பதிலாய் விளைந்தது ராஜா அஹ ராஜா

நல்ல இதயங்கள் பேசிடும்
மொழி என்ன சொல்லடி ராதா...
அது ஏட்டிலும் எழுத்திலும்
எழுத வராது ராஜா ராஜா ராஜா...ஆஆ..

இரு கரங்களை பிடித்ததும்
மயங்குவதேனடி ராதா...ராதா...
அதில் காந்தத்தை போல் ஒரு
உணர்ச்சி உண்டானது ராஜா ராஜா ஓ ராஜா

எந்தன் பார்வையின் கேள்விக்கு
பதில் என்ன சொல்லடி ராதா ...ராதா
உந்தன் பார்வைக்கு பார்வை
பதிலாய் விளைந்தது ராஜா ஹோ ராஜா

நெஞ்சில் இருவரும் சேர்ந்த பின்
திருமணம் ஏனடி ராதா...ஆ...ஆ...
அது இளமையின் நாடகம்
அரங்கத்தில் வருவது ராஜா ராஜா
ராஜா...ஒஹ...

முதல் இரவென்று சொல்வது
ஏனடி வந்தது ராதா...ராதா...
அது உரிமையில் இருவரும்
அறிமுகமாவது ராஜா ராஜா ஓ ராஜா

எந்தன் பார்வையின் கேள்விக்கு
பதில் என்ன சொல்லடி ராதா...ராதா
உந்தன் பார்வைக்கு பார்வை
பதிலாய் விளைந்தது ராஜா ஹோ ராஜா

பெண்மை தலைக் குனிந்திருப்பதும்
தவிப்பதும் ஏன்டி ராதா...
அது தலைமுறையாய் எங்கள் தாய்
தந்த சீதனம் ராஜா ராஜா ராஜா அஹ் ஓ

கொண்ட மயக்கத்திலே கன்னம்
சிவப்பது ஏனடி ராதா ராதா
அது மனம் என்னும் வண்டியை
நிறுத்திடும் அறிவிப்பு ராஜா ராஜா ஓ ராஜா

எந்தன் பார்வையின் கேள்விக்கு
பதில் என்ன சொல்லடி ராதா...
உந்தன் பார்வைக்கு பார்வை
பதிலாய் விளைந்தது ராஜா ஹோ ராஜா

# இரத்தத்தால் சிவக்கும் நிலம்!




'Everything will be okay' (எல்லாம் சரியாகிவிடும்) என்ற வாக்கியம் பதித்த டி-ஷேர்ட்டைப் போராட்டத்துக்கு அணிந்து வந்திருந்தாள் அந்த 19 வயதுப் பெண். அந்தப் படம் இணையத்தில் வைரலானது. அதனுடன் "நாங்கள் ஓடமாட்டோம்". "இரத்தம் மேலும் இங்கே சிந்தக் கூடாது" என்பன போன்ற கோஷங்கள் இணைக்கப்பட்டன. ஆனால் அன்று நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களில் அந்தப் பெண்ணும் ஒருவர். அவள் பெயர் - ஏஞ்சல் (எ) கியால் சின்.

பெப்ரவரி 1 மியன்மாரில் ஜனநாயக ஆட்சி நடத்திக் கொண்டிருந்த ஆங் சான் சூகி கட்சியின் அரசு இராணுவ சதியால் வீழ்த்தப்பட்டது. 50 வருடங்களுக்கும் மேலாக மியன்மாரை ஆண்டு வந்த இராணுவத்தின் இரும்புக்கரங்கள், மீண்டும் ஒருமுறை அதிகாரத்தை இறுக்கிப் பிடித்தன. புதிதாக அங்கே பூத்த ஜனநாயகம் பிடுங்கி எறியப்பட்டது.

இதற்கு எதிராக கடந்த ஒரு மாதமாகவே அங்கே பெரிய அளவில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆயிரக்கணக்கான மக்கள் பல ஊர்களில் வீதிகளில் திரண்டு, இராணுவ அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றனர்.

இராணுவ அதிகாரம் கருணையின்றி உயிர்களைக் குடித்த முதல் தாக்குதல் பெப்ரவரி 28 ஆம் திகதி நிகழ்ந்தது. 18 பேர் இறந்ததாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

இப்படியான கொடூரத் தாக்குதலிலிருந்து மீள்வதற்குள்ளாகவே கடந்த மார்ச் 3 ஆம் திகதி 38 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். இறந்த 38 பேரில் 4 குழந்தைகள். ரேடியோ ஃப்ரீ ஆசியா வெளியிட்ட ஒரு செய்திப்படி, இராணுவ வீரர்கள் போகும் வழியில் ஒரு சிறுவனைக் கொன்றுவிட்டு, எதுவுமே நடக்காதவாறு அந்தப் பிணத்தை ஒரு டிரக்கில் ஏற்றி விட்டு தங்களின் பயணத்தைத் தொடர்ந்திருக்கின்றனர். சமூக வலைத்தளங்களில் வைரலான ஒரு வீடியோவில், பல இளைஞர்கள் தங்களின் தலையில் கைவைத்தவாறே இராணுவ டிரக்குகளினுள் ஏறிக் கொண்டிருப்பதாய் காட்சிகள் விரிகின்றன. நாடு முழுவதும் இதுவரை 1,700 பேர் சிறைபடுத்தப்பட்டுள்ளனர்.

அதிகாரத்தைக் கைப்பற்றியதற்கு அந்நாட்டின் இராணுவம் சொல்லும் முக்கிய காரணம், அங்கே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த தேர்தல் நியாயமாக நடத்தப்படவில்லை என்பது தான்.

அந்தத் தேர்தலில் ஆங் சான் சூகியின் கட்சி வெற்றி பெற்றுத் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடித்தது. அங்கிருக்கும் தேர்தல் ஆணையமும் இது நியாயமாக நடந்த தேர்தல் என்றுதான் குறிப்பிட்டுள்ளது.

ஆனால், தற்போது அதிகாரத்தைப் பிடித்திருக்கும் கலகக்கூட்டத்தின் தலைவரான சீனியர் ஜெனரல் மின் ஆங்லயிங் (Min Aung Hlaing) மீண்டும் தேர்தல் நடத்தப்படும் எனத் தெரிவித்திருக்கிறார்.

வெளியுலகத் தொடர்பின்றிச் சிறைபடுத்தப்பட்டிருக்கும் 75 வயதான ஆங்சான் சூகி, அண்மையில்தான் முதன் முறையாக ஒரு வழக்கு விசாரணைக்கு வீடியோ கான்ஃபரன் சிங் மூலம் ஆஜராகியிருக்கிறார்.

> "அதிகாரத்தைக் கைப்பற்றியதற்கு அந்நாட்டின் இராணுவம் சொல்லும் முக்கிய காரணம், அங்கே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த தேர்தல் நியாயமாக நடத்தப்படவில்லை என்பதுதான்."



மியன்மாரில் வசிக்கும் வெளிநாட்டினர் அங்கிருந்து வெளியேற முடியாத அசாதாரண சூழல். மியன்மாரிலேயே பிறந்து அங்கேயே வாழ வேண்டியவர்களோ சர்வாதிகாரத்தையும் மரணங்களையும் தொடர்ந்து சந்திக்க வேண்டிய சூழல். எப்போது மலரும் ஜனநாயகம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளபதி விஜயுடன் ஜோடி சேரும் மற்றுமொரு முன்னணி நாயகி



தளபதி விஜய் மற்றும் விஜய் சேதுபதி நடிப்பில் இயக்குநர் லோகேஷ் கனக ராஜ் இயக்கத்தில் கடந்த ஜனவரி மாதம் வெளியான திரைப்படம் மாஸ்டர். ரசிகர்களின் பேராதர வைப் பெற்று மிகப்பெரிய வசூல் சாதனை படைத்தது. அதனைத் தொடர்ந்து தளபதி விஜய் மற்றும் இயக்குநர் நெல்சன் திலிப் குமார் இயக்கத்தில் தளபதி 65 படத்தில் நடி க்கவுள்ளார், இப்படம் வரும் ஏப்ரல் மாதம் முதல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இப்பட த்தில் நடிகை பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடிப்பார் என சமீபத்தில் வீடியோவுடன் அறிவிப்பு வெளியானது.

# மீண்டும் சின்னத்திரையில் நிரோஷா




வெள்ளித்திரையிலும், சின்னத்திரையிலும் கொடிகட்டி பறந்த நடிகைகளில் ஒருவர் நடிகை ராதிகா சரத்குமார். இவரது தங்கை தான் நடிகை நிரோஷா ராம்கி. இவர் தமிழில் அக்னி நட்சத்திரம் படத்தின் மூலம் கதா நாயகியாக அறிமுகமானவர். சினிமா வாழ்க்கையிலிருந்து தள்ளியிருந்த நடிகை நிரோஷா சின்ன பாப்பா பெரிய பாப்பா சீரியல் மூலம் சின்னத் திரையில் அறிமுகமானார். பல சீரியல்களில் தொடர்ந்து நடித்து வந்த இவர், கடந்த இரண்டு ஆண்டுகளாக சின்னத்திரையில் நடிக் கவில்லை. இந்நிலை யில் மீண்டும் புதிய சீரியல் ஒன்றில் தனது சொந்த தயாரிப்பின் மூலம் நடிக்க வருகிறாராம் நிரோஷா. மேலும் இதில் புதிதாக கதாநாயகி ஒருவர் அறிமுகமாகவும் இருக்கிறார்.

# ஆச்சரியத்தில் ஆழ்த்திய மஞ்சு வாரியர்



வெற்றி மாறன் இயக்கத்தில் வெளியான அசுரன் படத்தில் தனுஷுக்கு ஜோடியாக நடித்த மஞ்சு வாரியர், ரசிகர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி இருக்கிறார். மலையாள திரை யுலகில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் மஞ்சு வாரியர். மஞ்சுவாரியரின் புதிய புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. 42 வயதான மஞ்சுவாரியரா இவர்? என்று நினைக்கும் அளவுக்கு மிகவும் இளமையாக உள்ளார். இன்றைய இளம் டொப் நடிகைகளுக்கு சவால் விடும் வகையில் அந்தப் புகைப்படம் ரசிகர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி யுள்ளது. சமூகத்தளங்களில் பல லைக்குகளை அள்ளியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின், கங்குலி, டோனி செய்த தவறை கோலியும் செய்யலாமா?



இங்கிலாந்துக்கு எதிரான இந்த இருபது-20 தொடர் ஒரு மிகப்பெரிய கேள்வியை இந்திய அணியின் முன்வைத்தது. 5 போட்டிகளில் 4 வித்தியாசமான ஓப்பனிங் காம்பினேஷன்களைக் களமிறக்கியது இந்தியா.

தவான், ராகுல் போன்ற சீனியர்கள் சொதப்ப, அட்டகாசமாக ஆடிய இஷான் கிஷன் காயத்தால் ஒதுங்க, கடைசிப் போட்டியில் கப்டன் கோலியே முன்வந்தார். மூன்றாவது வீரராக, நான்காவது வீரராக, ஓப்பனராக என மூன்று வித்தியாசமான ரோல்களில் ஆடியிருக்கிறார் இந்திய கப்டன். இந்திய அணிக்கு எது நல்லது என்ற கேள்வியோடு, கோலிக்கு எது நல்லது என்ற கேள்வியையும் இந்த இடத்தில் நாம் கேட்டாகவேண்டும். ஏனெனில், வரலாறு சற்று பயமுறுத்துவதாகவே இருக்கிறது.


இந்திய கப்டன்களைப் பொறுத்தவரை ஒரு பட்டிங் பொசிஷனில் பிரச்சினை எனில், தங்கள் பொசிஷனைத் தியாகம் செய்வதும் மாற்றிக்கொள்வதுமே விடை என்று நினைக்கிறார்கள். சச்சின், கங்குலி, டோனி எனத் தொடர்ந்துகொண்டே இருந்த அந்த ரொட்டேஷன் பொலிஸி, இப்போது கோலியிடமும் தென்படத் தொடங்கியிருக்கிறது.

முன்பு, ராகுல் மூன்றாவதாக இறங்கவேண்டும் என்பதற்காக 2 டவுன் வந்தவர், இந்தத் தொடரில் கிஷனுக்காகத் தன் இடத்தைத் தியாகம் செய்தார். இந்த மாற்றங்களெல்லாம் பலன் கொடுத்திருக்கிறதா? என்றால் நிச்சயம் இல்லை.

463 ஒருநாள் போட்டிகளில் ஆடியிருக்கும் சச்சினின் சராசரி 44.83. தன் 23 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் பல்வேறு பொசிஷன்களில் ஆடியிருக்கும் லிட்டில் மாஸ்டர், ஓப்னராகத்தான் தன் உச்சபட்ச திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார். ஓப்பனராக இறங்கிய போட்டிகளில் அவரது சராசரி 48.29.

ஆனால், 4-7 பொசிஷன்களில் பட்டிங் செய்யும்போது அந்தச் சராசரி 33.14 வரை வீழ்கிறது. அதாவது மிடில் ஓடரில் ஆடிய ஒரு போட்டி யில் சராசரியாக 15 ரன்கள் குறைவாகவே எடுத்திருக்கிறார் சச்சின்.

சச்சினோடு இணைந்து மிகச் சிறந்த ஓப்பனிங் பாட்னர்ஷிப் அமைத்த சௌரவ் கங்குலியின் சராசரியும் அதே மாதிரிதான் இருக்கிறது. ஓப்பனராக 41.57 என்ற சராசரி வைத்திருந்தவர், 3-7 பொசிஷன்களில் ஆடியபோது சராசரியாக போட்டிக்கு 38.70 ரன்களே அடித்திருக்கிறார்.



ஷேவாக்கை ஓப்பனராக இறக்கத் தன் இடத்தைத் தியாகம் செய்த கங்குலி, அணியிலேயே தன் இடத்தைத் தியாகம் செய்யும் நிலைக்கும் தள்ளப்பட்டதுதான் பெரும் சோகம்!

இந்த வரிசையில் அடுத்ததாக டோனி. ஒருநாள் போட்டிகளில் 50.57 என்ற சராசரி வைத்திருந்தார் டோனி. மூன்றாவது வீரராக விளையாடிய 17 போட்டிகளில் 82.75 என்ற அசுர சராசரியில் 993 ரன்கள் குவித்திருக்கிறார். 2 சதங்கள், 6 அரைச்சதங்கள் என மிரட்டியிருக்கிறார்.

அந்தப் பொசிஷனில் மட்டுமல்ல, நான்காவது வீரராகவுமே நல்ல சராசரி வைத்திருக்கிறார் அவர். மூன்றாவது அல்லது நான்காவது வீரராக இறங்கிய போட்டிகளில் அவர் சராசரி 65.30. ஆனால், அதற்குக் கீழே களமிறங்கிய போட்டிகளிலோ சராசரி ஐம்பதுக்கும் கீழே (47.56) போய் விட்டது.

டோனி கப்டன் ஆன பிறகு, ரெய்னா, கோலி, யுவராஜ் என இவர்கள் டொப் ஓடரில் ஆடுவதற்காகக் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கிக்கொண்டே இருந்தார். ஒருகட்டத்தில் ஏழாவது பட்ஸ்மனாகக்கூட விளையாடத் தொடங்கினார். அதுதான் அவர் சராசரி குறைவதற்கு மிகமுக்கிய காரணமாக அமைந்தது.

இப்படி இந்தியாவின் ஜாம்பவான் பட்ஸ்மன்கள் தங்கள் முடிவுகளால் பின்னடைவையே சந்தித்திருக்கிறார்கள். இப்போது ஜாம்பவனாக உருவெடுத்துக்கொண்டிருக்கும் கோலியின் நிலையும் அதேதான். ஒருநாள் போட்டிகளில் மூன்றாவது வீரராக 62.81 என்ற சராசரி வைத்திருக்கும் அவர், 4-7 பொசிஷன்களில் 50.12 என்ற சராசரியே வைத்திருக்கிறார்.

கப்டனான பிறகு, மூன்றாவது இடத்தில் 77.53 என்றிருக்கும் அவர் சராசரி, 4-7 பொசிஷன்களில் 44.75 என்று பேரடி வாங்குகிறது. கப்டன் ஆன பிறகு, இருபது-20 போர்மட்டிலும் 55.26 (மூன்றாவது வீரராக) என்றிருக்கும் அவர் சராசரி, 4-7 பொசிஷன்களில் 44.81 வரை குறைகிறது.

வரலாறும் சரி, நிகழ்காலமும் சரி, சொல்வது ஒன்றுதான். மகத்தான பட்ஸ்மன்களாக இருப்பவர்கள் தங்கள் இடத்த்தை இன்னொருவருக்கு விட்டுக்கொடுக்காமல் இருப்பது முக்கியம். அணியின் நலனுக்காக என்று சொன்னாலும் அதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. 2007



உலகக் கோப்பை சமயங்களில் சச்சின் மிடில் ஓடரில் ஆடியதில் எந்தப் பயனும் ஏற்படவில்லை. ஷேவாக் ஓப்பனிங்கில் கலக்கினாலும் மிடில் ஓடரில் கங்குலி தன் பழைய ஆட்டத்தைக் காட்ட முடியாமல் தடுமாறினார்.

அதேபோல் டோனி கீழே இறங்கித்தான் ஆடியிருக்கவேண்டும் என்றில்லை. யுவராஜ், ரெய்னா போன்றவர்கள் 5-6 பொசிஷன்களில் ஆடியிருக்கிறார்கள்.

அங்கு தொடர்ந்து ஆடியிருந்தால் அவர்களால் அங்கும் சோபித்திருக்க முடியும். சொல்லப்போனால், யுவராஜ் சிங்கின் சராசரி கீழே ஆடும் போதுதான் அதிகமாக இருந்திருக்கிறது. நான்காவது வீரராக அவர் சராசரி 35.20.


அதேசமயம், ஐந்தாவது பொசிஷனில் 39.48 என்ற சராசரியும் ஆறாவது பொசிஷனில் 37.61 என்ற சராசரியும் கொண்டிருக்கிறார். 2 டவுன் ஆடிய போட்டிகளில்தான் அவர் சராசரி குறைவு!

இப்படி சில முடிவுகள் நெக்கடிவ் தாக்கங்கள் ஏற்படுத்துவதற்கும் வாய்ப்புகள் உண்டு. இருபது-20 போட்டிகளில் கோலி மூன்றாவதாக இறங்கிய 60 போட்டிகளில் 38 இல் இந்தியா வென்றிருக்கிறது. வெற்றி சதவிகிதம் - 63.33. ஆனால், அவர் நான்காவதாக பட்டிங் செய்ததால், அந்த சதவிகிதம் 59.09 ஆக (22 போட்டிகளில் 13 வெற்றி) குறைந்திருக்கிறது.

இந்த விடயத்தில் பொன்டிங்கைப் பார்த்து நம் கப்டன்கள் கற்றுக்கொள்ளவேண்டும். அவர் கப்டனாக இருந்த 217 போட்டிகளில், 6 போட்டிகளில் மட்டுமே நான்காவது பொசிஷனுக்குக் கீழே இறங்கியிருக்கிறார். மற்ற போட்டிகளிலெல்லாம் வன் டவுன் தான்.

மைக்கல் கிளார்க் போன்று மூன்றாவது இடத்தில் ஆடும் ஒரு வீரர் வந்தாலும் பொன்டிங் தன் இடத்தை விட்டுக்கொடுக்கவில்லை. அவர் ஓய்வு பெற்ற பிறகுதான் அந்த இடத்தை நிரப்பினார் கிளார்க். அதனால்தான், ஓய்வு பெறும்வரை பொன்டிங்கால் அப்படி சிறப்பாக ஆட முடிந்தது.

ஆக, நாம் சொல்ல வருவதெல்லாம், இனி கோலி தியாகம் என்று எதுவும் செய்யாமல் தன் ஆஸ்தான இடத்தில் ஆடவேண்டும் என்பதுதான். ஓப்பனராக கடந்த போட்டியில் சிறப்பாக ஆடியிருக்கிறார். ஆனால்,



அது தொடருமா? என்று உறுதியாகச் சொல்ல முடியாது. ஏனெனில், இருபது-20 போட்டிகளில் ஓப்பனராக அவர் சராசரி 39.71 தான். எனவே, கோலி இதுபோன்ற முடிவுகளை மறுபரிசீலனை செய்யவேண்டும். கப்டன்கள் பதில் கண்டுபிடிக்கவேண்டும். ஆனால், கப்டன்களே பதில் இல்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலின் சின்னம் மௌசோலியம் (துருக்கி) ஹாலிகார்னஸஸ்

(21.03.2021 திகதிய தொடர்ச்சி) உலகின் ஏழாவது அதிசயமாக மௌசோலியத்தை தனது பட்டியலில் ஆண்டிபாட்டர் சேர்த்ததற்கு அதன் அழகு மட்டும் காரணமல்ல. கிரேக்க சிற்பக் கலையில் நுட்பம்மிக்க வடிவங்கள் அதன் மீது பொருத்தப்பட்டிருந்ததும் ஒரு காரணமாக இருக்கக்கூடும்.



மௌசோலியத்தின் சுவர்களில் பதிக்கப்பட்டிருந்த கற்சிற்பங்களில் யுத்த காட்சிகள்

கல்லறையின் உச்சிப் பகுதி பிரமிடு வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பகுதிக்குச் செல்ல இருபத்துநான்கு படிகள் கொண்ட வழி ஒன்றும் இருந்திருக்கிறது.

நான்கு புறங்களிலும் கிரேக்க சமூகத்தின் இயற்கையின் கடவுள்களாகக் கருதப்பட்ட தெய்வங்களின் சிலைகள் வடிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றும் ஐந்தடிக்குக் குறையாமல் சுமார் 20 சிலைகள் ஒவ்வொரு பக்கத்துக்குமாக இருந்தன.

கி.மு.62 மற்றும் கி.மு.58 காலங்களில் நகரில் நுழைந்த கடற்கொள்ளையர்கள் நகரத்து மக்களைத் தாக்கி அவர்களது பொருட்களைக் கொள்ளையடித்தனர். அதற்குப் பிறகு ஏற்பட்ட நிலநடுக்கங்கள் காரணமாக கல்லறையின் சிற்பங்கள் மண்ணில் புதைந்து போயின.

கி.பி.1494 ஆம் ஆண்டு ரோட்டஸ் தீவில் பிரபு புனித ஜோர்ஜ் அந்த நகரை ஆக்கிரமித்து மௌசோலியத்தின் கற்களைக் கொண்டு அதே இடத்தில் ஒரு அரண்மனையைக் கட்டினார்.

கி.பி.1522 இல் மௌசோலியத்தின் எஞ்சிய பகுதிகளை உடைத்து அரண்மனையை விரிவுபடுத்தும் பணியில் பயன்படுத்திக் கொண்டார்.

அந்தப் பணியின் போது மௌசோலஸ் மற்றும் அவனது மனைவி ஆர்ட்டமீசியா ஆகியோரின் அஸ்தி வைக்கப்பட்டிருந்த இடங்களை அவர்கள் கண்டுபிடித்தனர்.

பிரிட்டிஷ் அரசு 1852 இல் சார்லஸ் தாமஸ் நியூட்டன் என்பவரை அனுப்பி கல்லறையின் பகுதிகளையும் அரண்மனையின் பகுதிகளையும் ஆய்வு செய்து எடுத்துச் சென்றது.

அவரால் மௌசோலியம் இருந்த பகுதியை மிகச் சரியாக அடையாளம் காண முடியாததால் அனுமானத்தில் பல ஏக்கர் நிலங்களை வாங்கிப் போட்டு தோண்ட ஆரம்பித்தார்.

அவர் கண்டெடுத்த சிங்க சிற்பங்கள், தூண்களின் சில பகுதிகள் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டன.

அவருக்குப் பிறகு 1966 ஆம் ஆண்டு டென்மார்க்கின் ஆர்ஹஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்லியல் பேராசிரியர் கிரிஸ்டியன் ஜபர்சன் தலைமையில் தொல்லியல் குழு ஒன்று 1977 வரை அங்கேயே தங்கியிருந்து அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டது.

அந்தக் குழுவினர் எடுத்த பொருட்கள் மௌசோலியம் இருந்த இடத்துக்கு அருகில் ஒரு அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டன.


இடைக்கால உலக அதிசயங்கள் பட்டியலில் காதலின் சின்னமாக விளங்கிய பளிங்கு கல்லறையான தாஜ்மகால் இடம்பெற்றதைப் போல் பண்டைய உலக அதிசயங்கள் பட்டியலில் இடம் பெற்ற காதலின் சின்னமாக மௌசோலியம் இடம்பெற்றதும் ஒரு அதிசயமான ஒற்றுமையே.

மௌசோலியம் துருக்கியின் தாஜ்மகால் என்றால் அது மிகையில்லை. (முற்றும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2266

Search for people, places and things

ரூபி




கமல்

வேலை கிடைக்கிற வரைக்கும் வேலை கிடைக்கலையே என்று கஷ்டமா இருந்துச்சு



வேலை கிடைச்ச பிறகு வேலைக்கு போறதுக்கு கஷ்டமா இருக்கு

யதுசன்

திட்டாதீங்க மம்மி நீங்கதான் பிரிட்ஜ்க்குள்ள பச்சை முட்டை இருக்குன்னு சொன்னீங்க



நானும் எல்லா முட்டையும் உடைச்சுப் பார்த்தேன் ஒன்னுகூட பச்சையா இல்ல....

பூமிகா

சொக்கலேட் சாப்பிட்டா பல் விழும் என்று சொல்றாங்களே...!



எங்க வீட்ல சொக்கலேட் சாப்பிட்டா அடில்லா விழுகுது

தமயந்தி

எனக்கு ஒரு டவுட்டு வருமானத்துக்கு அதிகமாக சொத்து இருந்தால் வழக்கு போடுவாங்களாம்



அப்போ வருமானத்துக்கு அதிகமாக கடன் இருந்தால் அடைச்சிடுவாங்களா?

திவாகர்

மகிழ்ச்சியான மண வாழ்க்கைக்கு தேவையான மூன்று வழிகள்



சாரிம்மா, சாரிம்மா, என் தப்புதான்மா...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 247

## நோக்கங்களை நோக்கி அமைதியாக எடுத்து வைக்கும் ஒவ்வொரு கால் தடங்களும் வெற்றிக்கான பதிவுகளே

ஒவ்வொரு தடவையும் கோபப் படும் பொழுது நாம் தோற்று விடு கிறோம். கோபத்தை ஏற்படுத்திய அந்தச் சூழ்நிலை எம்மை வெற்றி கொள்கிறது. கோபமான நிலை யில் எமது புத்தி மங்கி சாதுரியம் குன்றி மனதாலும் உடலாலும் பிழையான தீர்மானங்கள் எடுக் கும் ஒரு பலவீனமான நிலைக் குத்தள்ளப்படுகிறோம்.

வாழ்க்கை உண்மையில் எளிமையானது. நாமே அதனை சிக்கல்கள் நிறைந்ததாக மாற் றிக்கொள்கிறோம். சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு எமது வாதிடும் குணாதிசயமும் கோபப்படும் தன்மையுமே பிரதானமான கார ணமாக அமைகின்றது.

ஒரு விடயத்தை உணரக் கூடிய திறமைசாலிகள் என்று நாம் கருதுபவர்களுடன் மட்டும் வாதிடுவோம். எமது கருத்துக் களை வலியுறுத்திச் சொல்லு வோம். அவ்வாறானவர்கள் அல்ல என நாம் கருதுபவர் களுடன் வாதிட்டு நாமும் காயப் பட்டு மற்றவர்களையும் காயப்ப டுத்தும் முயற்சி எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

அமைதியாக இருப்பது ஆமோ திப்பது என்று அர்த்தப்படாது. பேசிப்பயன்தராது என்று நினைக் கின்றபொழுது அல்லது உண்மை துலங்க காலம் கனிய வேண்டும் என்ற நிலை இருக்கும்பொழுது அமைதி சிலசமயம் மிகப்பொருத் தமான ஆயுதமாக இருக்கலாம்.

எமது இலக்கை நோக்கிய பாதையில் நின்று குரைக்கும் ஒவ்வொரு நாய்களுக்கும் கல் லெறிய முற்படுவோமாயின் எமது பயணம் முற்றுப்பெறமாட்டாது என்று அறிஞர்கள் சொல்லியிருக் கிறார்கள். அதேபோலத்தான் வாழ்வில் ஏற்படும் இடையூறுகள் ஒவ்வொன்றுடனும் மோத முற்படு வோமாயின் எமது இலக்கை அடைய முடியாது.

இன்று ஒருவன் பலம் பொருந் தியவன் போலத்தோற்றப்படலாம். ஆனால் காலச்சக்கரத்தின் கரங்கள் மிகமிகப் பலமானது. காலம் மாற, காலம்கனிய கனகாலம் ஆகாது.



விடயங்களை அமைதியாக வும் உணர்வுபூர்வமாகவும் அணுக பழகிக்கொள்ளும் பயிற்சி பயனுடை யதாக அமையும். அந்தப்பயிற்சி அமை தியான முன்னோக்கிய பயணத்தி ற்கு உறுதுணையாக அமையும்.

எமது பயணத்தின் பொழுது எம்மீது கல்லெறிகள் விழலாம். அவற்றை எடுத்து திருப்பி எறிந்து அந்தக் கற்களை வீணடிப்பது புத் திசாதுரியம் ஆகாது. அந்தக் கற் களைக் கொண்டே எமது பாதையை செப்பனிட முயலுவோம். எமது பாதைக்கு உரம் சேர்ப்போம்.

எந்தப்பாதையில் பயணிப்பது என்றதடுமாற்றம்தேவை அற்றது. மன உறுதியும் மனச்சாட்சியுடன் கூடிய உழைப்பும் இருக்குமாயின் நாம் பய ணித்துக்கொண்டிருக்கும் பாதையே சரியான பாதையாக அமையும்.

எமது பயணத்தின் பொழுது காலம் பலவற்றை எமக்கு கற்றுத் தரும். நாம் எப்பொழுதும் கற்பதை நிறுத்தி விடமுடியாது. அதுவே எமது முன்னேற்றத்தின் உயிர் மூச்சு. இது புத்தகக் கல்வி என்று அர்த்தப்படாது. ஏமாற்றங்கள், இழப்புகள், வறுமை, ஏன் பசிகூட எமக்கு பலவற்றை கற்றுத்தரும். எம்மை பக்குவப்படுத்தும்.

எமது இலக்கை அடைய அதிக காலம் எடுப்பது தோல்வி என்று ஆகி விடாது. எமது உண்மையான நோக் கங்களை நோக்கி அமைதியாக எடுத்துவைக்கும் ஒவ்வொரு காற் தடங்களும் வெற்றிக்கான பதிவு களே. வாழ்க்கை குறுகியது. இந்தக் குறுகிய வெளியில் பகை வளர்த்து நேரத்தை வீணடிப்பது வெற்றிக்கு இடையூறாக அமையும்.

எம்மிடம் இருந்தவற்றை நாம் இழந்து விடும் பொழுது வேத னைப்படுகிறோம். கோபப்படு கிறோம். மனவிரக்தி அடைந்து தோல்வி மனோநிலைக்கு ஆட்ப டுகிறோம். ஆனால் அவை எம் மிடம் இருந்த காலத்தில் அவ ற்றை எண்ணி மகிழ்ச்சி அடைந்திருக் கிறோமா? என்று எண்ணிப்பார்ப் போமாக இருந் தால் அந்தக் காலத்திலே அவை சம்பந்தமாக நாம் அக்கறை அற்றவர்களாக இருந்திருப்பது புலப்படும்.

எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சி அடையத் தெரியாமல் அவற்றை இழக்கும் பொழுது மட்டும் வேதனைப்ப டும் மன நிலை விசித்திரமா னது. எம்மிடம் இருப்பவற்றை எண்ணி மகிழ்ச்சியும் திருப்தியும் அடையும்மனநிலையை வளர்துக் கொள்ளும் பயிற்சி வெற்றிக்கு வித்திடும்.

நாம் உணர்ச்சிவசப்பட்ட தாலோ தவறாக வழிநடத்தப் பட்டதாலோ எடுத்த தவறான முடிவுகளை சரிசெய்துகொள்வது தோல்வி என்று அர்த்தப்படாது. சிலரை தவறாக புரிந்துகொண்டு பிரிந்து விடுகிறோம். வேறு சில தவறானவர்களை சரியாகப் புரி ந்து கொள்ளாததால் அவர்களு டன் நெருங்கி அதன் காரணமாக நொந்து போகிறோம். இவை காலம் எமக்கு கற்றுக்கொடுக்கும் பாடங்கள். எமது துயர்களை நாமே எமது கைகளால் துடைத்து மற்றவர்களுக்கும் கைகொடுத்து நம்பிக்கை ஒளியில் வெற்றி இலக்கை நோக்கி பயணித்து ஆக வேண்டி இருக்கிறது. எமது அறிவு மங்கிவிடவில்லை. சிந்தனை ஓட்டங்கள் சிதறிவிடவில்லை. மனதினதும் உடலினதும் பலம் அற்றுப்போகவில்லை. அதற்காக சந்தோசப்படுவோம்.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org